KALKI 31.8.2003
ரூ.6.00

கல்கி



மாண்புமிகு
தல்வருக்கு…!
ல்லக்கண்ணு
டான கடிதம்



இயக்குனரானார் சினேகா!

கொத்துக் கொத்தாக முடி கொட்டுவதை தவிர்க்க இயலுமா?



நிச்சயமாக இயலும்!
வழங்குகிறோம்
புதிய, மேம்படுத்தப்பட்ட

ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக்

அழகான கேசம் ஆரோக்கியம் பேசும்.

ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக் இந்தியாவின் பாரம்பரியமிக்க சித்த மருத்துவ முறையில் கிடைத்தற்கரிய மூலிகைகளின் பசுமையான சாறு மற்றும் இயற்கை மூலப்பொருட்கள் கொண்டு மிகவும் பிரத்யோகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஹேர் ப்ளஸ் ஹேர் டானிக் எவ்வளவு தீவிரமாக மற்றும் கொத்துக் கொத்தாக முடி கொட்டினாலும், பதினைந்தே நாட்களில் தடுத்து நிறுத்தும் ஆற்றல் கொண்டது. மேலும் பூச்சி வெட்டு, பொடுகு, இளநரை, செம்பட்டை, தலை அரிப்பு, தலையில் செதில், செதிலாக வெள்ளை நிறத்தில் தோன்றுதல், தீவிரமான நோய்த் தொற்றுதல்களுக்குப் பிறகு ஏற்படும் கேச இழப்பு, பெண்களுக்கு பிரசவதத்திற்குப் பிறகு ஏற்படும் கேச இழப்பு முதலியவற்றைப் போக்கி அடர்த்தியான கருங்கூந்தல் செழித்து வளரச் செய்கின்றது. சித்த வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. எந்த விதமான பக்க விளைவுகளும் இல்லாதது.

கீழ்க்கண்ட இடங்களில் மட்டும் கிடைக்கும்:

சென்னை: சுபா மெடிக்கல்ஸ், 49 பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம் ☎ 24843478, லோகு பார்மஸி, முனுசாமி சாலை, கே.கே.நகர் ☎ 24747385 சூப்பர் மெடிக்கல்ஸ், திருவான்மியூர் ☎ 24451944, சேதுராம் & கோ மெடிக்கல் 3வது கிராஸ் ரோடு, R.A.புரம் ☎ 24334160, அடைக்கப்பா மெடிக்கல்ஸ், வெங்கடேச அக்ரஹாரம், மயிலாப்பூர் ☎ 24933293, ஸ்ரீ காயத்திரி மெடிக்கல்ஸ், 153, டிரங்க் ரோடு, பூந்தமல்லி ☎ 26274450, சரவணா மெடிக்கல்ஸ், 21 முத்துரங்க முதலிதெரு மேற்கு தாம்பரம், ☎ 22266813, வெங்கடேஸ்வரா மெடிக்கல்ஸ், 288, G.S.T.ரோடு, குரோம்பேட்டை, ☎ 22211719, சாம் மெடிக்கல்ஸ், 28, தீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, ☎ 24331845, சரவணா மெடிக்கல்ஸ், 71 ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம் ☎ 24727660, ஸ்ரீ குமரன் மெடிக்கல்ஸ், 1 துரைசாமி ரோடு, வடபழனி ☎ 24724794, S.S.கெமிஸ்ட், (ரவுண்டானா), அண்ணாநகர். ☎ 26268010, ராசி மெடிக்கல்ஸ், P.H.ரோடு, அமிஞ்சிகரை. ☎ 26461762, பழனி மெடிக்கல்ஸ், C.T.ஹை ரோடு, அம்பத்தூர். எவரெஸ்ட் மெடிக்கல்ஸ், ராஜாராம் மேத்தா நகர். ☎ 23743704, முத்து மெடிக்கல்ஸ், ரவாக் கார்டன், அரும்பாக்கம். ☎ 24750910, ஸ்ரீ லெட்சுமி மெடிக்கல்ஸ், எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை. ☎24331854, ஆன்டி அங்கிள் மெடிக்கல்ஸ், அடையார், ☎ 24413758, ஸ்ரீராம் மெடிக்கல்ஸ், பிள்ளையார் கோவில் தெரு, ஜாபர்கான் பேட். ☎ 24745792, ஸ்மித் ஸ்டாக்கிஸ் & கோ, NSC போஸ் ரோடு. ☎ 25383171, **செங்கல்பட்டு:** ஷிஃபா மெடிக்கல்ஸ் ☎ 2423800, **திண்டிவனம்:** செந்தில் மருந்தகம் தேரு வீதி, **மதுரை:** தனலெட்சுமிஅன்கோ வடக்குச் சித்திரை வீதி ☎ 2631582 **திண்டுக்கல்:** K.M.மெடிக்கல் ஸ்டோர்ஸ், சன்னதி தெரு. ☎ 2433104, **தேவகோட்டை:** செல்வா மெடிக்கல்ஸ் ☎ 2373555, **சிவகங்கை:** ஸ்ரீ பாலாஜி மெடிக்கல்ஸ் ☎ 244934, **பரமக்குடி:** ஜனதா மெடிக்கல்ஸ் மார்ட் ☎ 225364, **இராமநாதபுரம்:** நியூபாம்பே மெடிக்கல்ஸ், தேவிப்பட்டினம் ரோடு ☎ 224529, **அருப்புக்கோட்டை:** K.M.மெடிக்கல் ஸ்டோர், ☎ 2220612, உசிலம்பட்டி: ஸ்ரீ சரவணா மெடிக்கல்ஸ் ☎ 251073, **தேனி:** ராஜாராம் மெடிக்கல்ஸ், பஸ் ஸ்டாண்ட் ☎ 253401, **சேலம்:** சாம்ரோக பார்மஸி ☎ 264816 / ரோக பார்மஸி, முதல் அக்ரஹாரம் **தர்மபுரி:** விஜயலெட்சுமி மெடிக்கல்ஸ், ஆறுமுக ஆசாரி தெரு ☎ 260222, ஓசூர்: மூர்த்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், M.G.ரோடு, **நாகர்கோவில்:** தேவ் மெடிக்கல்ஸ் ☎ 2232096, **திருநெல்வேலி:** செயின்ட் மேரீஸ் மெடிக்கல் ஸ்டோர்ஸ் ☎ 2339044 **தூத்துக்குடி:** சரவணா மெடிக்கல்ஸ், டெலிகிராஃப் ஆபிஸ் ரோடு ☎ 2326340, **விருதுநகர்:** சண்முகம் மெடிக்கல் ஹால் ☎ 2346072, **கோவில்பட்டி:** சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ் / TMB பேங்க் அருகில், **ராஜபாளையம்:** V.S.திருப்பதி ராஜா சன் மெடிக்கல்ஸ், ☎ 2522289, குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ் ☎ 2522108, **விழுப்புரம்:** ஸ்டார் மெடிக்கல் ஏஜென்ஸிஸ், திரு.வி.க. ரோடு, ☎ 222758, **நெய்வேலி:** ஜெயா மெடிக்கல் ஸ்டோர்ஸ், மெயின் பஜார், **கடலூர்:** மஹாராஜா மெடிக்கல்ஸ், பஸ் ஸ்டாண்ட் அருகில், **கள்ளக்குறிச்சி:** ரங்கா மெடிக்கல்ஸ் ☎ 222561, **திருப்பத்தூர்:** (வேலூர்) மதுரா மெடிக்கல்ஸ் ☎ 220699, **திருவண்ணாமலை:** மஹாராஜா மெடிக்கல்ஸ் ☎ 223704, **காஞ்சிபுரம்:** தமிழ்நாடு மெடிக்கல்ஸ் ☎ 2222285, **வேலூர்:** ராஜன் மெடிக்கல்ஸ் ஆபீசர்ஸ் லைன் ☎ 2225368, **திருச்சி:** வாசன் மெடிக்கல் ஹால் ☎ 2704213/2412966, பாவா மெடிக்கல்ஸ், சத்திரம் பஸ்ஸ்டாண்ட் **உடுமலைப்பேட்டை:** ஜும் ஜும் மெடிக்கல்ஸ் ☎ 224563, **பொள்ளாச்சி:** ராமனாதன் மெடிக்கல்ஸ் ☎ 2227161 **பழனி:** ஜெயா மெடிக்கல் மார்ட் ☎ 242289, **திருப்பூர்:** பாவா மெடிக்கல் மார்ட் ☎ 2240610, சீதா மெடிக்கல் ஸ்டோர்ஸ், முனிசிபல் ஆபிஸ் ரோடு, ☎ 2241311 ஈரோடு: ஸ்ரீ கண்ணன் மெடிக்கல் ஏஜென்ஸி, 21, அண்ணாதி தெரு. **கோயம்புத்தூர்:** சுந்தரம் பார்மஸி, சாய்பாபா காலனி ☎ 2445830, ஸ்ரீ கண்ணன் டிபார்மெண்டல் ஸ்டோர், ராஜாஜி தெரு. ☎ 2231596, காசிநாத் கோ, டவுன் ஹால், **கரூர்:** பாவா மெடிக்கல்ஸ் ☎ 2240721, அழகு பார்மஸியின் அனைத்துக் கிளைகள் **காரைக்குடி:** ரோஜா மெடிக்கல்ஸ் ☎ 2438471, புதுக்கோட்டை: விநாயகா பார்மஸி, பேருந்து நிலையம் எதிரில், **தஞ்சாவூர்:** வாசன் மெடிக்கல் சென்டர் ☎ 2370096, **கும்பகோணம்:** தி பாப்புலர் டிரக் ஹவுஸ் தலைமை அஞ்சல் நிலையம் தெரு. **திருவாரூர்:** சரோ மெடிக்கல்ஸ் ☎ 2540525, **மயிலாடுதுறை:** தரணி டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ☎ 2222968, **நாகப்பட்டினம்:** நாகை மெடிக்கல் ஸ்டோர்ஸ் ☎ 242034 **பட்டுக்கோட்டை:** ஹமீதியா மெடிக்கல்ஸ், 252504, **மன்னார்குடி:** மீனா மெடிக்கல்ஸ், 222665, **அறந்தாங்கி:** தமிழ்நாடு மெடிக்கல், 222082

உள்ளே...



"கேமராமேனிடமும் கதை சொல்லணும்"

56



டெஸ்மாவுக்குத் தப்பியவர்கள்...!

72



உலகம் முழுதும் கல்யாணி!

24



கல்கி

31.8.2003

ரூ.50,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 4

எண்களே விடைகள்!

1. பாண்டி கடற்கரை காந்தி சிலையைச் சுற்றி சுமார் எட்டு மீட்டர் உயரத்தில் வானைப்பார்த்தபடி உள்ள தூண்களின் எண்ணிக்கை ....
2. ....நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட மண், ஆரோவில் மாத்ரி மந்திரில் உள்ளது.
3. சென்னையிலிருந்து பாண்டிச்சேரி .... கிலோ மீட்டர்கள்
4. பாண்டிச்சேரி முனிசிபாலிடி...............ம் ஆண்டு துவக்கப்பட்டது
5. ஈஸ்வரன் தர்மராஜா கோவில் தெருவில் உள்ள கவிஞர் பாரதி அருங்காட்சியகத்தின் கதவிலக்கம்................
6. பாண்டிச்சேரி பின்கோடின் முதல் மூன்று இலக்கங்கள் ....

பாண்டிச்சேரி வாசகர்களே! கடந்த மூன்று வாரக் கல்கி இதழ்களில் இடம் பெற்ற கூப்பன்களைப் பூர்த்தி செய்து வைத்துக் கொண்டிருக் கிறீர்களா...?

இதோ நான்காம் கூப்பன். இதில் உள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி



வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 7 மற்றும் 14 செப்டெம்பர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் செப்டெம்பர் 20ம் தேதிக்குள் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக வானதி பதிப்பகம் வழங்கும் ரூபாய் பத்தாயிரம் பெறுமானமுள்ள புத்தகங்கள் நூறு பேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

கோவை

வாசகர்களே....

அடுத்த பரிசுப் போட்டி

உங்களுக்குத்தான்.

ஆறு வாரக் கூப்பன்.

ஈஸி கேள்விகள்!

இமாலயப் பரிசுகள்!

அடுத்த இதழ் வரை

வெயிட் பண்ணுங்க!

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

மாண்புமிகு

பாலன் இல்லம்,
சென்னை - 600 017.
22.08.03



அனுப்புனர்:

ஆர். நல்லகண்ணு,
தமிழ் மாநிலச் செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

பெறுநர் :

செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள்,
தமிழக முதல்வர் மற்றும் பொதுச் செயலாளர்,
அ.இ.அ.தி.மு.க.,
சென்னை - 600 086.

அன்புடையீர்,

வணக்கம்.

1999ம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும், பின்னர் 2001ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போதும், எங்கள் தோழர்களுடன் குழுவாக வந்து, உங்களைச் சந்தித்து நடப்பு அரசியல் மற்றும் தேர்தல் உடன்பாடு, தொகுதிகள் ஒதுக்குதல் ஆகியவற்றைக் குறித்துப் பேசியது இன்னமும் என் நினைவில் பனிச்சென்று இருக்கிறது. அதற்குக் காரணம், பேசும் போது வெளிப்பட்ட உங்களின் தனிமனித ஆளுமை, துணிவு, மற்றும் அறிவாற்றல்தான். இடதுசாரிகள் உங்களுடன் அந்தத் தேர்தலில் கூட்டணி அமைத்ததற்கு இவை காரணமல்ல. ஊழல் குற்றச்சாட்டு உங்கள் மீது இருந்த போதும், அப்போது நாங்கள் உங்களுடன் கூட்டணி சேர முக்கியமான காரணம் இருந்தது. 1998ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பா.ஜ.க. கால் பதிக்க இடம் கொடுத்த நீங்கள், மனம் திருந்தி "அவர்களோடு கூட்டணி சேர்ந்தது தவறு; அந்தத் தவறை மீண்டும் செய்ய மாட்டேன்" என்று மெரீனாவில் மக்கள் முன் உறுதிமொழி அளித்தீர்கள்.


இப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் முடியப் போகின்றன. இந்த இரண்டரை வருடக் காலத்தில் சமூகத்தில் எல்லாத் தரப்பினரும் உங்கள் ஆட்சி முறையால் பாதிக்கப்பட்டு விட்டார்கள். "இடதுசாரி கட்சிகளின் துணையுடன்தான் ஆட்சிக்கு வந்தேன்" என்று நீங்கள் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. ஆனால் நாட்டு மக்களுக்கு அரசியல் உணர்வு ஊட்டுவதிலும், தெளிவான பாதை காட்டுவதிலும், இடதுசாரிகளுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போது நாங்கள் உங்களது ஆட்சியைக் கொண்டு வந்ததாக பழிச் சொல்லுக்கு

நல்லகண்ணு
குமுறல் கடிதம்

முதல்வருக்கு...!

ஆளாகி நிற்கிறோம். 1999ம் ஆண்டு தி.மு.க.வோடு எங்களுக்கு இருந்த தொடர்பு விடுபட, அந்தக் கட்சி பா.ஜ.க.வோடு சேர்ந்ததுதான் காரணமே தவிர, வேறெந்தப் பிரச்னையும் கிடையாது. 1999ல் பா.ஜ.கவை கடுமையாகத் தாக்கிய நீங்கள், இப்போது நடந்து கொள்ளும் முறை, ஒரு தீவிர விஸ்வ ஹிந்து பரிஷத் தொண்டரையே நினைவு படுத்துகிறது. இது தவிர, மத்திய அரசின் எந்தப் பொருளாதாரக் கொள்கைகளைத் தவறென்று சுட்டிக்காட்டினீர்களோ, அதையேதான் நீங்களும் கடைப்பிடிக்கிறீர்கள்.

"மத நல்லிணக்கத்தைப் பேண தமிழகத்தை ஆண்ட அரசர்கள் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, ராணி மங்கம்மாள் ஆட்சி செய்த போது, தஞ்சையை ஆண்ட அரசரும், உடையார் பாளையம் சிற்றரசரும் சிறுபான்மையினரின் வழிப்பாட்டுத் தலங்களைக் கட்ட தடை விதிக்கக் கோரி மடல் எழுதினார்கள். ஆனால் மங்கம்மாள், 'சிலர் சைவம் சாப்பிடவும், சிலர் அசைவம் சாப்பிடவும் எப்படி நாம் அனுமதிக்கிறோமோ, அதைப்போல ஒவ்வொருவரும் தந்தமது வழக்கப்படி, வழிபாடு செய்ய அனுமதிக்க வேண்டும்' என்றார். (ஆதாரம்: க.ப.அறவாணனின் தமிழன் அடிமையானது ஏன்? எவ்வாறு?) இப்படிப் பட்டத் தமிழகத்தில் அண்மைக் காலமாக மத வெறி, சாதி, இன, பாகு பாடு உணர்வுகள் ஆங்காங்கே தோன்றி, நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன. முன்னேற்றத்திற்கு இவை தடைக்கற்களாக இருக்கின்றன. மதச் சார்பின்மை வலிமை பெறவும், சாதி, இன பாகுபாடுகளைக் களையவும் நடவடிக்கை எடுக்கப்படும். சமய சகிப்புத் தன்மையை உருவாக்கி, அனைவரும் அன்புணர்வுடன் இணைந்து வாழும் இனிய சூழல் உருவாக்கப்படவும், மனிதநேயம் அமைத்திடவும் பாடுபடுவோம்" - இந்த வரிகளைப் படிக்கும் போது, இவற்றை எப்போதோ படித்தது போல நினைவு வந்தால் அது ஆச்சர்யமே! 2001ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வைக்கப் பட்ட அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில்தான் இருக்கின்றன இவ்வரிகள். "கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம், பொது சிவில் சட்





டத்துக்கு ஆதரவு, அயோத்தியில் ராமர் கோயில் என்று நீங்கள் பாஜகவின் ஊது குழலான நிலையில் நல்லிணக்கமும், மனித நேயமும், சகிப்புத் தன்மையும் எப்படி வரும்? நல்லிணக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்களான தமிழக மக்களைப் பிளவு படுத்தும் உங்கள் போக்கு மிகவும் ஆபத்தானது. உங்களது இந்த நிலையை இறுதி வரை எதிர்ப்பதே இடது சாரிகளின் நிலை.

சமூகச் சூழலை இப்படி அமைதியில்லாமல் செய்து விட்ட நிலையில், மற்றத் துறைகளிலும் வாக்கு மீறல்களைச் செய்துள்ளீர்கள். 'இலவச மின்சாரம் விவசாயிகளுக்குத் தொடரும்' என்று சொன்னீர்கள். இப்போது அவர்களிடம் மீட்டர் பொருத்தி கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்து வருகிறீர்கள். 'பொது விநியோகத் திட்டத்தைப் பலப்படுத்துவோம்' என்றீர்கள். இப்போது உங்கள் அரசு எடுத்துள்ள நிலையால் ஏகப்பட்ட குளறுபடிகள். கடைசியில் பார்த்தால், ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் என்றால் ரேஷன் பொருட்கள் கிடையாது என்று லட்சக்கணக்கான மக்களுக்குக் கதவை மூடி விட்டீர்கள். இனி வெளி மார்க்கெட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும். வியாபாரிகளின் பாடு கொண்டாட்டம்; மக்கள் பாடு திண்டாட்டம். மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பேருந்து சலுகையை ரத்து செய்து விட்டீர்கள். விசைத் தறி, கைத்தறி நெசவாளர் நலன் பாதுகாக்கப்படும் என்றீர்கள். ஆனால் அவர்கள் ரத்தக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட பதினைந்தாயிரம் சாலை மற்றும் மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பி, அவர்களது குடும்பங்களை நடுத் தெருவில் நிற்க வைத்து விட்டீர்கள். பருவ மழை பொய்த்துப் போய், காவிரியில் நீர் வரத்து இன்றி, தஞ்சைத் தரணி வறட்சிப் பூமியாக மாறிய போது, எந்த நடவடிக்கையும் இல்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிப்பதற்கே போராட வேண்டியதாகி விட்டது. மாறாக, ஆந்திர மாநில முதல்வர் ஐந்நூறு பேர் பட்டினியால் இறந்தார்கள் என்று உண்மையைச் சொல்லி மத்திய அரசிடம் நிதி பெறுகிறார்.

"அரசு ஊழியர்கள் நலம் காக்க ஆக்க பூர்வமான செயல் திட்டங்கள் உருவாக்கப்படும்" என்ற உங்களது தேர்தல் வாக்குறுதியை இன்று அரசு ஊழியர்கள் படித்தால் வயிற்றெரிச்சலுடன் கூடிய சிரிப்புத்தான் வரும். வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இரண்டு லட்சம் ஊழியர்களை டிஸ்மிஸ் செய்து விட்டு, இப்போது வேறு வழியின்றி உச்சநீதி மன்ற உத்தரவை ஏற்றுச் செயல்படுகிறீர்கள்.

"அரசு ஓர் அதிகார பீடம் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் உருவாகாத வண்ணம், மக்களிடம் நெருங்கிய நட்புறவோடு செயல்படும் நிலை உருவாக்கப்படும்; எளிமையும், சிக்கனமும் கடைபிடிக்கப்படும்" - இது உங்கள் வாக்குறுதி. ராணி மேரிக் கல்லூரி விவகாரம், சீரணி அரங்கம் இடிப்பு, கண்ணகி சிலை அகற்றுதல் போன்ற உங்கள் நடவடிக்கைகள் மூலம் அதிகார பீடம், எதேச்சதிகார பீடமாக மாறியதை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இதன் காரணமாக மக்களுக்கு அச்ச உணர்வுதான் உண்டாகியிருக்கிறது. "யாரையும் கலந்தாலோசிக்கத் தேவையில்லை; நான் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்ற போக்கு ஜனநாயக விரோதப் போக்கு.

செவிகைப்ப சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த்தங்கும் உலகு!

ஆளுவோருக்கு விமர்சனங்களைத் தாங்கக் கூடிய பண்பு வேண்டும் என்றார் வள்ளுவர். ஆனால் இங்கு ஜனநாயக அடிப்படையில் குரல் கொடுக்கும், எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், பத்திரிகைகள் மீதும் ஏகப்பட்ட வழக்குகள். உங்களுக்கு இப்போது மக்கள் மீதும் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை; ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையிருப்பதாகத் தெரியவில்லை.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்' என்ற சிலப்பதிகார கருத்தை நமது ஜனாதிபதி கூறியிருக்கிறார். தமிழக மக்கள் உங்கள் செயல் முறைகளைச் சீர்தூக்கிப் பார்த்தே வருகிறார்கள். அந்த வகையில் வாக்குறுதிகளை மீறிச் செயல்படும் உங்களுக்குத் தக்க சமயத்தில், தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள் என்பது நிச்சயம்!

அன்புடன்,
ஆர். நல்லகண்ணு

இயக்குனரானார் சினேகா!

"ஆட்டோகிராப்" படப்பிடிப்பில் கிளாப் போர்டும் கையுமாக ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டராக நடிகை சினேகாவைப் பார்த்ததும் மனசு பொறுக்கவில்லை. "என்னங்க ஆச்சு! நடிக்கப் பிடிக்காமல் இப்படி உதவி இயக்குனராக வந்துட்டீங்களா?" என்றதும் கொஞ்சமும் பதறாமல் பதில் சொன்னார்.

"நாடி நரம்புலே துடிப்பு இருக்கிறவரைக்கும் நடிச்சுக்கிட்டேதான் இருப்பேன்! நாளைக்கு நான் இயக்குனராகணும்னு தலையிலே எழுதியிருக்குன்னு வெச்சுக்கோங்க! அதுக்கு கொஞ்சமாவது அனுபவம் வேண்டாமா? அதான்! கிளாப் போர்டு பத்தி கேட்டுத் தெரிஞ்சுகிட்டேன்!" என்றார்.

"கிளாப் போர்டு பத்தி என்ன தெரிஞ்சுகிட்டீங்க? பிளைவுட்டுலே செஞ்சதான்னா?" என்று கிண்டலடித்ததும் கொதித்தெழுந்த சினேகா, கிளாப் போர்டு பற்றி குட்டிக் குட்டிச் செய்திகளை நம்மிடம் கொட்டினார்.

"ஒரு சினிமாக் கம்பெனி புதுசா ஆரம்பிச்சா, முதல்லே கிளாப் போர்டுதான் செய்வாங்க. ஆபீஸ் பூஜையிலே அதைத்தான் வைப்பாங்க. ஒரு படம் தொடங்க அதுதான் பிள்ளையார் சுழி! சினிமாவிலே நம்ம வசதிக்குத் தகுந்த மாதிரி காட்சிகள், ஷாட்டுகளை முன்னே பின்னே படம் பிடிக்கிறதை பிரேக் டவுன்னு சொல்லுவாங்க! இப்படி எடுக்கிறதை எடிட்டிங்லே வரிசையா இணைக்கணும்னா எந்தக் காட்சியிலே எத்தனையாவது ஷாட்டுன்னு தெரியணும். அதுக்குதான் இந்த கிளாப் போர்டு. இதுல, சீன் நம்பர், ஷாட் நம்பர், டேக் நம்பர்னு மூணுகாலம் இருக்கும். டேக் நம்பர் ரொம்ப முக்கியம். ஒரு காட்சியிலே ஒரு ஷாட் எத்தனை டேக் வாங்கியிருக்கு! அது எதிர்பார்த்த மாதிரி படம் பிடிக்கப்பட்டு ஓகே ஆன டேக்கான்னு, கிளாப் போர்டு பார்த்துதான் எடிட்டர் முடிவுக்கு வருவார். கிளாப் போர்டை ஏன் 'டப்'ன்னு அடிக்கிறோம் தெரியுமா! ஒவ்வொரு ஷாட்டையும் படம் பிடிக்கும்போது, பைலட் டிராக்கிலே பதிவாகிற அந்த கிளாப் சவுண்டை வைச்சுத்தான், அடுத்தடுத்துவர இரண்டு ஷாட்டுகளை மிகத் துல்லியமாக சவுண்ட் சிங்கரனைசேஷனோட இணைக்க முடியும்."

சினேகாவுக்கு மூச்சு வாங்கியதோ இல்லையோ, அவரது தலைக்குப் பின்னால் சின்னதாய் ஒரு ஒளிவட்டம் தெரிந்த மாதிரி நமக்கொரு பிரமை!

"இவ்வளவு தெரிஞ்சு வச்சிருக்கீங்க. நாளைக்கு என்ன, இன்னிக்கே ஏன் நீங்க இயக்குனராகக் கூடாது!" என்று கொஞ்சமா" உசுப்பி விட்டோம்.

"நீங்க மனசு வச்சா 'ஆட்டோகிராப்' படத்து கதாநாயகிங்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி சேரனை ஒரு காட்சியில் இயக்கலாம். சேரன் முடியாதுன்னு முறுக்கினா, கணுக்காலில் வலிக்குதுன்னு இன்னிக்கு பேக்அப் பண்ணிடலாம்னு மிரட்டலமே...!

"நீங்க வேறே! சேரன்கிட்டே இந்த மாதிரி பாச்சாவெல்லாம் பலிக்காது! வேணுமானால் இப்படிப் பண்ணலாம்! ஒரு காட்சியைப் படம் பிடிக்கிறேன்னு சொல்லிப் பார்க்கலாம்" என்றார்.

"ஆஹா! படத்தின் ஒளிப்பதிவாளர் வேலைக்கு ஆப்பு வைத்து விட்டோமே" என்ற சந்தோஷத்தோடு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தோம்!

நேரே சேரனிடம் சென்று காதோரம் சினேகா கிசுகிசுக்க... படத்தின் ஒளிப்



• ரெடி டேக்...



• அப்படியே இருங்க...

பதிவாளர் துவாரக்நாத் "ம்ஹூக்கும்" என்று கொஞ்சம் பொய்க் கோபத்தோடு முகத்தைச் சொடுக்கி ஒதுங்கி விட்டார். ஆச்சர்யம்! சில வினாடிகளுக்கு முன்பு உதவி இயக்குனராக இருந்த சினேகா இப்போது ஒளிப் பதிவாளர்!

கதைப்படி சென்னையில் புது அப்பார்ட்மெண்ட் வாங்கி கொண்டு புதுக் குடித்தனம் வருகிறார் சேரன். அவரும் அவரது சகாக்களும் புது வீட்டிற்குள் ஆவலாய் நுழையும் காட்சியைப் படமாக்க வேண்டிய பணி சினேகாவுக்குத் தரப்படுகிறது. அந்தக் காட்சியின் கேமிராக் கோணங்களைச் சேரனைக் கேட்காமலேயே முடிவு செய்து 'ரெடி டேக்' என்று பலமாய்க் கூவினார்.

"கோணத்தை முடிவு செஞ்சீங்க சரி! காட்சிக்கான ஒளி அமைப்பை முடிவு பண்ணீங்களா?" என்று தற்காலிக சஸ்பெண்டில் இருந்த ஒளிப்பதிவாளர் துவாரக் நாத் கோபமாய்க் கேட்டார்.

"எனக்கு மணிரத்னம் பாதிப்பு இருக்குன்னு காட்டிக்க வேணாமா? ஒரே ஒரு லைட் மட்டும் எரி




ஆக்ஷன்...


நல்லா நடிச்சீங்க...

யட்டும். மத்தப்படி ஜன்னல் இடுக்கு வழியே வரதுதான் இந்த சீனுக்கு லைட்டிங்" என்று ஒப்புக்குச் சப்பாணியாக லைட்டிங் மீட்டரில் ஒளி அளவைப் பரிசோதித்துவிட்டு, கேமராவின் வியூ ஃபைண்டர் வழியாக ஒற்றைக் கண்ணை வைத்துப் பார்த்தார் சினேகா. "ஏம்மா கோணம் பார்த்து, லைட்டிங் பார்த்துட்டே சரி, நான் இந்தக் காட்சியிலே எப்படி நடிக்கணும்ன்னு சொல்லிக் குடுத்துட் டேன்னுவை! ஒளிப்பதிவாளர் கம் டைரக்டர்ன்னு ஆயிடுவே. பாலுமகேந்திரா, பி.சி.எஸ். சந்தோஷ் சிவனுக்கு அப்புறம் சினேகா தான்" என்றார் சேரன்.

இந்த வார்த்தைகளை சீரியஸாக எடுத்துக் கொண்ட சினேகா இயக்குனர் நாற்காலியில் உட்கார்ந்து யோசிக்க, ஒரு வழியாக ஐடியா பளிச்சிட்டது. சேரனுக்கு நடிப்பு சொல்லித் தந்த சினேகா, "எங்க ஒரு ரிகர்சல் பாத்திடலாம்" என்றதும் சேரன் வேறு வழியில்லாமல் ஒரு வழிக்கு வந்தார். "ரெடி, ஸ்டார்ட் கேமிரா! ஆக்ஷன்!" என்று சினேகா உத்திரவு பிறப்பிக்க, அந்தக் காட்சி படமானது... காட்சி முடிந்ததும் "குட்! நல்லா நடிச்சீங்க, உங்களுக்கு எதிர்காலம் இருக்கு" என்று சினேகா சேரனைப் பாராட்ட, நாம் வாய் பிளந்து நின்றோம்.

பின்குறிப்பு: சினேகா படமாக்கிய காட்சியை 'பிலிம் ரோலுக்குக் கேடு' என்று படத்தின் எடிட்டர் வெட்டி விட்டதாகத் தகவல். அடடா, ஒரு புதுப் படைப்பாளியை வளர விட மாட்டீங்களே!


— ஜெய்

படங்கள் : டிஜி சண்முகம்

அட்டைப்படம் : சங்கர் சத்தியமூர்த்தி

ஸ்வர்ணாலயா ஜீவல்லரி

இனிய திறப்பு விழா



இதுவரை பசுல்லா ரோடு, தி.நகரில்
வெற்றிகரமாக இயங்கி வந்த
உங்கள் அபிமானத்திற்குரிய

ஸ்வர்ணாலயா ஜீவல்லரி

31 - 8 - 2003, ஞாயிற்றுக்கிழமை
(விநாயக சதுர்த்தியன்று)
உங்களது அனைவரது
ஆசிர்வாதத்துடன்
பெரிய ஷோருமாக உருவெடுத்து
பனகல் பார்க் சமீபம்,
5, வெங்கட்நாராயணாரோடு,
தி.நகர் முகவரியில்
திறக்கப்படுகிறது.

திறப்பு விழாவை முன்னிட்டு
31 - 8 - 2003 லிருந்து
6 - 9 - 2003 வரை
அதிரடி **விசேஷ**
சலுகை விற்பனையும்
ஸ்பெஷல் பரிசுப்பொருள்களும்
உண்டு.

அனைவரும் வருக...



SWARNALAYA
Jewellery

New No. 5, Venkatnarayana Road,
(Opp to T.Nagar Club) T.Nagar,
Chennai - 600 017.
Tel : 52125353, 52125454. Fax : 5212474
e-mail : asukumaran@eth.net
www.swarnalayajewellery.com

JEWELLERY CHIT SCHEMES

with choice of gifts


Instalment	For 15 months	Bonus	Maturity Value	Gifts
Rs. 250	Rs. 3750	Rs. 260	Rs. 4010	4 piece kitchen set (or) Travel bag (or) C.B. Vessel
Rs. 500	Rs. 7500	Rs. 550	Rs. 8050	Idly cooker + Dosai pan (or) C.B. Vessel (or) Hot Pack
Rs. 1000	Rs. 15,000	Rs. 1100	Rs. 16,100	5 Litre cooker (or) Dinner set

50% off on 1st Instalment if you join from 31 - 8 - 2003 to 6 - 9 - 2003

Yes. Now, we are near the Bazaar,
close to **Panagal Park,**
but still peaceful without traffic congestion


Large Showroom, Larger Variety *and* **Largest Reception**
waiting for you,...

Avail all inaugural offers, discounts and gifts from 31 - 8 - 2003 to 6 - 9 - 2003



SWARNALAYA
Jewellery

New No. 5, Venkatnarayana Road
(Opp to T.Nagar Club) T.Nagar, Chennai - 600 017
Tel : 52125353, 52125454. Fax : 52124747
e-mail : asukumaran@eth.net
www.swarnalayajewellery.com



தீர்மானம் தோற்றது; வாதங்கள் வென்றன!

"எதிர்க் கட்சிகள் எங்களை எவ்வாறு தட்டிக் கேட்க முடியும்? நாங்கள் மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டதாகக் கூற இவர்கள் யார்? எங்கள் சாதனைகள் எதுவுமே கண்களில் படவில்லையா...?" என்று கோபப்படுகிறார் பிரதமர்!

ஜனநாயக ரீதியான நடைமுறைகளை உதாசீனப்படுத்துகிற இந்த மனப்பான்மை நமது தலைவர்களிடையே அதிகமாகி வருகிறது.

எதிர்க் கட்சியினரும் மக்கள் பிரதிநிதிகள்தான். மக்களால் தேர்வு செய்யப்பட்டதால்தான் அவர்கள் நாடாளுமன்றத்துக்குள்ளே நுழைந்திருக்கிறார்கள். தோல்வியுறும் என்று தெரிந்தும், ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குச் சரியான விளக்கமும் கொடுத்திருக்கிறார் சோனியா. "இந்தத் தீர்மானத்தில் வெற்றி பெறுவது முக்கியம் இல்லை. முக்கியமான விஷயங்கள் குறித்து மக்களின் சிந்தனையைக் கவர்ந்து, தூண்டிவிட வேண்டியிருக்கிறது" என்பது சோனியாவின் விளக்கம்.




கல்கி



2003 ஆகஸ்ட் 31
சுபானு ஆவணி 14
மலர் : 62
இதழ் : 5

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சோனியா பட்டியலிட்ட ஒன்பது விஷயங்களுமே முக்கியமான பிரச்னைகள். தேசிய ஜனநாயக முன்னணி அரசு தீர்க்கத் தவறிய, அல்லது புதிதாக உண்டு பண்ணிய ஒன்பது சிக்கல்கள். நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவை அவை. பாதுகாப்பு, அயலுறவு, பசிப்பிணி, பொருளாதாரச் சீரழிவு, பெருகும் வேலையின்மைப் பிரச்னை போன்ற - அரசியல் கண்ணோட்டத்துக்கு அப்பாற்பட்ட சிக்கல்கள். நாடாளுமன்றக் குழுக்களின் அறிக்கைகள், தணிக்கைக் குழுவின் ஆய்வறிக்கைகள் போன்றவற்றில் கிடைத்த புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டே, சோனியாவும் எதிர்க்கட்சியினரும் கேள்விகளையும் குற்றச்சாட்டு களையும் தொகுத்தனர்.


சோனியாவின் உரையில் தனிநபர் தாக்குதல்கள் இல்லாமல் இல்லை. ஆனால், அவர் ஆதாரபூர்வமாக வாதங்களை முன் வைத்தார். பிரதமரோ, எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டுகளை ஏற்கவுமில்லை; ஆதாரபூர்வமாக மறுக்கவும் இல்லை.

பிரதமர், தனி நபர் தாக்குதலில் அதிகம் ஈடுபடவில்லை, ஆனால் பிற பேச்சாளர்கள் அவரை முன்னுதாரணமாகக் கொள்ளாமல், சகட்டு மேனிக்குத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியுள்ளனர்.

இந்த இரண்டு நாள் வார்த்தைப் போர் நடத்தியதால் நாட்டுக்கு என்ன நன்மை விளைந்தது என்று பார்த்தால், ஏதுமில்லை என்றுதான் முதலில் தோன்றும்.

ஆனால், சற்று ஆழ்ந்து சிந்தித்தால், காங்கிரஸ் தலைவரின் குற்றச்சாட்டுகள் நியாயமானவை என்பதை நாம் உணர முடியும்.

காஷ்மீர் எல்லையில் கொலைகள் மிக அதிகரித்துவிட்டன.



கார்கில் யுத்தத்தின்போது, சவப்பெட்டி வாங்கியது உள்பட, பல ஊழல்கள் நடைபெற்றன என்ற குற்றச்சாட்டை மறுக்கும் பாதுகாப்பு அமைச்சர், தமது தரப்பு ஆதாரங்களைத் தர இயலவில்லை.

அத்வானி, ஜோஷி, முதலானோரின் பேரில், பாபர் மசூதியைத் தகர்க்கச் சதி செய்ததாக சி.பி.ஐ. பதிவு செய்த குற்றப் பத்திரிகை, நம்பும்படியான விளக்கமின்றி வாபஸ் பெறப்பட்டிருக்கிறது.

பிரதமரின் சீன விஜயத்துக்குப் பிறகும், அந்நாட்டுடனான நல்லுறவுகள் பலப் படுவதற்குப் பதில் பாதிக்கப்பட்டுவிட்டன.

பல மாநிலங்களில் பட்டினிச் சாவுகள் நிகழ்ந்துள்ளன.

வேலையில்லாப் பிரச்னையைச் சமாளிக்க, போதுமான அளவு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை.

ஹிந்துத்வா என்ற பெயரில், நாட்டை மதவாத சக்திகளிடம் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறது பி.ஜே.பி.

சோனியாவும் பிற எதிர்க் கட்சியினரும் பட்டியலிட்ட இக் குற்றச்சாட்டுகளை விவாதிக்கும்போது நடத்தப்பட்ட தனி நபர் தாக்குதல்களை மக்கள் மறந்துவிட வேண்டும்.

தனிநபர் தாக்குதலிலும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலும், ஜெயித்தது யார் என்பது முக்கியமில்லை.


எதிர்க் கட்சிகள் பட்டியலிட்ட நியாயமான குற்றச்சாட்டுகளை ஆட்சியில் உள்ளோரால் ஆதாரபூர்வமாக மறுக்க முடியவில்லை என்பதை மட்டும் மறவாமல் நினைவில் கொண்டு தேர்தல்களை எதிர் கொள்ள வேண்டும்.

VINAYAKA CHATHURTHI SPECIAL

கந்தர்வன்

குரலிலே தெரியும்

எந்தத் திக்கோ எந்தத் தேசமோ
மொழி தெரியாமலே
அது ஆண் பெயரா பெண் பெயரா என
புரிந்து விடும்
எந்தப்பாலைவனமோ எந்தக் கானகமோ
முகம் தெரியாமலே
அது ஆண் குரலா பெண் குரலா என
அறிந்து விடலாம்
எந்த பங்களாவோ
எந்தக் குடிசையோ
உணவுத் தட்டின் முன்
முதலில் அமர்ந்தது
ஆண் தானென்றும்
கடைசியாய் அமர்ந்தது
பெண் தானென்றும்
அனுமானிக்கலாம்
ஆண் குழந்தையோ
பெண் குழந்தையோ சொல்வது
அப்பா தினமும் ஆபீஸ் போகிறார்
அம்மா தினமும் ஆபீஸுக்கு ஓடுகிறாள்.
என்ன சட்டங்களோ! என்ன கோஷங்களோ!
இப்போதும் கல்யாண வீட்டில்
நடையிலே தெரியும் பெண்ணைப் பெற்றானென்று
குரலிலே தெரியும் பையனைப் பெற்றானென்று.



புக் பேங்க்



பௌதிகம் என்பது ஒரு புதுக்கவிதை - வ. மாசிலாமணி

உலக விஞ்ஞானிகள் சிலரின் வாழ்க்கை, கண்டுபிடிப்புகளின் தொகுப்பு. (இந்திய, தமிழக விஞ்ஞானிகளை எவருக்கும் தெரியவில்லை!)

திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.50/-

பரத நாட்டியத்தின் வரலாறு - எஸ். லீலா

கிரமம், பேதம், திரியங்கம். அபிநயம் என்று நடனக் கலையை அங்கம் அங்கமாய் விளக்கும் நூல்.

மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.40/-

10 நிமிடங்களில் மகரிஷியின் யோகாசனம் - கு. கிருஷ்ணன்

'மனித வாழ்வின் துயரம் யாவுமே மனிதனால் வந்த நோயடா' என்றார் கவியரசு. மனம் அடங்கித் தெளிவானால் வாழ்வு வளமாய் சுகமாய் அமையும். கேட்க என்னவோ எளிதாகத்தான் இருக்கிறது. செயல்படுத்துவது தான் மிகமிகக் கடினமாக இருக்கிறது. யோகமும் ஆழ்நிலை தியானமும் அதைச் சாதிக்கத் துணை புரியும் என்று மகரிஷியின் யோக முறைகளைக் கூறும் நூல். யோக முறைகளில் நம்பிக்கையும் முயற்சியும் பொறுமையும், நேரமும் உள்ளவர்களுக்கு உதவும்.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.60/-

- விஷ்வக்

இருவர் - ஆர். வெங்கடேஷ்

ஒரு சரித்திர நாவல் நிச்சயம் சமூக நாவலின் சாயலைக் கொண்டிருக்க முடியாது. அதே மாதிரி சமூக நாவலில் பொதுவாக சரித்திர வாசனை இருக்காது. வெங்கடேஷின் 'இருவர்' ஒரு சமூகத்தின் சரித்திரம் என்பதால், முற்றிலும் வேறுவிதமானதொரு வாசிப்பு அனுபவத்தைத் தருகிறது.



வெங்கடேஷின் இந்த நாவல், பத்திரிகை உலகைச் சுற்றி நடக்கிறது. பத்திரிகை ஒன்றின் துணை ஆசிரியராக இருக்கும் கதாநாயகர்கள் இருவரில் ஒருவருக்கு சினிமாவுக்குப் போகும் கனவுகள். வங்கி வேலையை விட்டுவிட்டு, பத்திரிகைப் பணிக்கு வந்துவிடலாமா என்று இன்னொரு கதாநாயகனுக்குக் கனவு.

பொதுவாக மிடில் கிளாஸ் மனிதர்களின் கனவுக்குப் பெரிய அந்தஸ்து ஏற்பட்டுவிடுவதில்லை. பூத்த வேகத்தில் உதிர்ந்துவிடும் பொய்க் கனவுகளோடு வாழ்க்கை ஓடிக் கொண்டிருப்பது தான் யதார்த்தம். அப்படிப் பார்த்தால் இருவரின் இந்த இரண்டு கதாநாயகர்களும், மிக வேகமாகப் புறப்பட்டு எங்கும் போகாமலேயே, மிக நீண்ட பயணம் மேற்கொண்டு, புறப்பட்ட இடத்திலேயே பூரண திருப்தி காணுகிற கதை என்று ஒரு வரியிலும் சொல்லலாம்.

மாறாக, தமிழ் வார இதழ் சூழலையும் அதில் சிக்கிக் கொள்ளும் எழுத்து தாகமெடுத்த அப்பாவிப் பத்திரிகையாளர்களின் நிலைமையையும் மிக அனுதாபத்தோடு கவனித்துப் பதிவு செய்திருக்கும், ஒரு துறை சார்ந்த படப்பிடிப்பு என்றும் சொல்லலாம்.

இந்த நாவல் சொல்லும் விஷயங்களைவிட, சொல்லாமல் விடும் விஷயங்கள் மிக அதிகம். சமீபத்திய சரித்திர நிகழ்வுகள் பல, நாவலெங்கும் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மிகச் சுருக்கமாக விவரிக்கப்பட்டு அப்படியே மறக்கப்படுகின்றன. சரித்திரத்துக்கு நமது சமூகம் கொடுக்கும் அங்கீகாரம் அதுவே, என்பதை உணர முடிந்தால் நாவலின் முப்பரிமாணம் புரியும்.

மதிநிலையம், சென்னை - 17. விலை ரூ.45

- பா.ரா.

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பனம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக்கூர்வாய் செங்கால் நாராய்
நீயும் நின் பெடையும் தென்திசை குமரி ஆடி
வடதிசை காவிரியாட எய்குவீராயின்
சத்திமுற்றத்து வாவியுள் சென்று
நனைசுவர் கூரை கனைகுரல் பல்லி
எம் வரவு பார்த்திருக்கும் மனைவியைக் கண்டு
நின் கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை இன்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்தி
காலது கொண்டு மேலற தழீஇ
அலகு திறந்தன்ன பல்லினன் ஆகி
பேழை செய் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனை கண்டனம் என்னுமே."
- சத்திமுற்றப் புலவர்

சத்திமுற்றம், தஞ்சைக்கு அருகில் இருக்கும் கிராமம். சத்திமுற்றத்திலிருந்து பாண்டிய மன்னனிடம் பாடிப் பரிசுகள் பெற, தன் குடும்பத்தைப் பிரிந்து செல்கிறார் புலவர். மதுரையில் தன் நிலையைப் பற்றி வழியில் பார்க்கும் நாரையிடம் சொல்லி தூது அனுப்புகிறார். "நாரையே... செங்கால் நாரையே... பனங்கிழங்கை பிளந்தது போல் பவளக் கூர்வாய் கொண்ட செங்கால் நாரையே.. நீயும் உன் துணையும் தென் திசையிலிருக்கும் குமரியில் குளித்து, வடதிசையில் இருக்கும் காவிரியை நோக்கி பறப்பீர்களாயின், சத்திமுற்றத்தில் இருக்கும் என் வீட்டைக் காண்பீர்கள். கண்டுபிடிப்பது மிக, சுலபம். கூரையற்ற வீடு எதுவோ, அதுவே என் வீடு. அங்கு பல்லிகளின் நல்ல



சகுனத்திற்காகவும், என் வரவுக் காகவும் காத்திருக்கும் என் மனைவியைக் கண்டு... அவளி டம், பாண்டிய மன்னனின் மன்றத்தில் ஆடையின்றி.... வாடைக் காற்றால் உடல் மெலிந்து... கைகளையே போர்வையாக்கி... கால்களைச் சுருட்டிக் கொண்டு... அலகு திறந்து பற்கள் நடுங்கி கூடை யில் இருக்கும் பாம்பைப் போல, உன் கணவன் படுத்திருக் கிறான்... அந்த ஏழையாளனைக் கண்டோம் என்று சொல்வீர் களாக'' என்பது இப்பாடலின் பொருள்.


சத்திமுற்றப் புலவரின் இந்த தனிப் பாடல் மாநகரத்து வீதிகள் தோறும் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.





கிராமத்திலிருந்து நகரத்திற்கும் மாநகரத்திற்கும் இளைஞர்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களின் பெட்டி முழுக்கக் கனவுகள். அந்த கனவுப் பெட்டியைத் திறக்கும் சாவியைத் தொலைத்து விட்டு, மாநகரத்து வீதிகளில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

பஞ்சம் பிழைக்கவும், மேற் கல்விக்காகவும், வேலை தேடியும், புகைவண்டியிலும், பேருந்திலும், லாரியிலும் வந்தடையும் அவர்களை மாநகரம் சோடியம் விளக்குகளின் மஞ்சள் வெளிச்சத்தால் ஆசீர்வதித்து வரவேற்கிறது. மறுநாள் காலை தார் உருக்கும் சூரிய வெளிச்சம் கண்களை கூசச் செய்யும் வரை, மாநகரம் அவர்களுக்கு இனிமையானதாக இருக்கிறது.



நான் சென்னைக்கு வந்த புதிதில் திருவல்லிக்கேணியில் ஓர் ஆண்கள் விடுதியில் தங்கி இருந்தேன். திருவல்லிக்கேணி இத்தகைய மேன்ஷன்களின் தாய்நாடு. இந்தப் பகுதிகளில் புறாக் கூண்டு ஒன்று காலியாக இருந்தாலும், சின்னதாக படுக்கையை விரித்து வாடகைக்கு விட்டுவிடுவார்கள். திருவல்லிக்கேணி ஒரு கலவையான பகுதி. காலைகளில் ஒரு பக்கம் பாரதியை மிதித்த யானையின் வாரிசுகளுடன் இந்துக் கடவுள் ஊர்வலம் போவார். மறுபக்கம் இஸ்லாமியர்கள் மசூதிகளிலிருந்து நடந்து கொண்டிருப்பார்கள். குறுகலான சந்துகள்; வாழை மண்டிகள்; புராதன கட்டடங்கள், திடீர் என்று ஏதோ ஒரு வீட்டிலிருந்து கேட்கும் ஆர்மோனிய சத்தமும், பின் தொடரும் சரிகமபதநிசவும், என கிட்டத்தட்ட ஒரு குட்டிக் கல்கத்தா எனச் சொல்லலாம்.

எங்கள் மேன்ஷன் இருபத்திநான்கு மணி நேரமும் பரபரப்பாக இருக்கும். காலையில் குளியல் அறை முன்பும், கழிவறை முன்பும், பிளாஸ்டிக் வாளிகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். மாநகரம் மனிதர்களை பிளாஸ்டிக் வாளிகளாக நசுக்கி விடுவது இந்தத் தருணத்திலிருந்தே தொடங்கும். அடுத்து கீழே இருக்கும் மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு அவரவர்களின் இயந்திர உலகிற்குக் கிளம்பி விடுவார்கள்.

அதற்குப் பிறகு விழிக்கும் உலகம் வேலையற்றவர்களின் உலகம். இரவு முழுக்கச் சீட்டாடிவிட்டு, விடியலில் படுத்து பகல் பன்னிரண்டு மணி வாக்கில் கண்கள் சிவந்து எழுவார்கள். சீட்டாடுவதற்கென்றே மேன்ஷனில் ஓர் அறை இருந்தது. இருபத்தெட்டாம் எண் அறை. அந்த அறைக்கு யார் வந்தாலும் அது சீட்டாட்ட அறையாக மாறிவிடும் அல்லது மாற்றப்படும். நான்கு பேர் எழுந்து சென்றால், மறுபடி நான்கு பேர் அமர்ந்து விடுவார்கள். வெள்ளைக் காகிதங்களும், செய்தித்தாள்களின் ஓரங்களும் எண்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

ஞாயிறுகளின் காலையில் மேன்ஷனே குளியலறையில் திரண்டுவிடும். வரிசையாக ஆண்கள் குத்துக்காலிட்டு அமர்ந்து, அடுத்த வாரத்திற்கான துணிகளைத் துவைத்து கொண்டிருப்பார்கள். மாநகரம் அவர்களிடமிருந்து உறிஞ்சிய வியர்வைத்துளிகள் சட்டைக் காலரின் வழி கரைந்து கொண்டிருக்கும்.

ஒவ்வொரு மேன்ஷனிலும் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பிரம்மச்சாரி இருப்பார். உடம்பு முழுக்க விபூதிப் பட்டைகளுடன் விடியலில் கண் விழித்து சூரியனைப் பார்த்து தேவாரப் பதிகம் ஓதுவார். எங்கள் மேன்ஷனிலும் அப்படி ஒருவர் இருந்தார். அவரை நாங்கள் குரு என்று அழைப்போம். "ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல குரு?'' என்று கேட்டால் "இருக்கட்டும் தம்பி... கோவில் பிரசாதம் இருக்கு சாப்பிடறீங்களா?" என்பார்.

என் அறையில் உடன் தங்கியிருந்த நண்பன் ஒரு விற்பனைப் பிரதிநிதி. பொம்மைகள் விற்பவன். அலமாரி, கட்டில், மேஜை, என அறைமுழுவதும் அவனது பொம்மைகள். பொம்மைகளின் உலகத்தில் அவன் மாட்டிக் கொண்டது அல்லாமல், என்னையும் மாட்டி வைத்துவிட்டானோ என்று தோன்றும். ஏதாவது எழுதிக்


கொண்டிருக்கையில் நிமிர்ந்து பார்த்தால், ஒரு பொம்மையின் கண்கள் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்.

பொம்மைகளின் தொல்லை தாங்காமல் பகல் முழுக்க நான் அறையில் இருப்பதில்லை. இரவிலும் கனவு முழுக்க பொம்மைகளே வந்து கொண்டிருந்தன. அறை நண்பன் தஞ்சாவூர்க்காரன். மாநகரின் வீதியில் சிக்னலுக்கு காத்திருக்கும் கார்களின் கண்ணாடிக்கு முன்பாக பொம்மைகளை ஆட்டுவான். எப்போதாவது உள்ளே இருக்கும் சில குழந்தைகளின் ஆச்சரியக் கண்களைத் தவிர, அவனது உலகத்தில் வேறு வசீகரங்கள் ஏதுமில்லை. இன்னமும் அவனது கால்கள் காவிரி ஆற்றில் நீந்திக் கொண்டிருக்க, மாநகரத்தில் தலையாட்டிய படி பொம்மை விற்றுக் கொண்டிருக்கிறான்.

எங்கள் மேன்ஷனில் தபால் திலகம் என்று ஒருவர் இருந்தார். தினமும் அவருக்கு பத்து இருபது கடிதங்கள் வரும். இரவு முழுக்க அதற்கு பதில் எழுதிக் கொண்டிருப்பார். குடும்பத்திற்கு, நண்பர்களுக்கு, பேனா நண்பர்களுக்கு என வார்த்தைகளின் வழியே அவர் ஒரு பிரபஞ்சத்தைக் கட்டமைத்துக் கொண்டிருப்பார். அவருக்கு வந்த கடிதங்களை ரகசியமாய்ப் படித்து விட்டு மீண்டும் ஒட்டி வைக்க ஒரு கும்பலே திரிந்து கொண்டிருக்கும்.

அவருக்கே நேர்மாறாக இன்னொருவர் இருந்தார். சினிமாவில் பல இயக்குனர்களிடம் இணை இயக்குனராகப் பணியாற்றி விட்டு, தனியாக முயற்சி செய்துக் கொண்டிருந்தார். மேன்ஷனில் யாரிடமும் பேசமாட்டார். தாகூர் மாதிரி தாடி வைத்திருப்பார். நான் அப்போது இயக்குனர் பாலு மகேந்திராவிடம் உதவி இயக்குநராக வேலை செய்து கொண்டிருந்ததால், சக தொழிலாளி என்ற முறையில் என்னிடம் மட்டும் பேசுவார். ஃபெலினி, குரோசாவா, பெர்க்மன், கீஸ்லோவஸ்கி, தார்க்கோவஸ்க்கி, மக்சன் மக்மல்பஃப் என உலக இயக்குநர்கள் சினிமாவைக் கையாளும் நேர்த்தி குறித்து மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்.

திடீரென்று ஏழு எட்டு நாட்களாக அவரைக் காணவில்லை. பின்பு ஒரு நாள் மொட்டை அடித்து, தாகூர் தாடியை இழந்து வந்தார். குரலை வைத்துத் தான் அவரென்று அறிந்தோம். நான் அவரைப் பார்த்துப் புன்னகையுடன்:



''ரிலீஸான படத்துக்குக் கூட்டம் எப்படி இருக்குனு பார்க்கப் போன நம்ம பட அதிபர் திரும்பியே வரலையே?''

''தியேட்டர் பக்கம் வந்திருந்த நாலே நாலு பேரைப் பார்த்த விரக்தியில் அப்படியே சாமியாராப் போயிட்டாராம்.''

– உ. ராஜாஜி

"என்ன சார் மொட்டை, திருப்பதியா?' என்றேன்.

அவர் கண்கள் கலங்கி: ''அம்மா இறந்துட்டாங்க சார்'' என்றார்.

"அய்யய்யோ எப்ப சார்?"

"அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி."

ஐந்து வருடத்திற்கு முன்பு இறந்த அம்மாவுக்காக இப்போது மொட்டை அடித்துக் கொள்கிறாரா? தயங்கித் தயங்கிக் கேட்டேன். காரணம் சொன்னார். அவர் சென்னைக்கு வந்ததிலிருந்து வீட்டிற்குத் தொடர்பு கொள்ளுவதில்லை. அடிக்கடி அறை மாறும் இவரது முகவரியையும் தெரிவிப்பதில்லை. ஜெயித்துவிட்டுத்தான் ஊருக்குச் செல்வேன் என்று ஒரு சபதம். ஏதோ ஒரு உள்ளுணர்வில் ஊருக்குச் செல்ல, ஐந்து வருடத்திற்கு முன்பே அம்மா இறந்துவிட்ட தகவல் கிடைத்திருக்கிறது. தன் வீட்டிற்குத் தூதுவிட அவர் தலைக்கு மேல் எந்தச் செங்கால் நாரையும் பறக்கவில்லை. மரங்களற்ற மாநகரத்தின் வானத்தின் மேலே காக்கைகள் மட்டுமே பறந்து கொண்டிருக்கின்றன. குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தார். மாநகரம் வெற்றிகளின் பாதையில் உறவுகளை பலிகொடுத்தபடி விரைந்து கொண்டிருந்தது.

சந்திக்கிறேன்

படம்: ஸ்ரீஹரி

உலகம் முழுதும் கல்யாணி!

"பன்னிரண்டு சீரியல்கள், எட்டு சினிமாக்களில் நடிச்சுட்டேன். இருந்தாலும் இப்பதான் நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கேன். ஏன் சொல்லுங்க?" என்று கேள்வி கேட்டார் குழந்தை நட்சத்திரம் கல்யாணி.

என்னைக் கேட்டால்?

"ஏன்னா... இப்பதான் எங்க தாய் மொழியான மலையாளப் படத்துல நடிக்கப் போறேன். தாய்மொழி மலையாளம்னாலும் தமிழ்தான் நல்லா பேசறேன். மலையாளம் குறைச்சுதான். மீரா ஜாஸ்மினுக்குத் தங்கையா நடிக்கிறேன்" என்கிறார்.

இவரது அப்பா சுரேஷ், நேவி பைலட். அம்மா வீணா டான்ஸர். விளம்பரப் படங்களும் எடுக்கிறார்.

"நிறைய விளம்பரப் படங்கள்லயும் நடிச்சிருக்கேன். இப்பத்தான் இன்டர்நேஷனல் விளம்பரம் ஒண்ணு பண்ணியிருக்கேன்."

"இன்டர்நேஷனலா?"

"ஆமா... ஹாங்காங் பேங்க்குக்காக, என்னைத் தேடிப் புடிச்சு ஷூட் பண்ணியிருக்காங்க. நான் உலகம் பூரா தெரிவேனே..." என்று சிரிக்கிறார் இந்தத் துறுதுறு–

'அடையாறு வித்யா மந்திரி'ல் எட்டாவது படித்துக் கொண்டே நடிப்பிலும் தொடரும் கல்யாணி, "நான் நல்லா படிப்பேன்கறதால அங்க பிரச்னை ஏதுமில்லை" என்கிறார்.

ஜெயா டீ.வியில் 'மூவி நம்பர் ஒன்' காம்ப்யர் பண்ணிக் கொண்டிருந்த செந்தில் குமார் சினிமாவுக்குப் பாய்ந்துவிட, இப்போது அந்த இடத்தில் ரஸித்செல்வா! (சின்ன'பூச்சி')

"நாசரேத் பக்கம் வாழையடிதான் ஊர். ப்ளஸ் டூ முடிச்சுட்டு டி.எஃப்.டி. படிச்சேன். அப்புறம் நிறைய சீரியல்கள்ல நடிச்சிருந்தேன். 'வீட்டுக்கு வீடு லூட்டி' தொடர்ல என்னைப் பார்த்துட்டு, ஜெயா டீ.வி. முரளி ராமன் சாரும், புரொடியூஸர் சுபாஷ்கவியும் இதுக்குக் கூப்பிட்டாங்க. எவ்வளவு பெரிய



• சின்ன பூச்சி



• சுகந்தி



• அருணா



• ஜனனி

சான்ஸ். மறுக்க முடியுமா! பெரிய மீசையையும் தோற்றத்தையும் பார்த்துட்டு வீட்ல அம்மா, அப்பாவுக்கே ஆள் அடையாளம் தெரியலைன்னா பார்த்துக்கோங்களேன்" என்று படபடவென்று சிரிக்கிறது வெகுளியான இந்தச் சின்னப் பூச்சி.



• கல்யாணி



• வித்யா

ராஜ் டி.வியில் 'ராகம் சங்கீதம்' நடத்தும் வித்யா, மியூசிக் துறையில் பி.எச்டி. பண்ணிக் கொண்டிருக்கிறார்.

"சின்ன வயசுலயே கர்நாடக சங்கீதம் கத்துக்கிட்டேன். நிறைய சபா கச்சேரியும் பண்ணியிருக்கேன். சென்னைப் பல்கலைக் கழகத்துல எம்.ஏ. மியூசிக் முடிச்சிருக்கேன். இசைதான் எல்லாமேன்னு ஆகிப் போச்சு'' என்ற வித்யா, தமது வளர்ச்சிக்கு கணவர் கலைச்செல்வன்தான் காரணம் என்கிறார். அவர் ஒரு தபேலாக் கலைஞர்.

"இப்ப ஏ.ஆர்.ரஹ்மான் தவிர, எல்லா சினிமா இசையமைப்பாளர் கிட்டேயும் கோரஸ் பாடியிருக்கேன். கூடிய விரைவில் ஒரு படத்துக்குப் பின்னணி பாடப் போறேன்'' என்கிறார் வித்யா.

விஜய் டி.வி.யில் 'இளமைத் திருவிழா' நடத்தும் பொருட்டு இளம் காம்பயர்களை இறக்கி விட்டிருக்கிறார்கள். 'சினிமா காரம் காபி' ஜோடிகளைக் கூட தடாலடியாக மாற்றிவிட்டார்கள். இப்போது அரட்டையடிப்பவர்கள் சுகந்தி, அருணா, ஜனனி. இதில் அருணாவும், ஜனனியும் வைஷ்ணவா கல்லூரியில் 'மக்கள் தொடர்பியல்' படிக்கும் மாணவிகள். 'முதன் முதலா கேமரா முன்னால முகத்தைக் காட்ட இலேசான உதறல்தான். சினிமாவுல நடிக்கறவங்களோட கஷ்டம் புரிஞ்சுது'' என்று ஒரே குரலில் செய்தி வாசிக்கிறார்கள் உடன்பிறவா சகோதரிகள்.

- ஏக்ஜி

தில்லி சிறுதொழில்துறை அமைச்சகம் ஆகஸ்ட் 30ம் தேதி தேசிய தொழில் முனைவோருக்கான விருதை சாரதா ரமணிக்கு வழங்க இருக்கிறது.

எதிர்நீச்சல் போட்டு ஜெயித்தவர்கள், போராடியே வென்றவர்கள் என்று ஒரு பட்டியல் போட்டால், இவருக்கும் அதில் நிச்சயம் ஓர் இடம் உண்டு.

ஐந்தாவது படித்துக் கொண்டிருந்த மகள் ரம்யாவுக்கு கம்ப்யூட்டர் ஒரு பாடமாக இருந்ததால், அவளுக்குச் சொல்லிக் கொடுக்க என்றே தானும் கம்ப்யூட்டர் வகுப்பில் சேர்ந்தார்.

"நம்மால் முடியுமா என்ற பயம். கி போர்டைத் தப்பும் தவறுமாகத் தட்டினால் ஏதாவது ஆகிவிடப் போகிறதே என்ற கவலை. ஒரு நாள் ஷட்டௌன் பண்ணத் தெரியாத போது, பயந்தே போய்விட்டேன்! அப்புறம் டிப்ளமா, அட்வான்ஸ்ட் கோர்ஸ் இன் புரொக்ராமிங் என்று ஒவ்வொன்றாகச் செய்தேன். கணவரின் நம்பிக்கையும், ஒத்துழைப்பும் கிடைத்தன. மாலை ஆறு முதல் எட்டு மணி வரை வகுப்புகளை முடித்துவிட்டு, அரக்கப் பரக்க வீட்டுக்கு வருவேன், குழந்தைகளைக் கவனிக்க!" என்கிறார்.

'படித்து விட்டுச் சும்மா இருப்பதா' என்ற கேள்வி பிறகு எழுந்தது. ஆனால் புரொக்ராமிங் துறையில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. கம்ப்யூட்டர் கல்வி கற்பிக்கிற வேலை கிடைக்கவே, ஏற்றுக் கொண்டார். காலை ஏழு மணியிலிருந்து பிற்பகல் மூன்று மணி வரை வேலை. எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தார். 'முப்பது வயதைத் தாண்டிய நீங்கள், எங்களுடன் எப்படிப் பழகப் போகிறீர்களோ என்று தயங்கினோம்... நீங்க ஜெயிச்சுட்டீங்க!' என்று இளைஞர்கள் பாராட்டினார்கள். சிரவண் சர்மா என்ற கம்பெனி இயக்குநர், 'உங்களால் முடியும் சாரதா. நீங்கள் தனியாக ஒரு நிறுவனம் ஆரம்பித்து, நடத்தக் கூடிய திறன் உங்களிடம் இருக்கிது!' என்ற நம்பிக்கையை விதைத்தார்.

பன்னிரண்டு லட்ச ரூபாய் முதல் போட வேண்டும் என்றபோது, கணவர் 'ஒரு கம்ப்யூட்டர், ஒரு ஜெராக்ஸ் மெஷின் என்று சின்ன அளவிலே ஆரம்பி' என்றார். 'பெரிய அளவில் ஆரம்பித்து, பணம் இல்லாமல் செக் கொடுத்து திரும்புகிற மாதிரி எல்லாம் ஆகிவிடக் கூடாது' என்றார்.

முனைவோர் மேம்பாட்டு செல்லைச் சேர்ந்த டாக்டர் நடராஜன் உதவ முன் வந்தார். டி.ஐ.ஐ.சியில் கடன் பெற எப்படி விண்ணப்பிக்க வேண்டும் என்று விளக்கினார். "பத்து கம்ப்யூட்டர்கள் வாங்க நிதியுதவி செய்தார்கள். சிவராமன் என்ற அதிகாரி வெகு உதவியாக இருந்தார்" என்கிறார் சாரதா ரமணி.



• சாரதா

ஆனால், மார்ச் 96ல் ஆரம்பித்த கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனம், நினைத்த படி நன்றாகச் செயல்பட முடியவில்லை. பேஸிக்கிலிருந்து அட்வான்ஸ்ட் லெவல் வரை 30 - 35 மாணவர்கள் படித்தார்கள். நல்ல ஆசிரியர்களும் கிடைத்தார்கள். அடையாறு தவிர, தி.நகரில் ஒரு சென்டரில் வேறு பங்குதாரராகச் சேர்ந்து

கொண்டதுதான் பிரச்னைக்கு ஆரம்பம். நிறைய கம்ப்யூட்டர் சென்டர்கள் வேறு அங்கங்கே முளைக்கவே,' போராட்டம் தொடங்கியது.

"மேலே மேலே கடன் வாங்க வேண்டி யிருந்தது. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் போச்சு. டெலிபோன் பில்லைக் கட்டக் கூடக் கடன் வாங்க வேண்டிய நிலை! ஆனால் ஊழியர்கள் யாரும் விட்டுவிட்டுப் போய்விடவில்லை. உற்சாகம் தந்தபடியே இருந்தார்கள். இன்னும் ஒரு மாதம் கூடப் பார்ப்போம்; சரிப்பட்டு வரவவில்லை என்றால் இழுத்து மூடிவிடுவோம் என்றார்கள். ஒரு சமயத்தில், பத்தே ரூபாய் வைத்துக்கொண்டு, ஒரு செட் பூரி வாங்கிச் சாப்பிட்டு விட்டு, பசியைத் தணித்துக் கொண்டதும் உண்டு..."



• அருண்சோரியிடம் விருது பெறும் சாரதா

இந்தச் சமயத்தில்தான் ஒரு நண்பர், சான்பிரான்ஸிஸ்கோவில் இருக்கும் ஒரு கம்பெனிக்குச் சில மென்பொருள்கள் செய்து கொடுக்க ஆர்டர் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். "அது 1998 மே மாதம். ஆறு இளம் இஞ்சினியர்களை வைத்துக் கொண்டு வேலைகளை ஆரம்பித்தோம். அடுத்த வருடமே பதிமூன்று இஞ்சினியர்களாக வைத்துக் கொள்ளும்படி ஆர்டர்கள் வந்தன. என் கணவரும் வங்கி மானேஜர் பதவியைத் துறந்துவிட்டு, எங்களுக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டார்."

அந்த வருடம் ஒரு கோடி ரூபாய்க்கு பிஸினஸ் வளர்ந்தது. கட்டட உரிமையாளர் கூட, 'நான் பம்பாயில் இப்படித்தான்மா சிறியதாக ஆரம்பித்தேன். நீங்களும் அப்படியே சின்னதாக ஆரம்பியுங்கள். நிச்சயம் சாதனை செய்வீர்கள்!' என்று வாழ்த்தினார்.

"அவர் வார்த்தை பலித்தது. 2000 - 2001ஆம் ஆண்டுக்கான எலக்ட்ரானிக் மற்றும் ஐ.டி ஏற்றுமதிக் கௌன்சிலின் விருது இந்த ஜூன் மாதம், மத்திய அமைச்சர் அருண்ஷோரியிடமிருந்து வாங்கினேன்!" என்கிறார் சாரதா ரமணி. ஆரம்பித்தபோது ஆறு இஞ்சினியர்கள். இன்றைக்கு எழுபத்தைந்து இஞ்சினியர்கள்!

சாரதா ரமணியின் இன்டர்நேஷனல் கம்ப்யூட்டர், முழுக்க முழுக்க ஏற்றுமதி சார்ந்த சிறுதொழில் நிறுவனம். அதற்கு ISO 9001 முத்திரையும் வாங்கிவிட்டார்! அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா, மலேசியா, பஹ்ரெய்ன் என்று நிறையவே வாடிக்கையாளர்கள்.

மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தரமான நிறுவனம் என்ற பெயரையும் பெற்ற பிறகு, டி.ஐ.ஐ.சி அதிகாரிகள் இதை ஒரு 'முன்மாதிரி நிறுவன'மாக எல்லோருக்கும் காண்பித்துப் பெருமை கொள்ளுகிறார்களாம். "ஐந்து தடவை டி.ஐ.ஐ.சி நிதியுதவி பெற்று, அத்தனையையும் திருப்பிச் செலுத்தியிருக்கிறோம்" என்கிறார் சாரதா ரமணி.

இந்த வெற்றிக்கு என்ன காரணங்கள்?

"1. திறமையான ஊழியர்கள் 2. நல்ல மரபுகள் 3. டீம் ஸ்பிரிட் 4. ஒழுங்கான வழிமுறைகள். இவற்றோடு 'ஒன்றாக வளர்வோம்' என்ற ஆரம்ப காலக் குறிக்கோள். முன்னேறுவதற்கு வயது, அனுபவம், கல்வித்தகுதி, நிதிவசதி எதுவுமே குறுக்கே நிற்பதில்லை என்பதற்கு நானே ஓர் உதாரணம். சாதிக்க வேண்டும் என்ற உந்துதல் உணர்வு மட்டும் இருந்தால் போதும். தடைகள் குறுக்கே நிற்காது!" என்கிறார் சாரதா.

சந்திப்பு: **சாருகேசி**
படம்: **வெங்கடேஷ்**



அவளது கண்கள் இமைக்க மறந்திருந்தன. மூச்சும் பதுங்கிப்பதுங்கியே வந்தது. உடலை மரத்தின் பின்னே ஒடுக்கித் தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். இதென்ன அதிசயம்! இந்த ஜக்கு குரங்குடன் பேசுவதாவது! அதுவும் இத்தனை அன்னியோன்னியமாக. தன்னுடன் பேசுவது மாதிரி. உண்மையிலேயே குரங்குடன் தான் பேசுகிறானா? அல்லது தனக்குள் பேசிக் கொள்கிறானா? யாராவது இப்படி வெட்ட வெளியில் வாய்விட்டு உரக்கத் தனக்குள் பேசுவார்களா? பைத்தியம் தான் பேசும்.

கடவுளே, ஜக்கு ஒரு பைத்தியமா?

'சேச்சே' என்று உடனே அவள் தலையைச் சிலுப்பிக் கொண்டாள். அவன் ஒரு லூசு என்று அவளது வகுப்புப் பையன்கள் சிலர் சொல்ல அவள் கேட்டிருக்கிறாள். அவர்கள் தான் லூசு என்று அவள் நினைத்துக் கொண்டு அவர்கள் பார்க்காதபோது பழிப்புக்காட்டுவாள். அவளுக்கு ஜக்கு ஒரு மேதை. இதில் சந்தேகமே இல்லை. வகுப்பில் ஃபர்ஸ்ட் ரேங்கிலிருந்து ஒரு போதும் கீழே இறங்காதவன். மேலும் பூமிக்கு மேலே இருக்கிற விஷயங்கள் அத்தனையையும் பற்றி அவனுக்கு ஏதாவது தெரிந்திருக்கிறது. பட்டாம்பூச்சிகளிலிருந்து நாய்கள், பூனைகள் வரை அவனுக்குச் சிநேகமாகாத மிருகங்களே இல்லை. ஒரு குரங்கு சிநேகமாவதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

அது இல்லை விஷயம். அவன் குரங்குடன் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தது தான் அவளுக்குக் குழப்பமாக இருந்தது. அன்போடு அழைத்தால் எந்த மிருகமும் அருகே வரும், உட்கார்ந்து பேசும் என்று எப்போதும் ஜக்கு சொல்லுவான். ஆனால் எல்லா மிருகத்துக்கும் எப்படி தமிழ் புரியும்?

இதுதான் அவளுக்குக் குழப்பமாயிருந்தது. மிருகங்களுக்கு ஆங்கிலத்தில் பேசினாலும் புரியும் என்று ஜக்கு சொல்லியிருந்தாலும் அந்த ஒரு விஷயத்தில் மட்டும் குட்டிக்கு நம்பிக்கையே வரவில்லை. அல்லது அவன் சொல்வதில் ஒளிந்திருக்கக் கூடிய ஏதோ ஒரு சூக்ஷ்ம இழை தனக்குப் புரியவில்லை என்று நினைத்தாள்.

எது எப்படியானாலும் ஜக்கு பேசுகிறான். அதுவும் குரங்குடன்! அதிசயமே தான் இது! சந்தேகமே இல்லை. ஆனால் என்ன பேசிக்



மெல்லினம் 10

பா. ராகவன்

கொண்டிக்கிறான் இவன்? தனக்கு ஒன்றுமே புரியவில்லையே? சிவகாமி யார்? நிர்மலா யார்? கேள்விப்பட்ட பெயராகவே இல்லையே?

அவன் வகுப்பில் சிவகாமி என்றோ, நிர்மலா என்றோ யாரும் கிடையாது. அவனது டீச்சர்களில் யாரொருவருக்கும்கூட அந்தப் பெயர் கிடையாது. யார் அவர்கள்? ஜக்குவுக்கு அவர்களை எப்படித் தெரியும்? தன்னிடம் ஏன் இதுவரை அவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கவில்லை? இந்தக் குரங்குக்கு சிவகாமியையும் நிர்மலாவையும் எப்படித் தெரியும்? குரங்குக்கு அவர்களைத் தெரியும் என்பது ஜக்குவுக்கு எப்படித் தெரியும்?

அவனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. இப்போது தான் ஜக்குவின் எதிரே போய் நிற்கலாமா என்று நினைத்தான். அதிர்ஷ்டம் இருந்தால் "வா, வந்து உக்காரு. இந்தக் குரங்கு இங்க எனக்கு ஃப்ரெண்ட் ஆச்சு" என்று தன்னையும் சம்பாஷணையில் சேர்த்துக்கொள்ளக் கூடும். அல்லது சட்டென்று பேச்சைக் கத்தரித்துவிட்டுத் தன்னுடன் எழுந்து வந்து விடவும் கூடும்.

எதற்கும் இன்னும் சற்றுநேரம் நின்று பேச்சைக் கேட்கலாம் என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

"ஏன் பதிலே சொல்லமாட்டேங்கறே? கேக்கறேன் இல்லே? நிர்மலா யாரு? அவளுக்கு என்னென்ன தெரியும்? எங்கப்பாவை அவளுக்கு எவ்ளோ பிடிக்கும்? எங்கப்பாவுக்கு அவளை எவ்ளோ பிடிக்கும்? தெரியுமா உனக்கு? தெரிஞ்சா சொல்லு."

அந்த குரங்கு இப்போது மேலும் நெருங்கி வந்து அவனருகே அமர்ந்து கொண்டது. 'ஹ்ர்ரும்... ர்ரும்" என்று சிநேகமாகிவிட்டது.

"உன்னைப் போய்க் கேக்கறேன் பாரு. நானொரு மட்டி. சரி, இந்த ஊர்ல தானே நீ இருக்கே? சிவகாமி யாரு? அதுவாவது தெரியுமா?"

குரங்கு தலையாட்டியது. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துவிட்டு, கீழே கிடந்த ஒரு காகிதத்தை எடுத்துப் பிய்த்துப் போட்டது.

"வேற என்ன தெரியும் உனக்கு? எது கிடைச்சாலும் பிய்ச்சுப் போடு. சனியன். ஒருவாட்டியாவது பிய்ஞ்சி இருக்கறதை ஒட்ட வெச்சுப் பார்த்திருக்கியா? அதுவும்

சந்தோஷம்தான்'' என்றான் ஜக்கு.

இதைக் கேட்டதும் குட்டிக்குப் புன்னகை உண்டானது. ஜக்கு, ஜக்குதான்! அவனா பைத்தியம்! சேச்சே. வாய்ப்பே இல்லை. எல்லாவற்றிலும் நல்லதை மட்டுமே நினைக்கத் தெரிந்த ஒரு பிறவியாக இருக்கிறான். எப்படி இது சாத்தியம்? ஒட்டவைத்துப் பார்ப்பதில் சந்தோஷம் என்று எப்படி இவனுக்கு நினைக்கத் தோன்றுகிறது?

அவளது பள்ளிக் கூடப் புத்தகம், நோட்டுகள் எதாவது துளி கிழிந்திருப்பதை அவன் பார்த்துவிட்டால் போதும். உடனே எங்கிருந்தாவது ஒரு ஃபெவிகால் ட்யூப் எடுத்து வந்து அழகாகப் பசை தடவி ஒட்டி, காயவைத்து, இந்தா என்பான். சட்டை கிழிந்திருப்பது பிடிக்காது. மரத்தில் ஒரு கிளை உடைந்து தொங்கினால் பிடிக்காது. வாலறுந்து காற்றாடியொன்று தத்திப் பறந்தால்கூட இழுத்துவந்து வால் ஒட்டி ஓரமாக எடுத்து வைக்கிற ஜக்கு.

வினோதம் தான். இப்படியும் தன் வயதுகளில் யாரும் இருக்க முடியுமா என்ன? ஜக்கு ஒரு விசித்திரம் தான் என்று அவள் நினைத்தாள்.

"நீயே சொல்லு. நான் ஏன் அதைப் படிக்கணும்? எனக்கு ஏன் அது புரியணும்?''

தொடர்ந்து குட்டிக்குப் புரியாத விஷயங்களாக ஜக்கு அந்தக் குரங்குடன் பேசிக் கொண்டிருந்தான். அவன் குரங்குடன் பேசுகிற ஆச்சர்யம் சற்று மறைந்து, இப்போது அவன் ஏதோ கவலையுடன் இருக்கிறான் என்பது அவளுக்குப் புரியத் தொடங்கியிருந்தது.

கடவுளே, ஜக்குவுக்கு என்ன அத்தனை பெரிய கவலை இருக்க முடியும்? டீச்சர் ஏதாவது திட்டியிருப்பாளோ? அல்லது வீட்டில்...? அதற்கு வாய்ப்பே இல்லை. யாரும் திட்டும்படியாகவோ, அடிக்கும்படியாகவோ நடந்து கொள்ளவே தெரியாதவனல்லவா அவன்! வேறென்ன கவலை இருக்க முடியும்?

எதைப் படித்தான்? எதனால் இப்படிப் புலம்புகிறான்?

''என்னது? பேசாம மறந்துடணுமா? விளையாடறியா நீ? உங்கப்பா அப்படிப் பண்ணியிருந்தா தெரியும் உனக்கு! பெரிசா சொல்ல வந்துட்டே?''

அவனது இந்த திடீர்க் கோபம் அவளுக்கு மேலும் வியப்பாக இருந்தது. அடடா, குரங்கு ஏதோ பேசியிருக்கிறது. அதற்கல்லவா அவன் பதிலுக்குக் கோபப் படுகிறான்! குரங்கு பேசியதைத் தவற விட்டுவிட்டோமே?

அதுசரி, 'உங்கப்பா அப்படிப் பண்ணியிருந்தா தெரியும் உனக்கு' என்றானே? அப்படியென்றால் ஜக்குவின் அப்பா என்னவாவது பண்ணிவிட்டாரா? என்ன பண்ணியிருப்பார்? அதுவும் இப்படி உட்கார்ந்து வருந்தும் விதமாக?

ஒரு வேளை யாரையாவது கொலை பண்ணியிருப்பாரோ?

'ஐயோ' என்று பயந்துவிட்டாள் குட்டி. கொலை! ஜக்குவின் அப்பாவா? நிஜமாக அப்படி இருக்கமுடியுமா? இல்லாவிட்டால் இவன் ஏன் இப்படி கிடந்து மருக வேண்டும்? யாரைக் கொலை செய்திருப்பார்? அந்த நிர்மலாவையா/ சிவகாமியையா? யார் அவர்கள்? ஜக்குவின் அப்பாவுக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? அப்படிக் கொலை செய்துவிட்டு

> ''நான் பிறந்த வீட்டுக்கும், உங்கம்மா, உங்க தம்பி வீட்டுக்கும் உடனே கிளம்பிப் போகணுமா? எதுக்கு?''
>
> ''குடும்பத்தில் அமைதின்னு என் ராசிக்குப் பலன் போட்டிருக்கு கமலா.''
>
> - உ. ராஜாஜி

யாராவது போலீசுக்குப் பயப்படாமல் இப்படி மகாபலிபுரம் வந்து சுற்றிப் பார்த்து, உட்கார்ந்து புளியோதரை சாப்பிட்டுக் கொண்டிருப்பார்களா?

அவளுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. ஏதாவது செய்து ஜக்குவை சமாதானப் படுத்தி, குரங்கை விடுத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கச் செய்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று நினைத்தாள்!

ஆனால் அவனை மாதிரி ஒரு மேதைக்கே பிரச்னை என்றால், கேவலம் தான் என்ன ஆறுதல் தந்துவிட முடியும்? மேலும் அடியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். 'ஏண்டா என்னவோ மாதிரி இருக்கே' என்று தொடங்கி யார் அந்த சிவகாமி, யார் அந்த நிர்மலா, உங்கப்பா அவர்களை என்ன செய்தார், நீ ஏன் கவலைப்படுகிறாய் என்று வரிசையாக நூல் கோத்துக் கேட்க வேண்டும். ஜக்கு கோபமாகி காயவிட்டு

விடக் கூடும். அல்லது ஒண்ணுமில்லை என்று சொல்லிவிடுவான்.

சமாதானங்கள் இல்லை. தீர்வு வேண்டும் என்பதாக அவள் சொற்களில்லாமல் உணரத் தலைப்பட்டாள். ஜக்குவை அப்படியொரு கலக்கமான மனநிலையில் அவள் பார்த்ததே கிடையாது. அதுவும் ஜாலியாக மகாபலிபுரம் வந்திருக்கும்போதா இவன் இப்படிக் கவலைப்பட்டுக் குரங்குடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும். அடக்கடவுளே!

தூக்கிப் போட்ட பிஸ்கட் பொட்டலத்தைத்தான் எடுத்து ஒன்றை விண்டு வாயில் போட்டுக் கொண்டு மறுபகுதியை அந்தக் குரங்கிடம் நீட்டினான் ஜக்கு.

"சாப்பிடு. நீ பதில் சொல்லாட்டியும் எனக்கு ஃப்ரெண்டுதான். சாப்பிடு''



என்றான்.

குரங்கும் மறுக்காமல் அவன் கையிலிருந்த பிஸ்கெட் துண்டை வாங்கி வாயில் போட்டுக் கொண்டது.

இப்போதுதான் அவனருகே போகலாமா என்று குட்டி நினைத்தாள். அவன் கோபித்துக் கொண்டால்கூடச் சமாளித்துக் கொள்ளலாம். குரங்குக்குக் கோபம் வந்து மேலே பாய்ந்துவிட்டால்? ஐயோடா.

வேணவே வேணாம் என்று முடிவு செய்தாள். ஆனால் இந்த ஜக்கு இப்படித் தன்னை விட்டுவிட்டு, இப்படித் தள்ளிவந்து ஒரு குரங்குடன் பேசிக் கொண்டிருப்பதில் அவளுக்கு உண்மையிலேயே வருத்தமாகத்தான் இருந்தது. கொஞ்சம் கோபமாகவும்.

"என்னை என்னதான் பண்ணணுங்கறே? மறந்துடுன்னு சொல்லாதே. அது முடியலை. தூக்கமே வரமாட்டேங்கறது தெரியுமா? ராத்திரி படுத்தா வயலட் கலர்ல நூறு புடைவை அலை அலையா வருது தெரியுமா? உனக்கென்ன தெரியும்? திடீர்னு நாளைக்கோ மத்தாநாளோ அவ எங்க வீட்டுக்கு வந்து, வாசல்ல நின்னு அப்பாவை வான்னு கூப்டா, எங்கம்மா என்ன பண்ணுவா? அப்பா என்னையும் அம்மாவையும் விட்டுட்டு அன்னிக்கு டீ.வி.ல காட்டின சதிலீலாவதி படத்து ஹீரோ மாதிரி, அவளோட போயிட்டா நாங்கதான் என்ன பண்றது? தாத்தாவுக்கு ஏற்கெனவே உடம்பு சரியில்லை. இப்படி ஏதாவது ஆகி அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்தா என்ன ஆகும்? தாத்தாக்கு ஒண்ணுன்னா பாட்டி செத்தே போயிடுவாளே, உனக்குத் தெரியாதா? இவ்ளோ ப்ராப்ளம்ஸ் இருக்கும். மறந்துடுன்னு இனிமே சொல்லாதே நீ. நீ என் பெஸ்ட் ஃப்ரெண்டுன்னா முதல்ல என்னைப் புரிஞ்சுகண்டு பேசு. ஓகே?''

அவன் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான். குரங்கு அவனருகே திட்டமாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. மரத்தின் பின்னாலிருந்து இதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த குட்டிக்கு வியப்பு முற்றிலும் மறைந்து, கொஞ்சம் பயமும் கலவரமுமாக ஆகிப் போனது.

இல்லை. இவன் விளையாட்டாக ஏதும் பேசவில்லை. தீவிரமாக, ரொம்பத் தீவிரமாக அல்லவா என்னவோ பேசுகிறான்? தாத்தாவுக்கு ஹார்ட் அட்டாக் வரும் என்கிறானே? ஐயோ, அப்படி என்ன ஆகிவிட்டது? இத்தனை பெரிய பிரச்னையுடன் இவன் என்னத்துக்காக மகாபலிபுரம் வரவேண்டும்? அப்படியே தீவிரமான விஷயமென்றாலும் தன்னிடம் கூடவா சொல்லக் கூடாது? தான் அவனுக்கு பெஸ்ட் ஃப்ரெண்டு இல்லையா? தன்னைவிடவா அந்தக் குரங்கு முக்கியமாகிவிட்டது ஜக்குவுக்கு?

இதைச் சும்மா விட்டுவிடக் கூடாது! அதுவும் தன்னிடம் இதுவரை பேசாத என்னென்னவோ விஷயங்களையல்லவா அவன் அந்தக் குரங்கிடம் பேசிக் கொண்டிருக்கிறான்! சிவகாமியாம், நிர்மலாவாம், அப்பாவாம்! ஹூம்.

'இரு இரு. இதைப் பத்தி எங்கம்மாகிட்ட சொல்லி என்னன்னு கேக்கச் சொல்றேன்' என்று நினைத்துக் கொண்டு மெல்ல நகர்ந்து, ஓடிப் போனாள்.

(தொடரும்)

ஆயிரம் இருந்தும்...!

டாக்டர் எஸ். அஷோக்

"**அ**பான வாயு அடிக்கடி பிரிகிறது. என் உடல் நலம் சீர்கெட்டு விட்டதா?" என்று கவலைப்பட்டிருந்த வாசகருக்கான பதில் இதோ :

நம்முடைய பெருங்குடலில் ஏராளமான பாக்டீரியாக்கள் இருக்கின்றன. செரிமானத்துக்குத் தப்பி, பெருங்குடலில் தங்கிப் போகும் மாவுச் சத்து, புரதம், கொழுப்பு போன்றவற்றை, இவை, உண்டு பல்கிப் பெருகிப் போகின்றன. சிதைவுறும் மாவுச் சத்துகளிலிருந்து கரியமிலவாயு, மீத்தேன், ஹைட்ரஜன் ஆகிய வாயுக்கள் பிரிகின்றன. சிதைவுறும் புரதச் சத்திலிருந்து ஹைட்ரஜன் சல்பைடு வாயு விடுபடுகின்றனது.

இந்த வாயுக்கள்தான் மலவாய் வழியாக 'கேஸ்' ஆக பிரிகிறது. பெரும்பாலும் அபானவாயு பிரிவதால், உடல் நலம் சீர் கெட்டுவிட்டது என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். வாயு வெளியேறினால் தப்பில்லை. வாயு வெளியேறாமல் இருந்தால்தான் கோளாறு.

ஆனால் வாயு பிரியும் பழக்கம், தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதால், குடலை சுத்தமாக வைத்துக் கொள்வது நல்லது.


நார்ச்சத்துள்ள, நீர்ப்பத உணவை அதிகமாக உண்டால், மலச்சிக்கலோ, வாயுப் பிரச்னையோ இருக்காது.

குடல்வால் அழற்சி :

மனிதனின் குடல்வால் எட்டு முதல் பன்னிரண்டு செ.மீ. நீளம் வரை இருக்கும். பத்தாயிரம் பேர்களில் ஓரிருவருக்கு குடல் வால் இல்லாமலேயே இருக்கலாம். சிலருக்கு இரட்டைக் குடல் வால் கூட இருக்கும்.

இந்தக் குடல் வால் வீக்கம், குழந்தை முதல் முதியவர் வரை யாரையும் விட்டு வைப்பதில்லை.

குடல் வாலில் மிகச் சிறிய துவாரம் உள்ளது. அந்தத் துவாரத்தை ஏதேனும் உணவுப் பொருள் அடைத்துக் கொண்டாலோ, ஈகோலை என்டிரோ காக்கஸ், ஸ்டெப்டோ காக்கஸ் போன்ற பாக்டீரியாக்கள் அழற்சியை உண்டு பண்ணினாலோ, குடல்வால் பாதிப்படைகிறது.



நார்ச்சத்து இல்லாத உணவை மட்டுமே சாப்பிடுவதால், மலம் இறுகி, கடைசியில் கல் மாதிரியே ஆகிவிடும். இதை மலக்கல் என்பார்கள். இது போல இறுகிய மலம் கூட, குடல்வாலில் கொடிய அழற்சியை ஏற்படுத்தும்.

குடல்வால் அழற்சியின் அறிகுறிகள் :



காலையில் தூங்கி எழும்போது தொப்புளைச் சுற்றி ஏற்படும் வலி, போகப் போக வயிறு முழுவதும் ஏற்படும். இருமினால் வலி அதிகமாகும். சில சமயம் காய்ச்சல் அதிகமிருக்கும். குழந்தைகளுக்கு குடல்வால் அழற்சி ஏற்படும்போது, மார்புச் சளியும் தட்டம்மையும் ஏற்படும்.

சாதாரண குடல் அழற்சி ஏற்பட்டிருந்தால், மருந்து மாத்திரையிலேயே குணமாகிவிடும். அதுவே அழற்சியுடன் புண், சீழ் ஆகியவையும் உண்டாகியிருந்தால், சில சமயம் குடல் வாலின் நுனி அழுகிப் போகவும் கூடும். இந்நிலையில் குடல்வாலில் ஓட்டை விழுந்து, வயிறு முழுக்க அழற்சி உண்டாகலாம் என்பதால், மருத்துவர்கள் எமெர்ஜென்ஸி அறுவை சிகிச்சையைச் சிபாரிசு செய்வார்கள். அதுவும் பன்னிரண்டு முதல் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் அறுவை சிகிச்சை செய்வது நல்லது.


லேப்ரோஸ்கோப்பி மூலம் குடல்வால் அழற்சி நீக்கப்பட்டாலும், அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு குடல் வாலை, திசுப் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால், குடல் வால் அழற்சியின்போது, புற்று நோய் அல்லது கார்சினாய்ட் போன்ற நோய்கள் இருக்கக் கூடும். சந்தேகத்துக் கிடமின்றி பரிசோதனை செய்வது நலம்.

"மன்னரின் கஜானா காலின்னா நம்ப மறுத்தீங்களே, இப்ப பாருங்க அவர் கொடுத்திருக்கிற விளம்பரத்தை..."

"என்ன சொல்றாரு?"

"ஆஸ்தான வித்வான் பதவிக்கு விண்ணப்பிக்கலாம், பஞ்சப்பாட்டு பாடத் தெரிந்தவர்களுக்குத் தேர்வில் முன்னுரிமை!"

- டி.கே. சுப்பரமணியன்



ரோஜா என்ற இளம் பெண். வசதியான பெற்றோர். நல்ல இடத்தில் திருமணம் நடந்து அழகான பெண் குழந்தையும் பிறந்தது. 'ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்... நோ பீஸ் ஆஃப் மைண்ட்' என்று 'ஞானஒளி'யில் சிவாஜி பாடுவாரே, அப்படியொரு நிலைமை! காரணம் ரோஜாவுக்குச் சதா சர்வ காலமும் வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு!

"அமீபியாஸிஸ்தான். நோ ப்ராப்ளம்" என்று சொல்லி குடும்ப மருத்துவர் சிகிச்சை தர, கொஞ்ச நாள் தாக்குப் பிடித்தது. மறுபடியும் வயிற்றுப் போக்கு. ஜுரம்! பகலில் இருபது தடவைக்கும் மேல் மலம் கழிக்க வேண்டிய அவஸ்தை. கிட்டத்தட்ட மூன்றரை வருஷம், என்னென்னவோ வைத்தியம் செய்தும், பணம் கரைந்ததுதான் மிச்சம். மிகுந்த வேதனையுடன் என்னிடம் வந்து சேர்ந்தார்.

ரோஜாவுக்குச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. 'கோலனோஸ்கோபி' மூலம் குடலை ஆராய்ந்தபோது, அத்தனையும் அல்ஸர்! பெருங்குடல் முழுக்க சிறு சிறு புண்களிலிருந்து சீழும், ரத்தமும் வழிந்து கொண்டேயிருந்தது. கடுமையான 'அல்ஸரேடிவ் கோலைடிஸ்' நோய்!

பெருங்குடல் முழுவதும் இண்டு இடுக்கு விடாமல் புண் இருந்ததால் வேறு என்ன செய்வது? பெருங்குடல் அப்படியே வெட்டி எடுத்துவிட்டு, சிறுகுடலை வயிற்றின் வலப்புறம் பொருத்தி விட்டோம்.

அறுவை சிகிச்சைக்கு பின்பு, ரோஜா உடல்நலம் தேறி சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார். குறிப்பாக கழிப்பறையை அடிக்கடி உபயோகிக்கும் பழைய வாழ்க்கை இடையவே கிடையாது.

முன்பெல்லாம் அல்ஸரேடிவ் கோலைடிஸ் என்றாலே பெரிய ஆபரேஷன்தான். வயிற்றைப் பெரிதாகக் கிழித்து தடிமனாக பூரான் தையல் போட்டு என்று சிரமமாக இருக்கும். ஆனால் தற்போது லேஸர் லேபராஸ்கோபி முறையில் சிறு துவாரங்கள் மூலம் சுலபமாக ஆபரேஷன் செய்து விடலாம். நான்கே நாட்களில் மிக மிக நார்மலாகி விடலாம்.

அடுத்த வாரம், மற்றுமொரு விநோதமான கேஸ் ஹிஸ்டரியுடன் சந்திக்கிறேன். காத்திருங்க.



'அப்படினா வந்திருமுடா.'

'நீங்க வரலெண்டு; அம்மாவுக்கு வருத்தம், உங்கப்பாவும் அவரும் தாண்டா கூட்டாளிக. அவரும் வரலெ, போடி நாயக்கரும் வரலெண்டு சொல்லிட்டே இருந்தாங்க; நா அவுகள்லாம் ஆயிரம் ஜோலிக்காரண்டேன்...'

"தெரியாம போச்சேடா... தெரிஞ்சிருந்தா வராமலா! மேலுக்கு சேட்டமுள்ளாமக் கெடந்தானா?"

"நம்ம சுப்பனக்கூட ரெண்டு மூணுவாட்டி தேனி சந்தையிலே வெச்சுப் பார்த்தேன். படுகாலிப் பயல். இதச் சொல்லவே இல்லியே..'

"ப்சு!"

"மத்த சங்கதினாக் கூடப் பரவாயில்லை. இது சேதகாரிய முல்லெ!"

"இப்படி ஆகுமுண்டு நெனைக்கவே இல்லெப்பே.'

"ஒங்கப்பே கண்ணுக்குள்ளே கெடக்காண்டா. அவனுக்கு ஏழு எட்டு வருசம் மூப்புடா நா. கெழங்கு கெனக்கா இருக்கேன். காலக் கொடுமடா...'

"தீத்தத் தொட்டியிலெ குளிச்சுப்போட்டு, அப்படியே சாமியக் கும்பிட்டு, வீட்டுப்பக்கமா வரலாமுண்டு விசாரிச்சேன். நீங்க சித்திரகுப்தன் கோவில்லெ இருக்கதா சொன்னாங்க..'

"இங்கதாண்டா நா வந்து படுத்துக்கிறது. அப்பவாச்சும் இந்த சித்திரகுப்தன் நம்ம கணக்கு வழக்க தீத்துப்போடுவானான்னு பாக்குறேன்..'

"அப்படி எல்லாம் பேசவாணாம்.'

"போச்சுடா. எல்லாம் போச்சு! ஆட்டுத்தரகு... மாட்டுத் தரகுன்னு காடு கரைன்னு சுத்திகிட்டு இருந்துச்சு. இப்ப எல்லாம் போச்சு! முன்ன ஒங்க அப்பன் வருவான். போடி நாயக்கர் வருவார். இப்ப அவரும் அழுந்திட்டாரு."

"புள்ளங்க எல்லாம்..'

"அது அது பாட்டுக்குப் பொழப்பு

"அட! அட! காயாம்பூ மவனாடா நீ?"

"ஆமா..'

"என்ன செய்யுறாண்டா ஒங்கப்பே இப்ப?"

"ம்.'

"கேக்குறமுள்ள..'

குட்டப் பழனி கண்ணை மூடி, தலையை உயர்த்தி ஆகாயத்தைக் காட்டினான்.

"என்னடா சொல்றே?"

'அம்புட்டுத்தேன்.'

"நெசமாவாடா.'

நாயக்கர் உடல் நடுங்கிற்று! கண் கலங்கித் திரண்டு நின்றது.

"தவறி எத்தனை நாளாவுது?"

"நாளா? ஆறு மாசமாச்சு!"

'ஒரு பயலும் தாக்கல் சொல்லலியேடா..'

"கருமாதி பத்திரிகை அனுப்பிச்சோம்.'

"ஒண்ணும் வரலெடாப்பா.'

'நான் தான் ஸ்டாம்பு ஒட்டிப் போட்டது.'

"எங்கடா போட்டே?"

"இங்கதேன். தோ. கோவிந்தசாமி நாயக்கர், பிள்ளையார் கோவில் சந்து, கோடாங்கிபட்டி, தேனி மாவட்டம் - சரியா?'



நகரும் அசைவுகள்

பாரதி பாலன்

தலப்புன்னு போயிட்டதுக. எல்லாம் அசலூர் பக்கம் போயிட்டது. கெழவியும் நானும்தேன். அவளும் விழுந்துட்டா. வென்னமாவே எந்திருச்சிடுறது. சுடு தண்ணிய வெச்சு, கெழவி ஒடம்ப தொடச்சு விடுறது. அப்புறம் கஞ்சித் தண்ணிய வெக்கிறது. நா கொஞ்சம் வாயிலெ ஊத்திக்கிடுவேன். இந்தப் பக்கமா வந்திடுவேன். துண்ட விரிச்சுப் போட்டா ஒரு தொந்தரவும் தெரியாதுடா. பொழுது சாயப் போயி, ஒரு காபித் தண்ணிய கள்ளுனு வாயிலெ ஊத்திக் கிடுவேன். அவளும் காபித் தண்ணிக்குத் தொண்ணாந்து கிட்டு கெடப்பா..."

"ஒங்க பொழப்பும் அப்படித்தானாக் கும்."

"என்னடா செய்யச் சொல்றே?..."

கோவிந்தசாமி நாயக்கர் தரையில் கையூன்றி எழுந்தார். எலும்பும் தோலுமாக உசரமாக இருந்தார். நெஞ்சு குழிவிழுந்து, காடுமாதிரி நரைத்த ரோமம்! எழுந்தவர் ஒரு கணம் தள்ளாடினார்.

"வாடா, வீட்டுக்குப் போயிட்டுப் போவ..."

"இங்குனக்குள்ள பஸ் ஏறிக் கிடறேம்பே..."

"இங்குனக்குள்ள எவன்டா நிறுத்துவான். வீட்டுக்கு அங்குன ஏறிக்க..."

'ம்' என்று அவர் கூடவே நடந்தான். முன்பு பார்த்ததற்கு நாயக்கர் ஆளே மாறிவிட்டார். தோள்பட்டை எல்லாம் கீழே இறங்கிவிட்டது. கன்னத்துச் சதை தொங்கிவிட்டது. கண்ணைச் சுற்றிலும் கருமை. குரல் கூட பழைய குரலாக இல்லை. நடையில் அந்த 'மிடுக்கு' இல்லை. வயதானால் வரும் தளர்ச்சி மாதிரித் தெரியவில்லை. இது வேறு



தளர்ச்சி! மனசுக்குள்ளே புழுங்கிப் புழுங்கி புண்ணாகிப் போன வலி.

"ஓங்கம்மா எப்படி இருக்காடா?.."

"ம்."

"பெரியவன்?"

"இருக்கான். அவன்தான் பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு மல்லுக்கு நிக்குறான். வீட்டப் பகுந்து கொடு, காட்டப் பகுந்து கொடுண்டு எவனையாவது கூட்டியாறான்.."

"நீக்குப்போக்கா போயிக்கிடுங்கடா.."

"கேட்டத்தானே?"

"ஓம் பொஞ்சாதி?"

"இருக்கா. அம்மா கூடத்தேன் இருக்கோம்."

"ஆமாடாப்பா... தவிக்கவுட்டுப் போயி டாதீக.."

"கருமாதி செலவு நாலு ஐஞ்சு ரூபா ஆகிப் போச்சு. அவன் பைசா துட்டுத் தரலெ. உரு மாக்கட்டுப் பணம், துணிமணிக எல்லாத்தை யும் தூக்கிட்டுப் போயிட்டான்...

"ப்ச."

"எல்லாம் நா செஞ்ச செய்முறைக. அவ எந்த விசேஷத்துக்குப் போனான்... வந்தான்.."

நாயக்கருக்கு மூச்சு வாங்கிற்று. இடுப்பில் கையூன்றி மர நிழலில் நின்று விட்டார். குட்டப் பழனி வேகத்துக்கு ஈடு கொடுக்க முடிய வில்லை. புளிய மர நிழல் குளுமை! பழுப்பேறிப் போன வேஷ்டியை அவிழ்த்து, இடுப்பில் இறுக்கிக் கொண்டார். டயர் செருப்பை காலுக் குள் அழுத்தி நுழைத்தார். புழுதி பூத்துக் கிடந்த செருப்பு, மணலை அரைத்தது. 'ட்டவக் ட்டவக்'கென்று ஓசையுடன் நடந்தார்.

"நீங்க, ஒரு நடை வந்து அவனை என் னாண்டு, கேக்கச் சொல்லலாமுண்டு இருந் தேன்."

"பங்குபாகத்துக்கு நிக்குறீகளாக்கும்?"

"நானா? அவந்தேன்?"

"ஓங்கம்மா மண்டையைப் போடுறமுட்டும் ஒரு பய அதப் பத்திப் பேசாதீங்கடாப்பா. இந்தா நான் கெடக்கேன் பாரு.."

"அவன பேசி தெகைக்க முடியலெ."

"நீங்க அடிச்சு மல்லுகட்டிக்கிட்டு இருக் காதீங்கடா.."

"தோது இருந்தா வாங்கப்பு. அவன என் னாண்டு கேப்பீக.."

"முன்ன மாதிரி எங்குட்டும் விசுக்குனு கௌம்பவா முடியுது?"

"நீங்க சொன்னா, கேப்பான்."

"வடுகபட்டியிலெ இருக்காங்குறேலெ?"

"வரச் சொன்னா வருவான்."

"தோது எப்படின்னு பாத்துட்டு வாறேன்."

"வாங்கப்பூ."

நாயக்கர் பஸ் ஸ்டாப்பை ஒட்டி இருந்த ஒரு கடைக்குக் கூப்பிட்டுப் போனார். தென்ன ஓலையில் வேயப்பட்ட கடை. காபியும் வடையும் வாங்கிக் கொடுத்தார். அதன்பின் கிழக்குப் பக்கம் நடந்து, தண்ணீர்த் தொட்டியை ஒட்டிய பள்ளத்தில் இறங்கி, ஊருக்குள் கூப்பிட்டுப் போனார்.

அவர் வீடு களை இழந்து கிடந்தது! வெளிச்ச ஓட்டமே இல்லாது இருளடைந்து கிடந்தது! கிழக்குப் பக்கம் கிழவி கிடந்தது. கிழவி கூனிக்குறுகி அழுக்கு மூட்டை மாதிரிச் சுருண்டு கிடந்தாள்.

"பழனிப் பய வந்திருக்கான்!"

"அது யாரு?" கிழவியின் குரல்.

"நம்ம காயாம்பு மவன்.."

"காயாம்பு தவறிட்டானாம்."

"எப்படியாம்?" வாய் குழறிற்று.

"சீக்குதேன்!"

கிழவி தலையைத் திருப்பி பழனியைப் பார்த்தாள். பின்பு நாயக்கர் பக்கம் திரும்பி னாள்.

"ஆயிரமோ... எம்புட்டோ வாங்குச்சு. வந்திடுச்சா.."

நாயக்கர் எங்கோ பார்த்தார். அவர் கண் தடுமாறியது.

"வந்துச்சா வரலையா?"

"ஆளே போயிட்டான் வுடு."

"அம்புட்டுத் தானாக்கும்.."

பழனி, திகிலோடு நாயக்கர் முகம் பார்த் தான். அவர் கவனம் எங்கோ திரும்பி இருந்தது. பழனி சட்டென்று கால் இடறி தடுமாறி நிற்பது போல் நின்றான். மேற்கொண்டு என்ன பேசுவது? ஐயா எதுக்காகக் கடன் வாங்கினார்? மனம் கேட்டது. வாய் கேட்கவில்லை. வலியப் போய் மாட்டிக் கொள்வானேன்! மனத்தின் சூழ்ச்சியைக் கண் புரிந்து கொண்டது. அது எங்கோ தாவிற்று. அந்த இடத்தை விட்டு நகர்ந்தால் நல்லது என்று பட்டது. இப்படி ஒன்றை அவன் எதிர்பார்க்கவில்லை.

"கிளம்புறேன்பு."

"புரியாவிட்டால் பரவாயில்லை..."

தலைப்பு : இருத்தல் (எக்ஸிஸ்டென்ஸ்)

கண்காட்சியில் இடம் பெற்றிருந்த ஓவியங் கள் எல்லாமே 'அப்ஸ்டிராக்ட்' ரகத்தைச் சேர்ந் தவை. இதுபோன்ற ஓவியங்களைப் பார்க்கிற எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாத தல்லவா? என்று கேட்டால் ராமசந்திரன் தரும் விளக்கம் :

"புரிந்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. புரிந்து கொள்ள முற்படுகிறபோது, உங்கள் எண்ணங்கள், நீங்கள் அறிந்த விஷ யங்கள் போன்றவற்றை எல்லாம், அந்த ஓவி யத்துடன் தொடர்பு படுத்தி. இது இன்னது என்று



நீங்களாக ஒரு முடிவுக்கு வரத் தூண்டும். அதில் எனக்கு உடன் பாடில்லை.

"மனிதர்களில் முழுமையாக நல்லவர்களுமில்லை. கெட்டவர்களும் இல்லை. இருவித குணங்களும் கொண்ட மனிதரை நல்லவன் அல்லது கெட்டவன் என்று முத்திரை குத்துவது எப்படி தவறானதோ, அப்படிப்பட்டதுதான் ஒரு ஓவியத்தை ரசிப்பதை விட்டுவிட்டு, புரிந்து கொள்ள முற்படுவது.

"ரொம்பத் தத்துவார்த்தமாக இருக்கிறதே!"

"நான் ஓவியக் கல்லூரி மாணவன். இந்தியா வெங்கும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். சமணம் மற்றும் பௌத்த சிற்பங்களும், ஓவியங்களும் என்னை ஆழமாக பாதித்தன. அதனால் ஆர்வம் ஏற்பட்டு அந்தத் தத்துவங்கள் சம்பந்தமான புத்தகங்கள் நிறைய படித்தேன். என் எண்ணங்கள் தெளிவு பெற்றன. அவற்றையே என் ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்துகிறேன். எனவே தயவு செய்து ஓவியங்களை ரசியுங்கள். அர்த்தம் கற்பிக்க முயலாதீர்கள்."

சென்னை பலாச ஆர்ட் காலரியில் நடைபெற்றது இவருடைய ஓவிய கண்காட்சி. இவர் மனைவி அனாமிகாவும் ஓவியர்தான்.

- சி.எம்.

"ஒல வெக்கறேன்டா."

"வேண்டாம் எதுக்கு"

"எதுனா வாங்கிக் கொடுக்க வேண்டியது தானே?" கிழவி குரல் ஓடிசலாக எழும்பிற்று.

"காபி குடிச்சேன்."

"எங்க போயி சாப்புடுவே. காப்புடி அரிசியப் போட்டு ஒல வெக்கட்டுமுடா."

"கிளம்புறேன்!"

அவன் எவ்வளவோ சொன்னான். அவர் கேட்கவே இல்லை. அவனை பஸ் ஏற்றிவிட கூடவே வந்துவிட்டார்.

நான்கு தெரு தாண்டி, ஒரு பள்ளத்துக்குள் இறங்கி மேடேறி, பஸ் நிற்குமிடத்துக்கு வர வேண்டும். ரோட்டைத் தாண்டி எதிர்ப்பக்கமாக வர வேண்டும். எதற்கு இத்தனைச் சிரமப் பட்டு வருகிறார்! ஒருவேளை "ஏலே, ரொம்ப செரமமா இருக்குடா. எல்லாப் பயல்களும் வுட்டுட்டுப் போயிட்டாங்க. ஏதோ கையிலெ கண்டதைக் கொடுத்தாக் கூடப் போது"முண்டு முகத்தைப் பார்ப்பாரோ! பஸ் ஸ்டாப்பில் மெல்லக் கசிகிற குரலாகக் கேட்டாலும் கேட்பார்' என்று பயந்தான்.

"நாபோயிருதேன். நீங்க எதுக்குனு" தடுத்தான். "ஒங்கப்பன் வந்தானாக்க மத்யானத்துக்குத்தாண்டா கௌம்புவான். இந்த வெளியெல்லாம் சுத்திப்புட்டு, தேனியிலே போய்த் தாண்டா காரு ஏத்திவிட்டுப் போட்டு திரும்புறது?" என்று கூடவே நடந்தார். 'ஐயா எதுக்கு ஒங்ககிட்ட கைமாத்து வாங்கினாரப்பு' என்று கேட்க வேண்டும்போல் அரித்தது. அதைக் கேட்டால்... அதற்குப் பின் இருக்கும் ஆபத்தை நினைத்துப் பயந்தான். 'தொல்லையத் தூக்கி தோள்லெ போட்டு வர்றதுக்கா அம்புட்டுத் தொலைவு போன' என்று வீட்டில் குடைந்து விடுவார்கள்.

நாயக்கரும் மேற்கொண்டு அதுகுறித்து ஒரு வார்த்தைக் கேட்கவில்லை. அப்படிக் கேக்கும்படி நாம் நகர்ந்து விடக் கூடாது என்று ஜாக்கிரதை காட்டினான். அந்தச் சாமர்த்தியத்தை எவ்வளவு நேரம் கட்டிக் காக்க முடியும்? வாயை மூடிக் கொண்டான். நாயக்கர்தான் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். இவன் தலையாட்டுவதும், கண்ணை அசைப்பதும், கையை அசைப்பதும், புருவம் தூக்குவதும் என்று உடல் மொழியிலே இருந்தான். இந்த நேரம் பார்த்து ஒரு 'காரை'க் கூடக் காணோம். ஒன்றிரண்டு நிற்காமலே நகர்ந்து விட்டது. குட்டப் பழனி முன்போல் நின்றிருந்தான்.

"ஒங்கம்மாட்ட சொல்லுடா, சடச்சுக்கப் போறது!"

"ம்."

"வெசாளக் கெழமை தோது எப்படினு பாத்துவிட்டு வாறேன். கேட்டுப்பிட்டுச் சும்மா இருக்க முடியலெ..."

"வாங்கப்பு."

"ம்."

சிறிது நேரம் அவன் இங்குமங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். எத்தனையோ காட்சிகள். நகரும் அசைவுகள். அவரும் காலை மாற்றி மாற்றி நின்று கொண்டிருந்தார். புளிய மரங்களின் இலையசைவும் நிழலசைவும் வேடிக்கை போல் இருந்தது. மந்தை மந்தையாக எருமை மாடுகளைப் பற்றிக் கொண்டுப் போனார்கள். ரோட்டை அடைத்து மாடுகள் நகர்ந்து கொண்டிருந்தன. மாடுகள் கடந்ததும் புழுதிப் புயல் எழும்பிற்று. சற்றும் எதிர்பாராத கணம் பஸ் ஒன்று வந்து நின்றது!

பதறிக் கொண்டு ஓடினான். ஒரு கால் படிக்கட்டிலும் ஒரு கால் தரையிலும் இருக்கும் போதே பஸ் விருட்டென்று கிளம்பிற்று. சற்று படபடப்பாக இருந்தது. அவசரத்தில் சரியாகச் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டமோ என்று தோன்றியது பரபரப்பாகவே இருந்தது. இடம் கிடைத்து உட்கார்ந்ததும் சற்று நிம்மதியாக இருந்தது.

ஜன்னல் வழியே திரும்பிப் பார்த்தான். நாயக்கர் அந்த இடத்திலே நின்றிருந்தார். ○



சிவகாமியின் சபதம்

இருபத்து மூன்றாம் அத்தியாயம்

சீன யாத்திரீகர்

வாதாபி நகரத்தின் வீதிகளில் தன்னை நடனம் ஆடச் சொன்னதனால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியின் வேகம் நாளாக ஆகச் சிவகாமியின் உள்ளத்தில் குறைந்து மங்கி வந்தது. தமிழகத்திலிருந்து சிறைப் பிடித்துக் கொண்டு வரப் பட்டவர் எல்லாரும் அவரவருக்கு ஏற்ற ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டுக் குடியும் குடித்தனமுமாய் வாழத் தொடங்கினார்கள். அவர்களில் சிலர் சில சமயம் சிவகாமியைப் பார்க்க வருவதுண்டு. அப்படி வருகிறவர்களுடைய மனத்திலே கோபமோ, வன்மமோ ஒன்றுமில்லையென்பதைச் சிவகாமி கண்டாள்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்த போது, தான் ஆத்திரப்பட்டுச் சபதம் செய்ததன் அறியாமையையும், மாமல்லருடன் போகாமல் அவரைத் திருப்பியடித்த தன் மௌடீகமும் அவளுக்கு மேலும் மேலும் நன்கு புலனாயின.

ஆயினும் பெண்களின் இயல்புக்கு ஒத்தபடி தான் செய்த தவறுக்கும் மாமல்லர் மீதே சிவகாமி பழியைப் போட்டாள். 'என்ன இருந்தாலும் நான் அறியாப் பெண் தானே! ஏதோ அவமானத்தினாலும் ஆத்திரத்தினாலும் தூண்டப்பட்டு இந்த மாதிரி சபதம் செய்தேன். ஆண் பிள்ளையும் அறிவாளியுமான அவரவல்லவா என்னைப் பலவந்தப்படுத்திப் பிடிவாதமாக

அமரர் கல்கி

அழைத்துப் போயிருக்க வேண்டும்? சேனாதிபதி பரஞ்சோதி சொன்னாரே, அந்தப் படி ஏன் அவர் செய்திருக்கக் கூடாது?' என்று அடிக்கடி எண்ணமிட்டாள்.

வருஷங்கள் செல்லச் செல்ல, மாமல்லர் மறுபடியும் வந்து தன்னுடைய சபதத்தை நிறைவேற்றித் தன்னை அழைத்துப் போவார் என்ற நம்பிக்கை சிவகாமிக்குக் குறைந்து கொண்டே வந்தது. அது எவ்வளவு பிரம்மப் பிரயத்தனமான காரியம், எவ்வளவு அசாத்தியமான விஷயம் என்பதையும் உணரலானாள்.

'நான் செய்த சபதம் பிசகானது. அறியாமையினால் அத்தகைய அசாத்தியமான காரியத்தைச் சொல்லி விட்டேன். அதைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம். என்னை எப்படியாவது திரும்ப அழைத்துக் கொண்டு போனால் போதும்!' என்று மாமல்லருக்குச் செய்தி சொல்லி அனுப்பலாமா என்பதாகச் சில சமயம் அவளுக்குத் தோன்றியது. ஆனால், அந்த யோசனையைக் காரியத்தில் அவள் நிறைவேற்றாதபடி நாகநந்தியின் ஏளன வார்த்தைகள் செய்து வந்தன.

சிவகாமி கத்தியை வீசி எறிந்து நாகநந்தியை முதுகில் காயப்படுத்திய போது, அந்த நய வஞ்சக வேஷதாரி, 'அடடா! என்ன காரியம் செய்தாய்? உன்னை அவர்களோடு கூட்டி அனுப்பவல்லவா எண்ணினேன்?' என்று சொல்லியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதனால் சிவகாமிக்கு நாகநந்தியின் மீதிருந்த கோபமெல்லாம் மாறித் தன் செயலைப் பற்றிப் பச்சாதாபமும் பிக்ஷுவின் மீது ஓரளவு அனுதாபமும் உண்டாயின. நாகநந்தி தம்முடைய பாசாங்கு உத்தேசித்த பலனை அளித்து விட்டது குறித்து மனத்திற்குள் மகிழ்ந்தார். சிவகாமிக்குத் தம்மிடம் ஏற்பட்ட அனுதாபத்தைப் பூரணமாகப் பயன் படுத்திக் கொண்டார்.

சில நாளைக்கெல்லாம் சிவகாமியைத் தாமே அழைத்துக் கொண்டு போய் காஞ்சியில் விட்டு விடுவதாக நாகநந்தி சொன்னார். சிவகாமி அதை மறுதலித்ததுடன் தான் செய்த சபதத்தையும் அவருக்குத் தெரியப்படுத்தினாள்.

அதைக் கேட்ட நாகநந்தி ஏளனப் புன்னகை புரிந்து, "இப்படி ஒருநாளும் நடைபெற முடியாத சபதத்தை யாராவது செய்வார்களா!" என்று கேட்டார். "நிறைவேறுகிறதா, இல்லையா என்று பார்த்துக் கொண்டிருங்கள்!" என்று சிவகாமி வீறாப்பாய்ப் பேசினாள்.

அறிமுகமானவர்கள் யாருமே இல்லாத அந்தத் தூர தேசத்து நகரில், தானாக ஏற்படுத்திக் கொண்ட சிறையில் இருந்த சிவகாமிக்கு நாகநந்தியடிகளோடு அவ்வப்போது சம்பாஷிப்பது பெரிதும் ஆறுதல் தருவதாயிருந்தது. தேசமெல்லாம் பிரயாணம் செய்தவரும், பல கலைகள் அறிந்தவருமான பிக்ஷுவுடன் பேசுவது உற்சாகமான பொழுது போக்காயும் இருந்து வந்தது.

"காஞ்சிக்குத் திரும்பிப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால், வேண்டாம். அஜந்தாவுக்கு அழைத்துப் போகிறேன். வா! எந்த வர்ண இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்காக உன்னுடைய தந்தை துடிதுடித்தாரோ, அதை நீயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!" என்று நாகநந்தி சில சமயம் ஆசை காட்டினார்.

அதற்கும் சிவகாமி, "என் சபதம் நிறைவேறாமல் இந்த நகரை விட்டு நான் கிளம்பேன்!" என்றே மறுமொழி சொல்லி வந்தாள்.

மூன்று வருஷத்துக்கு முன்னால் பல்லவ சைனியம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப் போகிறது என்ற வதந்தி உலாவியபோது சிவகாமி எக்களிப்படைந்தாள். அது பொய்யாய்ப் போனதோடு, நாகநந்தி அதைக் குறித்து மீண்டும் அவளை ஏளனம் செய்தது அவள் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. ஆயினும், தன் மனநிலையை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "பொறுத்திருங்கள்! அடிகளே, பொறுத்திருங்கள்! இந்த வருஷம் இல்லாவிட்டால், அடுத்த வருஷம்! கொஞ்சம் பொறுத்திருங்கள்!" என்று சொல்லி மாமல்லரின் கௌரவத்தை நிலைநாட்ட முயன்றாள்.

அவ்விதம் கர்வமாகப் பேசி இப்போது வருஷம் மூன்று ஆகிவிட்டது.

சிவகாமி வாதாபிக்கு வந்து ஒன்பது

வருஷம் பூர்த்தியாகி விட்டது.

இனியும் நம்பிக்கை வைப்பதில் ஏதேனும் பயன் உண்டா? நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு இன்னும் எத்தனை காலம் இந்தத் துயர வாழ்க்கையைச் சுமந்திருப்பது?

போதும், போதும்! ஒன்பது வருஷம் காத்திருந்தது போதும்.

வீட்டு முற்றத்தில், பவளமல்லி மரத்தின் பக்கத்திலே இருந்த கிணறு தன் வாயை அகலமாக விரித்து, 'வா! வா! என்னிடம் அடைக்கலம் புகுவதற்கு வா!' என்று சிவகாமியை அழைத்துக் கொண்டிருந்தது.

இத்தகைய நிலைமையில்தான் ஒருநாள் நாகநந்தியடிகள் சீன யாத்திரீகர் ஒருவரை அழைத்துக் கொண்டு சிவகாமியைப் பார்க்க வந்தார். ஹியூன்சங் என்னும் அந்தச் சீனர் உலகில் பல தேசங்களையும் பல இராஜ்யங்களையும் பார்த்து விட்டு வந்தவர். பல கலைகளைக் கற்றுப் பாண்டித்யம் பெற்றவர். அந்தக் காலத்தில் பரத கண்டத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று சாம்ராஜ்யங்களில் ஹர்ஷ சாம்ராஜ்யத்தைப் பார்த்துவிட்டு, அடுத்தபடி வாதாபிக்கு அவர் வந்திருந்தார். சளுக்க சாம்ராஜ்யத்தில் அஜந்தா முதலிய இடங்களையும் வேங்கி நாட்டில் நாகார்ஜுன பர்வதத்தையும் பார்த்து விட்டு, அவர் பல்லவ ராஜ்யத்துக்குப் போக எண்ணியிருந்தார். இதையறிந்த நாகநந்தி, "இங்கே பல்லவ நாட்டின் புகழ் பெற்ற மகா சிற்பியின் மகள் இருக்கிறாள். பரத நாட்டியக் கலையில் கரை கண்டவள். அவளைப் பார்த்து விட்டுப் போகலாம்" என்று சொல்லி அழைத்து வந்தார்.

சீன யாத்திரீகரின் சம்பாஷணை சிவகாமிக்குப் பழைய கனவு லோகத்தை நினைவூட்டி மெய்ம்மறக்கும்படிச் செய்தது. ஹியூன்சங் தம்முடைய யாத்திரையில் தாம் கண்டுவந்த தேசங்களைப் பற்றியும் ஆங்காங்குள்ள இயற்கை அழகுகள், கலை அதிசயங்களைப் பற்றியும் விவரித்தார். இடையிடையே தமிழகத்துச் சிற்பக் கலையைப் பற்றிச் சிவகாமியைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். சிவகாமியின் நாட்டியத் தோற்றங்களை அவருடைய தந்தை ஆயனர் அழியாத சிலை வடிவங்களாகச் செய்திருக்கிறார் என்று நாகநந்தி சொன்ன போது, ஹியூன்சங்கின் அதிசயம் அளவு கடந்து பொங்கிற்று. அந்த நடனத் தோற்றங்களின் சிலவற்றை நாம் பார்க்க வேண்டுமென்று விரும்பிச் சிவகாமியை ரொம்பவும் கேட்டுக் கொண்டார்.


ஒன்பது வருஷத்துக்குப் பிறகு சிவகாமிக்கு உண்மையிலேயே அவள் கற்றிருந்த கலையில் மீண்டும் உற்சாகம் உண்டாயிற்று. சில நடனத் தோற்றங்களையும் அபிநய பாவங்களையும் சீனக் கலைஞருக்கு அவள் ஆடிக் காட்டினாள்.

ஹியூன்சங் அவற்றைக் கண்டு அதிசயித்து மகிழ்ந்தார். நாகநந்தியோ மெய்ம் மறந்து பரவசம் அடைந்தார்.

ஹியூன்சங் சிவகாமியைப் பற்றி மேலும் விசாரித்த போது சிவகாமி சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்ட வரலாற்றையும், அவள் செய்த சபதத்தையும் பற்றி நாகநந்தி கூறினார்.

"சக்கரவர்த்தியின் அநுமதி பெற்று இந்தப் பெண்ணைத் திருப்பிக் கொண்டு விட்டு விடுவதாக எவ்வளவோ நான் சொல்லிப் பார்த்தேன். இவள் கேட்கவில்லை. இப்பேர்ப்பட்ட அற்புதக் கலை இந்த வீட்டுக்குள் கிடந்து வீணாவதை நினைத்தால் எனக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிறது. இவளுக்கு விடுதலை தருவதற்காக இந்த வாதாபி நகரத்தை நாமே கொளுத்தி அழித்து விடலாமா என்றுகூடச் சில சமயம் எனக்குத் தோன்றுகிறது!" என்றார் நாகநந்தி.

ஹியூன்சங் தம் செவிகளைப் பொத்திக் கொண்டு, "புத்த பகவான் அப்படியொன்றும் நேராமல் தடுத்து அருளட்டும்!" என்றார். பிறகு, அந்தப் பெரியார் ஜீவகாருண்யத்தின் சிறப்பையும், யுத்தங்களினால் நேரும் கேட்டையும் எடுத்துக் கூறித் தர்மோபதேசம் செய்தார். புத்த பகவான் ஆட்டைக் காப்பதற்காக யாகத்தை நிறுத்திய வரலாற்றை விவரித்தார். அசோகரின் தர்ம ராஜ்யத்தைப் பற்றி எடுத்துரைத்தார்; தற்சமயம் ஹர்ஷ சக்கரவர்த்தி அதே விதமாகத் தர்ம ராஜ்யம் நடத்துவதையும், பிராணி ஹிம்சையைக் கூடத் தமது இராஜ்யத்தில் அவர் தடுத்து விட்டிருப்பதையும் குறிப்பிட்டார்.



சிவகாமி இடையிலே குறுக்கிட்டு, "ஆனால், சுவாமிகளே! இந்த வாதாபி சக்கரவர்த்தியின் வீரர்கள் தமிழகத்தில் செய்த அக்கிரமங்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியாது. அதனாலேதான் இப்படியெல்லாம் தர்மோபதேசம் செய்கிறீர்கள்!" என்று கூறியபோது, அந்தச் சீன பிக்ஷு கூறியதாவது:

"தாயே! யுத்தம் என்று வரும்போது மனிதர்கள் மிருகங்களாகி விடுவதை நான் அறியாதவனல்ல! நீ பார்த்திருக்கக் கூடியவைகளை விடப் பன்மடங்கு அக்கிரமங்கள் நடந்



திருக்கலாம். ஆனால், பழிக்குப் பழி வாங்கிக் கொண்டே போனால், அதற்கு முடிவு என்பதே கிடையாது. சளுக்கச் சக்கரவர்த்தி படையெடுத்ததற்குப் பழி வாங்குவதற்காக இப்போது காஞ்சிச் சக்கரவர்த்தி படையெடுக்கிறார். மறுபடியும் காஞ்சியின் மேல் பழிவாங்குவதற்காகச் சளுக்க வம்சத்தினர் படையெடுப்பார்கள். இப்படி வித்திலிருந்து மரமும், மரத்திலிருந்து வித்துமாக உலகில் தீமை வளர்ந்துகொண்டே போகும். யாராவது ஒருவர் மறந்து மன்னித்துத்தான் தீர வேண்டும். அப்போதுதான் உலகம் க்ஷேமம் அடையும். தாயே, எது எப்படியானாலும் உன்னுடைய பயங்கரமான சபதம் நிறைவேற வேண்டும் என்று மட்டும் நீ ஆசைப்படாதே! அதனால் யாருக்கும் நன்மை உண்டாகாது. ஆகா! இந்தப் பெரிய நகரத்தில் எத்தனை ஆயிரம் வீடுகள் இருக்கின்றன? எத்தனை லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்? அவர்களில் வயோதிகர்களும் குழந்தைகளும் உன்னைப் போன்ற அபலை ஸ்திரீகளும் எத்தனை பேர்? இந்த நகரத்தைத் தீ வைத்து எரித்தால், இவ்வளவு குற்றமற்ற ஜனங்களும் எத்தனை கஷ்டமடைய நேரிடும்? யோசித்துப் பார்!"

இதையெல்லாம் கேட்ட சிவகாமியின் உள்ளம் பெருங் குழப்பம் அடைந்தது. அந்தச் சமயம் பார்த்து நாகநந்தி அடிகள், "சிவகாமி, இந்தப் பெரியவர் சொன்னதைக் கேட்டாயல்லவா? நடந்து போனதையே நினைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? பழிவாங்கும் எண்ணத்தினால்தான் பிரயோஜனம் என்ன? ஒன்பது வருஷம் நீ விரதம் காத்தது போதாதா? இன்னும் இரண்டு நாளில் இந்தச் சீனத்துப் பெரியவரும் வாதாபிச் சக்கரவர்த்தியும் அஜந்தாவுக்குப் போகிறார்கள். அவர்களுடன் நானும் போகிறேன். அங்கே பெரிய கலைத் திருவிழா நடக்கப் போகிறது. நீயும் எங்களுடன் வா, போகலாம்! உலகத்திலே எங்கும் காண முடியாத அதிசயங்களையெல்லாம் அங்கே நீ காண்பாய்!" என்றார்.

ஒருகணம் சிவகாமியின் கலை உள்ளம் சலனம் அடைந்துவிட்டது. 'ஆகட்டும், சுவாமி! வருகிறேன்!' என்று சொல்ல அவள் மனம் ஆசைப்பட்டது. ஆனால், அவளுடைய உதடுகள் அந்த வார்த்தைகளை வெளிப்படுத்த மறுதலித்து விட்டன.

அவளுடைய உள்ளத்தின் அந்தரங்கத்திலே ஒரு மெல்லிய குரல், "சிவகாமி! இது என்ன துரோகம் நீ எண்ணுகிறாய்? மாமல்லர் அழைத்தபோது அவருடன் போக மறுத்துவிட்டு, இப்போது இந்தப் புத்த பிக்ஷுக்களுடனே புறப்படுவாயா? நீ அஜந்தா போயிருக்கும் சமயம் ஒருவேளை மாமல்லர் இங்கு வந்து பார்த்து உன்னைக் காணாவிட்டால் அவர் மனம் என்ன பாடுபடும்?" என்று கூறியது.

சிவகாமி சலனமுற்ற தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "பிக்ஷுக்களே! இந்த அநாதைப் பெண் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டதன் பொருட்டு மிக்க வந்தனம். ஆனால், அஜந்தா மலையில் அதிசயங்களைப் பார்க்க அடியாள் கொடுத்து வைத்தவள் அல்ல. இந்தச் சீன தேசத்துப் பெரியார் சொன்ன ஒரு விஷயத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். என் சபதம் நிறைவேற வேண்டுமென்று இனி நான் ஆசைப்பட மாட்டேன். இந்த வாதாபி நகரும் இதில் வாழும் ஜனங்களும் ஒரு துன்பமும் இன்றிச் செழித்து வாழட்டும்! அவர்களுக்கு என்னால் எந்தவிதமான கெடுதலும் நேர வேண்டாம். ஆனால், அடியாள் என் வாழ்நாளை இந்த வீட்டிலேயேதான் கழிப்பேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த நகரை விட்டு வெளியேறுவதற்கு உடன்பட மாட்டேன்!" என்றாள்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

பவள வியாபாரி

நாகநந்தியும் சீன யாத்திரீகரும் போன பிறகு சிவகாமி சற்று நேரம் கற்சிலையாக சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

பழைய ஞாபகங்கள் ஒவ்வொன்றாக வந்து போய்க் கொண்டிருந்தன.

திருப்பாற்கடல் ஏரி உடைப்பு எடுத்



தனும், அந்தப் பெருவெள்ளத்தில் தான் முழுகி இறப்பதற்கு இருந்ததும், மாமல்லர் நல்ல தருணத்தில் வந்து பானைத் தெப் பத்தில் தன்னை ஏற்றிக் கொண்டு காப் பாற்றியதும் நேற்று நடந்தது போல் நினைவு வந்தன.

அந்தப் பெருவெள்ளத்தில் முழுகி உயிர் துறக்காத தான்





அருள்வாக்கு

க்ருஷ்ண யஜுஸில் உள்ள தைத்திரீயோபநிஷத்திலும் தானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.

அது என்ன சொல்கிறது? ''சிரத்தையோடு தானம் கொடுக்க வேண்டும். அசிரத்தையோடு கொடுக்கக் கூடாது'' என்கிறது.



ஸ்ரீயை (அதாவது செல்வத்தை)க் கொடுக்கும்போதே, மனஸை ஸ்ரீயாக (லக்ஷ்மீகரமாக, மங்களமாக, ஸந்தோஷமாக) வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டும் என்கிறது. முகத்தைச் சுளிக்காமல் கொடுக்க வேண்டும். ஸ்ரீயில் (செல்வத்தின்) நிறைவுதான் 'ச்ரேயஸ்' என்பது. மனஸில் ஸ்ரீயுடன் மனமலர்ச்சியுடன் கொடுத்தால் இந்த தானத்தின் பலனாக 'ச்ரேயஸ்' கிடைக்கிறது. இன்னும் ஜாஸ்தி கொடுப்பதற்கு நம்மால் முடியவில்லையே என்று வெட்கத்தோடு கொடுக்க வேண்டும். 'ஹ்ரீ'யுடன் கொடு என்கிறது உபநிஷத். ''ஹ்ரீ'' என்றால் வெட்கம், லஜ்ஜை என்று அர்த்தம். புருஷ ஸூக்தத்தில் பகவானுக்கு ஹ்ரீ, ஸ்ரீ(லக்ஷ்மி) என்று இரண்டு பத்னிகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. இங்கேயும் லக்ஷ்மியை அதாவது பொருளைத் தரும்போது ''ஸ்ரீயோடு கொடு'', ''ஹ்ரீயோடு கொடு'' என்று சொல்லியிருக்கிறது. வெட்கம் இரண்டு காரணத்துக்காக, ஒன்று, இன்னும் ஜாஸ்தி தர முடியவில்லையே என்று: இரண்டாவது, தானம் பண்ணுவது வெளியிலேயே தெரியக் கூடாது என்ற கௌரவமான கூச்சம். வெளியில் தெரிந்தால் மற்றவர்களும் 'தேஹி' என்று பிடுங்குவார்களோ என்பதால் அல்ல. இவன் தர்மிஷ்டன் என்று நாலு பேருக்குத் தெரிந்து நம்மை ஸ்தோத்ரம் பண்ண ஆரம்பித்தால் நமக்கு அஹம்பாவம் வந்து விடும். அது தானத்தின் பலனையெல்லாம் சாப்பிட்டு விட்டுப் போய்விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

இந்த வீட்டு முற்றத்திலிருந்த கிணற்றுத் தண்ணீரில் மூழ்கி உயிர் விடப் போவதை நினைத்தபோது, சிலையை ஒத்திருந்த அவளுடைய அழகிய முகத்தில் இலேசாகப் புன்னகை அரும்பியது.

'கிணற்றிலே விழும்போது எப்படியிருக்கும்? விழுந்த பிற்பாடு எப்படியிருக்கும்? தண்ணீருக்குள் மூச்சடைத்துத் திணறும்போது தனக்கு என்னென்ன நினைவுகள் உண்டாகும்? மண்டபப்பட்டுக் கிராமத்தருகில் பானைத் தெப்பம் மோதிக் கவிழ்ந்து தான் தண்ணீரில் மூழ்கியபோது, தன்னை மாமல்லர் காப்பாற்றினாரே, அந்தச் சம்பவம் நினைவுக்கு வருமா?'

இப்படி எண்ணியபோது வீதியில், "பவளம் வாங்கலையா, பவளம்!" என்று கூவும் சப்தம் கேட்டது.

சிவகாமி சிறிதும் சம்பந்தமில்லாமல், 'ஆமாம்! பவளமல்லி மலர்ந்துதான் இருக்கிறது! நான் கிணற்றில் விழுந்து இறந்த பிறகும் அது மலர்ந்து கொண்டுதானிருக்கும்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

மறுபடியும் வீட்டு வாசலில், "பவளம் வாங்கலையா பவளம்!" என்று சப்தம் கேட்டது.

ஏனோ அந்தக் குரல் சிவகாமிக்கு மெய் சிலிர்ப்பை உண்டாக்கியது. ஏற்கனவே எப்போதாவது கேட்ட குரலா என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் பவள வியாபாரி வீட்டுக்குள்ளேயே வந்து, "அம்மா பவளம் வேண்டுமா? அபூர்வமான உயர்ந்த பவளம்! அஜந்தா வர்ணத்தையும் தோற்கடிக்கும் அழகிய பவளம்!" என்றான்.

அஜந்தா என்றதும் மறுபடியும் சிவகாமி திடுக்கிட்டு அந்த வியாபாரியின் முகத்தை - தாடியும் மீசையும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த முதிர்ந்த முகத்தை உற்று நோக்கினாள். ஆ! அந்தக் கண்கள் அன்போடும் பக்தியோடும் அவளை உற்றுப் பார்த்த அந்தக் கண்கள்...!

"அம்மா! என்னைத் தெரியவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே பவள வியாபாரி நெருங்கி வந்து உட்கார்ந்து தான் கொண்டு வந்த பவள மூட்டையை அவிழ்த்தான்.

குண்டோதரனுடைய குரல்தான் அது என்பதைச் சிவகாமி தெரிந்து கொண்டாள்.

இருந்தாலும், தன் கண்களையும், காதுகளையுமே நம்ப முடியாதவளாய், "யார், குண்டோதரனா?" என்றாள்.

"ஆம்! நான்தான், அம்மா! அடியேனை மறந்து விட்டீர்களா?" என்று குண்டோதரன் பணிவுடன் கேட்டான்.

"ஆமாம், அப்பனே! மறந்துதான் போயிற்று. நீங்கள் திரும்ப வருவதாகச் சொல்லி விட்டுப் போய் வருஷம் கொஞ்சமாக ஆகவில்லையே?" என்றாள் சிவகாமி சிறிது எரிச்சலுடன்.

"அம்மா! வெறுமனே திரும்பி வந்தால் போதுமா? தங்களுடைய சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாய் வர வேண்டாமா?" என்றான் குண்டோதரன்.

"ஆகா சபதம்! பாழும் சபதம்!" என்றாள் சிவகாமி, குண்டோதரனைப் பார்த்து. "சபதத்துக்கு நான் ஒரு முழுக்குப் போட்டு விட்டேன், குண்டோதரா!" என்றாள்.

குண்டோதரன் விஷயம் விளங்காதவனைப் போல் வெறித்துப் பார்த்து, "அம்மா! என்ன சொல்கிறீர்கள்?" என்று வினவினான்.

"வேறு ஒன்றுமில்லை, அப்பா! நான் செய்த சபதந்தானே? அதை நானே கைவிட்டு விட்டேன்!"

"அப்படிச் சொல்ல வேண்டாம். அம்மா! தாங்கள் செய்த சபதம் தமிழகமே செய்த சபதம், அதை நிறைவேற்றி வைப்பது எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட பொறுப்பு!"

"சபதத்தை நிறைவேற்றத்தான் நீ இந்த வேஷத்தில் வந்திருக்கிறாயா? அதற்காகத்தான் பவளம் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று ஏளனப் புன்னகையுடன் சிவகாமி கேட்டாள்.

"தாயே! இராம தூதனாகிய அநுமான் சீதாதேவியிடம் வந்தது போல் நான் வந்திருக்கிறேன். இராமபிரான் பின்னால் ஒரு பெரிய சேனா சமுத்திரத்துடன் வரப் போகிறார்!" என்றான்.

சிவகாமியின் தேகம் உணர்ச்சி மிகுதியினால் நடுங்கிற்று. ஆகா! ஒன்பது வருஷம் காத்திருந்தது உண்மையிலேயே பயனுள்ளதாகப் போகிறதா? மாமல்லர் தன்னை அழைத்துப் போக வரப் போகிறாரா? தன்னை விழுங்கி ஏப்பம் விடலாமென்று எண்ணியிருந்த முற்றத்துக் கிணறு ஏமாற்றமடையப் போகிறதா?

"ஆம், அம்மா! தென்னாடு இது வரையில் என்றும் கண்டிராத மகத்தான பல்லவ சைனியம் ஆயத்தமாயிருக்கிறது. அந்தச் சைனியத்தின் முன்னணியில் நின்று மாமல்ல சக்கரவர்த்தியும் சேனாதிபதி பரஞ்சோதியும் வரப் போகிறார்கள்!" என்று குண்டோதரன் தொடர்ந்து சொன்னான்.

"என்ன, மாமல்ல சக்கரவர்த்தியா?" என்று சிவகாமி திடுக்கிட்டுக் கேட்டாள்.

"மன்னிக்க வேண்டும். அம்மா! தாங்கள் திடுக்கிடும்படி செய்து விட்டேன். மாமல்லப் பிரபுதான் இப்போது பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. மகேந்திர பல்லவர் கைலாசவாசியாகி இன்றைக்குப் பல ஆண்டுகள் சென்றுவிட்டன."

இதைக் கேட்டதும் சிவகாமியின் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் பொழிந்தது.

மகேந்திர பல்லவர் மீது பிற்காலத்தில் அவள் பல காரணங்களினால் கோபப்பட நேர்ந்தது உண்மைதான். ஆனாலும் குழந்தைப் பருவத்தில் அவர் மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த அபரிமிதமான அன்பும் பக்தியும் அழிந்து போய் விடவில்லை.

சிவகாமியின் துக்கத்தினிடையே குறுக்கிட மனமில்லாமல், குண்டோதரன் சற்று நேரம் சும்மா இருந்தான்.


சிவகாமி திடீரென்று விம்மலை நிறுத்தி, "குண்டோதரா! உன்னை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன். என்னால் இனி ஒரு கண நேரமும் இந்த நகரில் இருக்க முடியாது. இப்போதே என்னை அழைத்துக்கொண்டு போய் விடு!" என்றாள்.

குண்டோதரன் திகைத்து நிற்பதைச் சிவகாமி பார்த்து, "என்ன யோசிக்கிறாய்? அதற்கு வசதியும் இப்போது நேர்ந்திருக்கிறது. புலிகேசி, கள்ள பிக்ஷு எல்லாம் இன்னும் இரண்டு நாளில் அஜந்தாவுக்குப் போகிறார்களாம். இப்போதெல்லாம் இங்கே கட்டுக் காவல் ஒன்றும் அதிகம் கிடையாது. சுலபமாகத் தப்பித்துக் கொண்டு போகலாம். அப்படி என்னை அழைத்துப் போக உனக்கு இஷ்டமில்லாவிட்டால், இந்த வீட்டுக் கொல்லை முற்றத்தில் பவளமல்லிச் செடிக்கருகில் ஆழமான கிணறு ஒன்று இருக்கிறது. என் மேல் கருணை வைத்து அதில் என்னைத் தள்ளி விட்டுப் போய் விடு...!" என்று சொல்லிவிட்டு மீண்டும் விம்மத் தொடங்கினாள்.

(தொடரும்)

நல்லிணக்க (வி)நாயகர்!

பர்தாவைத் தலையில் சுற்றிக் கொண்டு, கணவர், குழந்தையுடன் அர்ச்சனைத் தட்டுடன் உள்ளே நுழையும் அந்தத் தம்பதியைப் பார்த்து, அறங்காவலர் குழுத் தலைவர் வைத்திய நாதனுக்கு ஆச்சரியம் ஏதும் உண்டாகவில்லை. காரணம் பல இஸ்லாமியர்கள் குடும்பத்துடன் வந்து அர்ச்சனை செய்வதும், விநாயகர் அருளைப் பெறுவதும் வாடிக்கையாக நடக்கும் ஒன்று.





ஆனால் அந்தப் பெண்மணி அர்ச்சனை செய்து முடித்தவுடன், சன்னதியில் சரியாக ஒன்பது முறை சுற்றியது தான் வைத்தியநாதனுக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. சுற்றி முடித்த பின் அந்தக் குடும்பம் பிராகாரத்தில் உட்கார்ந்தது. ஆவலைக் கட்டுப்படுத்த முடியாத அறங்காவலர் குழுத் தலைவர் மணியக்காரரை அனுப்பி, "எதற்காக ஒன்பது சுற்று?'' என்று விசாரித்து வரச் சொன்னார். அந்தப் பெண்மணி சொன்ன தகவல் மிகவும் விசித்திரமாக இருந்தது.

அவரது கனவில் நெடு நாட்களாக சிங்கம் ஒன்று வந்து தொந்தரவு செய்து வருவதாகவும், இதன் காரணமாகத் தூக்கம் தடைப்பட்டு, பயத்தில் நடுக்கம் வருவதாகவும் சொன்ன அவர், ஒரு நாள் சிங்கக் கனவைத் தொடர்ந்து யானை ஒன்று வந்ததாகவும், மணக்குள விநாயகரை ஒன்பது முறை சுற்றினால் கெட்ட கனவுகள் ஓடிப்போகும்" என்று அந்த யானை சொன்னதாகவும் சொன்னார் பெண்மணி. எனவேதான் ஒன்பது சுற்றாம்!


மணக்குள விநாயகர் அந்த இஸ்லாமியப் பெண்மணியின் கனவில் மட்டுமல்ல, லட்சக்கணக்கான மக்களால் வணங்கப்படும், போற்றப்படும் **அன்னையின்** கனவிலும் வந்துள்ளார். இதை அன்னையே குறிப்பிட்டுள்ளார். மணக்குள விநாயகர் கோயிலை ஒட்டி இருந்த வீட்டை அரவிந்தர் ஆஸ்ரமம் விலைக்கு வாங்கியது. வீட்டையொட்டி இருந்த கோயில் பிரகாரம் மிகக் குறுகியதாக இருந்தது. ஒருவர் மட்டுமே செல்லக் கூடிய அளவில் இருந்ததால் பண்டிகை நாட்களில் பக்தர்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஒரு நாள் கண்களைக் கூச வைக்கும், தக, தக ஒளிவட்டத்தோடு ஆனை முகத்தான் அன்னைக்குக் காட்சி அளித்தார். பிராகாரத்தில் பக்தர்களுக்கு உண்டாகும் சிரமத்தைக் குறைக்க, இடம் கொடுக்குமாறு கட்டளையிட்டார். அடுத்த சில நாட்களில் அன்னை நூற்றி இருபது அடி நீளத்திற்கும் பன்னிரண்டு அடி அகலத்திற்கும் ஆஸ்ரம இடத்தை விநாயகருக்குக் கொடுத்துவிட்டார்.

இன்று விநாயகரின் வலது பக்க பிராகாரம் தாராளமாக இருக்கிறது.

கிடைத்திருக்கும் வரலாற்றுச் சான்றுகளின்படி விநாயகர் ஐந்நூறு வருடங்களாக புதுவையில் அருள்பாலித்து வருகிறார். அவர் 'மணக்குள' விநாயகர் அல்லவாம். 'மணற்குள' விநாயகராம். கோயில் இப்போது இருக்கும்



• பட்டைத் தீட்டும் இஸ்லாமியர்கள்



வைத்தியநாதன்

இடத்தில் மணல் சூழ்ந்த குளம் இருந்ததாம். அதன் கரையில் விநாயகர் ஜம்மென்று அமர்ந்திருந்தாராம். இப்போதும் மூலவரின் வலது பக்கத்தில் ஓர் அடிச் சதுரத்தில் துவாரம் ஒன்று உள்ளது. அதில் எப்போதும் தண்ணீர் சலசலத்துக் கொண்டேயிருக்கிறது. அந்தத் தண்ணீரை எடுத்து அபிஷேகத்துக்குப் பயன் படுத்துகிறார்கள். வற்றாமல் இருக்கிறதாம் அது. ஆனந்த ரங்கம் பிள்ளை தமது டயரியில் கூட மணற் குளம் என்றே குறிப்பிட்டுள்ளார்.

ஜாதி மத வித்தியாசமில்லாமல், சகல தரப்பினரையும் பக்தர்களாகக் கொண்டுள்ளார் இந்த நல்லிணக்க (வி)நாயகர். அர்ச்சனைப் புத்தகத்தைப் பார்த்தால் அநேக கிறிஸ்துவப் பெயர்கள்! இவரது பாரம்பரிய வாசனையோ என்னவோ, இப்போது தங்கத் தேர் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இஸ்லாமியர்கள். எல்லோரும் ஹைதராபாத்திலிருந்து வந்து விநாயகர் கோயிலின் மாடியில் தங்கிக் கொண்டு வேலை செய்கிறார்கள். அதிலும் சாப்பாட்டு விஷயத்தில் விரதத்தை மேற்கொண்டு, கிட்டத்தட்ட ஒன்பது கிலோ தங்கத்தை தங்க ரேக்குகளாக, (அதாவது மிக மெல்லிய பட்டைகளாக, தங்கக் கட்டிகளை மாற்றுவது) உருவாக்குகிறார்கள் இவர்கள். இந்தத் தங்க ரேக்குகள் தேரின் செப்புப் பட்டைகள் மீது ஒட்டப்படும். இந்த வகையில் இந்தியாவிலேயே மிகத் தேர்ந்த கலைஞர்கள் ஹைதராபாத்தில் தான் இருக்கிறார்களாம். ஏற்கெனவே மாங்காடு, திருவண்ணாமலை, காளஹஸ்தி போன்ற ஸ்தலங்களில் தங்க ரேக்குகளை இவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்களாம். "நாங்கள் இந்து, முஸ்லிம் என்ற வேற்றுமை பார்ப்பதில்லை. இறைவன் ஒருவனே, இந்தியர்கள் என்ற உணர்வு தான் எங்களுக்கு இருக்கிறது" என்கிறார் தலைமைக் கலைஞர் முகமது உஸ்மான். "பாபர் மசூதி பிரச்னை" என்று அவரை இழுக்க நாம் முயற்சி செய்தால், "அதெல்லாம் வேண்டாம் ஸார் நமக்கு. அது அரசியல்" என்றபடி மௌனமாகிறார் உஸ்மான்.



கிட்டத்தட்ட பத்து வருடங்கள் புதுவையில் பாரதியார் வாழ்ந்தபோது மணற்குள விநாயகர் கோயிலுக்கு அவர் ரெகுலர் விஸிட்டர். "மணக்குள விநாயகர் நான்மணி மாலை" என்று பக்தி கமழும் கவிதை மாலை சூட்டியிருக்கிறார் பாரதியார். அதில் ஓர் இடத்தில் "பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்" என்று சொல்கிறார் பாரதியார். "அவரது கனவை மூலஸ்தான விமானத்திற்கு தங்க முலாம் பூசியதன் மூலம் நிறைவேற்றி விட்டோம்" என்று பெருமிதப்பட்டுக் கொள்கிறார் அறங்காவலர் தலைவர் வைத்தியநாதன்.

— ஸ்ரீநி

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்

சென்னையில் லாலு!

நல்லெண்ணக் குழுவுடன் பாகிஸ்தான் போன லாலுஜி, லாகூரில் கலகலப்பூட்டியிருக்கிறார்... அவர் சென்னை வந்தால்...?

விமான நிலையத்தில்:

டி.வி. நிருபர்கள் மைக்கை லாலு முகத்தில் இடிக்கிற மாதிரி நீட்ட, கோபத்துடன் எல்லாவற்றையும் ஒரு தள்ளுத் தள்ளுகிறார்.

எல்லோரும் மிரண்டு விலகிப் போக, ஒரு பசு மாட்டைப் பிடித்து வந்த தமிழக ஆர்.ஜே.டி. தலைவர் பாலைக் கறந்து சொம்பில் கொடுக்க, லாலு மடக், மடக்.

நிருபர்: நீங்க உங்க மனைவியை முதல மைச்சராக்கி, விளையாட்டுப் போல மூணு வருஷம் ஆயிட்டுது. இப்படியே மீதி நாளையும் தள்ளிடலாம்னு நினைக்கறீங்களா?

லாலு: கணவன் ஆண்டா என்ன? மனைவி ஆண்டா என்ன? பீகார்ல என்ன பெரிசா வித்தியாசம் தெரிஞ்சுடப் போவுது?

நிருபர்: உங்க பாட்னாவுல அடிக்கடி யாரையாவது கடத்திட்டுப் போய் பிரச்னை பண்றாங்களே, நிறுத்த முடியாதா?

லாலு: கடத்திட்டுப் போனா என்ன? ஒரு வாரமோ, பத்து நாளோ கழிச்சு அவங்களே வெறுத்துப் போய் விட்டுடறாங்களே? உங்க வீரப்பன் மாதிரி காசட்டா அனுப்பறாங்க? இல்லே ஆளை வெட்டிக் காட்டுல போடறாங்களா?...சரி, வீரப்பனைப் புடிச்சுட்டாங்களா?

நிருபர்: வீரப்பனுக்குப் புடிச்சவங்களைப் புடிச்சிட்டாங்க!

லாலு: ஆளை உடுங்கடா சாமி! *(ஓடுகிறார்)*

தி.நகரில், புடைவைக் கடைசியில்:

நல்லி: லாலுஜியா, வாங்க, வாங்க! வணக்கம். எத்தனை புடைவை வேணும்னாலும் நீங்க தாராளமா எடுத்துக்கலாம்!

லாலு: நான் புடைவை கட்டறதில்லே நல்லிஜி.

நல்லி: நீங்க ஜரிகை வேட்டி கட்டுங்க. ராப்ரி தேவிக்குப் பட்டுப் புடைவை எடுத்துட்டுப் போங்க. காஞ்சிபுரம் பட்டு...

லாலு: ஃப்ரீயாவா கொடுக்கறீங்க? சீக்கிரம்... சீக்கிரம் நாலு புடைவை பாக் பண்ணிக் கொடுங்க. காஞ்சிபுரம் வேற போகணும். தரிசனம் பண்ணணும்.

நல்லி: பெரியவரைப் பார்க்கப் போறீங்களா? அவரே பீகாருக்கு வரணும்னு சொல்லிட்டிருந்தார்!

லாலு: தொகாடியாவும், கிரிராஜ் கிஷோரும் வந்த வேகத்துலயே திரும்பிப் போனதைப் பார்த்துமா அவர் பீகார் வர ஆசைப்படறார்? நீங்க வர்ரதா இருந்தா சொல்லுங்க. ஒரு சபா ஆரம்பிச்சு உங்களைத் தலைவரா போட்டுடறோம். கர்னாடிக் மியூசிக் கச்சேரி வச்சுடுவோம்.. நான் தரிசனம் பண்ணணும்னு சொன்னது காஞ்சி காமாட்சி அம்மனை!

நல்லி: அப்போ, போயஸ் கார்டன் போய் தரிசனம் பண்ண வேண்டாமா?

லாலு: அய்யோ, இவர் நம்மை வம்புல மாட்டாம விட மாட்டார் போல இருக்கே! ஒண்ணு, ரெண்டு குறைஞ்சாலும் கொடுக்கிறதை சீக்கிரமா பாக் பண்ணிக் கொடுங்க நல்லிஜி!

நல்லி: *(பொட்டலத்தைக் கொடுத்து விட்டு)* அப்போ கோபாலபுரம் போறீங்களா?

(பாக்கெட்டை வாங்கிக் கொண்டு தலை தெறிக்க ஓடுகிறார் லாலு)

அண்ணா நகர் டவர் பூங்காவில் ஆசுவாசமாக உட்கார்ந்து, புடைவை பாக்கெட்டைப் பிரித்து, ஒரு புடைவைய எடுத்துப் பிரித்துப் பார்க்கிறார் லாலு. நாலு போலீசார் அவரை மடக்கிவிடுகிறார்கள்.

போலீஸ்: ஏறுங்க வேன்ல. இது பப்ளிக் பார்க். இங்க யாருக்குப் புடைவை கொடுக்க வந்தீங்க?

லாலு: இது பப்ளிக் பார்க்தானே?

போலீஸ்: பப்ளிக் பார்க்னா யாரும் வரக்கூடாது. முக்கியமா ஆணும் பெண்ணும்.

லாலு: இங்க நான் மட்டும்தானே இருக்கேன்? ராப்ரிகூட இல்லியே?

போலீஸ்: நீங்க இருக்கீங்க. உங்களோட, புடைவையும் இருக்கு. என்ன அர்த்தம்? பப்ளிக் பார்க்னா புல்-பூண்டு, செடி-கொடிதான் இருக்கலாம்.

லாலு: அதா பாருங்க ஒரு ஜோடி ஒண்ணும் தெரியாம வருது.


(அவர்கள் திரும்பவும், பீனாமோன்

ரேஞ்சில் ஓட்டம் பிடிக்கிறார் லாலு!)

தமிழக ஆர்.ஜே.டி. **தலைவர்:** தலைவா, உங்களை எங்க எல்லாம் தேடறது? எங்க போய்ட்டீங்க தலைவா? ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், சோ. பாலகிருஷ்ணன் எல்லாம் உங்களைத் தேடோ தேடுன்னு தேடறாங்க. நீங்க சரின்னா, மயிலை மாங்கொல்லைலே அம்மாவைக் கண்டிச்சு ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் போடணும்ங்கறாங்க!

லாலு: நல்ல வேடிக்கையா இருக்கே? எதுக்கு சோனியா எதுக்குங்க? மாட்டுத் தீவன வழக்கு ஒரு வழியா முடியட்டுங்க. அப்புறமா பீகாரை அமெரிக்கா ஆக்கிடலாம்!

(தலையில் ஒரு முண்டாசைக் கட்டிக் கொண்டு, யார் கண்ணிலும் படாமல் விமானத்தைப் பிடிக்க ஓடுகிறார் லாலு.)



அன்று மாலை செய்தித்தாள்களில், அமைச்சர்கள் கூட்டாகக் கையெழுத்திட்ட அறிக்கை இப்படி வெளியாகிறது:

''பீகாரிலிருந்து இங்கே ரகசியமாக வந்து எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் சந்தித்துப் பேசிவிட்டுப் போயிருக்கிறார் ஆர்.ஜே.டி. தலைவர் லாலு பிரசாத் யாதவ். இவருக்குத் தைரியம் இருந்தால் தமிழக முதல்வர், இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கோட்டையிலோ, தோட்டத்திலோ சந்தித்து ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் ஏமாளிகள் என்று அவர் நினைத்திருந்தால், அவர் ஒரு கோமாளி என்று நாங்கள் சொல்ல அதிக நேரம் ஆகாது. இனியாவது, மாண்புமிகு பீகார் முதல்வர் ராப்ரி தேவியின் கணவர், இதுபோன்ற ரகசிய வேலைகளில் ஈடுபடக் கூடாது என்று அடக்கத்துடன் எச்சரிக்கிறோம்!''

காந்தியை காங்கிரஸ்காரங்களே கூட்டம் போட்டுக் கண்டிக்கணும்?

தலைவர்: சோனியாம்மா இல்லேங்க. இங்கே அம்மான்னா முதலமைச்சர்தான். *(பாடுகிறார்)* அம்மா என்றழைக்காத...

லாலு: யோவ், நிறுத்து. பாட்டை நிறுத்து. என்னை மறுபடி ஏர்போர்ட்டுல கொண்டு போய் உட்டுடு. நான் ஒழுங்கா பாட்னா போய்ச் சேர்ந்தா போதும். என்னமோ இந்தியாவுல தமிழ்நாடுதான் நெம்பர் ஒன் ஸ்டேட்னு சொல்றாங்களே, அது மாதிரி பீகாரையும் பண்ண முடியுமான்னு பார்த்துட்டுப் போக வந்தா, ஆளாளுக்குப் பிரச்னைல மாட்டிவுடப் பார்க்கறாங்களே!

தலைவர்: நெம்பர் ஒன் எல்லாம் உங்களுக்கு

கற்பனை : **சாருகேசி**

"கேமராமேனிடமும் கதை சொல்லணும்"

"கேமரா ஒரு டெக்னிக்கல் சயின்ஸ். ஒரு படத்தின் கதைக் குழுவுக்கு கிரியேட்டிவிட்டி எவ்வளவு முக்கியமோ, அதுக்கு இணையா கேமரா மேனும் கிரியேட்டிவிட்டி உள்ளவரா இருக்கணும்" என்கிறார் ஒளிப்பதிவாளர் ஆர்.டி. ராஜசேகர். 'காக்க காக்க' படத்தின் மூலம் பரபரப்பாகப் பேசப்படுகிறவர்.



★ ஆர்.டி. ராஜசேகர்



ஒளிப்பதிவு மற்றும் சினிமாக் கலைஞர்களின் புத்தகங்களுக்கு மத்தியில் ஒரு தேடலாளனைப் போல தமது வீட்டில் அமர்ந்திருந்தார் ராஜசேகர்.

"ஒரு பெரிய ஒளிப்பதிவாளர்கிட்ட உதவியாளரா சேர்ந்து நாலு படம் வேலை பண்ணிட்டு, ஐந்தாவது படம் தனியா ஒளிப்பதிவு செய்ய வந்திடறது ஈஸிதான். ஆனா அதுல பூரணத்துவம் இருக்காது. கனவு வேணும். காலையில எழுந்திரிச்சு சூரியனைப் பாத்தா அது சூரியனா மட்டும் தெரியக் கூடாது. படர்ந்து தெரியற வண்ணங்கள். ஒளியின் ஊடுருவல், கடலோ வீடோ... இன்னும் நிறைய விஷயங்கள் கண்ணுல நுழைஞ்சு மனசுல தைக்கணும். அப்படித் தைச்சாதான் உங்க மனசை சினிமாவுல காட்ட முடியும்" என்கிற ராஜசேகர், மின்னலே, ரெட், படங்களுக்கு ஏற்கெனவே ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

"காக்க காக்க"வில் முதல் பாதி படம் வரை ஒரு ப்ளூ கலர் பரவித் தெரியும். அது வேணும்னு வச்சதுதான். புதுமையா செய்யணும்னு பண்ணினோம். கதையும் அப்படிப்பட்டதுதானே? படத்தின் ஆரம்பத்துல இருந்தே ஒரு தேடல் இருக்கும். அந்த டெம்போ குறையாம இருக்கறதுக்காக கேமராவை தலைமேலயும், தோள்மேலயும் வச்சு ஷூட் பண்ணினோம். ஜீப் பாடலுக்கு தமிழ்ல இதுவரை பண்ணாத புது முயற்சி

பண்ணியிருக்கேன். புது விஷயங்கள் ஃப்ளாப் ஆக வாய்ப்பிருக்கு. டைரக்டர்ல யிருந்து எல்லாரும் முதல்ல சம்மதிக்கணும். அதுக்கப்புறம்தான் இறங்க முடியும். டைரக்டர் கௌதம் என்னோட நண்பர்ங்கற தால எனக்கு முழு சுதந்திரம் கொடுத்தார். ஒரு வாரிமேல ஜிம்மி ஜிப் கிரேனை வச்சு, ரொம்ப ரிஸ்க் எடுத்து பண்ணியிருக்கோம். அதுக்கு நல்ல வரவேற்பு. 'டிராபிக்' ஆங்கில பட இன்ஸ்பிரேஷன்தான் இந்தக் காட்சிக்கு அடிப்படை.

"டைரக்டர் கௌதம் என்னைப் பார்க் கும்போதெல்லாம் இந்தப் படத்தோட கதையைச் சொல்லிட்டே இருப்பார். கதை முழுசா மனசுல பதிஞ்சுபோச்சு. அதுக்கப் புறம் இந்தக் கதைக்கு என்னென்ன பண்ண லாம்னு ரொம்ப வொர்க் பண்ணினேன். அந்தக் கடின உழைப்பின் பலனைப் படத் தோட வெற்றி சொல்லுது. பெரும்பாலான இயக்குனர்கள் ஈகோ பாத்துக்கிட்டு, ஒளிப் பதிவாளர் கிட்ட கதை சொல்றதில்லை. இவர்ட்ட ஏன் கதை சொல்லணும்னு நினைக்கிறாங்க. இது தப்பு. கேமராமேனுக் கும் கதை தெரிஞ்சாதான் நல்லா பண்ண

நல்லா 'ஷைன்' பண்ணலா மேன்னு சொன்னாங்க. அது வரை சினிமா பற்றி பெரிய பிரமையும் பயமும் இருந்த மனசுக்குள்ள ஆசை வந்துச்சு. டி.எஃப்.டி. சேர்ந்து முடிச் சேன்'' என்கிறார் ராஜீவ் மேனனின் இந்தச் சிடர்.

ஒவ்வொரு கேமராமேனும் லைட்டிங், வண்ணம், இது மாதிரி எதிலாவது ஒன்றில் அதிக கவனம் செலுத்துவார் கள்? இவர் எப்படி?

"காம்போசிஷனுக்குத்தான் நான் அதிகமா முக்கியத்துவம் கொடுக்கிறேன். படத்துல ஒரு கேரக்டர் பேசினா, அது நேரா பார்வையாளர்ட்ட வந்து பேசறா மாதிரி இருக்கும். 'காக்க காக்க' வுல அப்படி நிறையக் காட்சி கள் இருக்கு. கண்ணுக்குத் தெரி யாம 3டி எபெக்ட் பண்ணி யிருக்கோம்'' என்கிற ராஜ சேகர், மலையாள இயக்குனர்



* 'காக்க காக்க' ஷூட்டிங் ஸ்பாட்டில்...

முடியும்.'' என்கிற ராஜசேகர், மயிலாடுதுறை அருகிலுள்ள குத்தாலத்தைச் சேர்ந்தவர்.

தான் சினிமாவுக்கு வந்ததுக்குக் காரணமே எழுத்தாளர் கோமல் சுவாமி நாதனும் கவிஞர் இளையபாரதியும்தான் என்கிறார் இவர்.

"படிச்சிட்டிருக்கும்போதே 'கேமரா'ன்னு கையெழுத்துப் பத்திரிகை நடத்திட்டிருந்தோம். அதுக்காக மயிலாடுதுறை வந்திருந்த கோமல் சுவாமிநாதனையும், இளையபாரதியையும் பார்க்கப் போனோம். அந்தப் பத்திரிகை யைப் பாத்துட்டு நீங்க சினிமாவுக்கு வந்தா

ஜெயராஜின் அடுத்த படத்துக் குத் தற்போது ஒப்பந்தமாகி யிருக்கிறார்.

"ஜெயராஜ் சார் நிறைய விருதுகள் வாங்கின இயக்குனர். சர்வதேச லெவல்ல அவரோட படங்கள் பேசப்பட்டிருக்கு. அப்படியான இயக்குனர் என் ஒளிப்பதிவைப் பார்த்துட்டு, தன் னோட படத்துக்குக் கூப்புடுறதே பெரிய விஷயமா நினைக்கிறேன்.''

- ஏக்நாத்

சுவைக்கு உணவுக்குத் தடை!

ஸ்ரீரங்கம் கௌரிலக்ஷ்மிக்கு முதலில் நன்றி சொல்லிவிடுகிறேன். 'சஹானா' தொலைக்காட்சித் தொடர் பற்றிய எனது தகவல் பிசகைச் சுட்டிக்காட்டியதற்கு. (கல்கி 17.8.2003, வட்டமேஜை, பக்கம் 16) எனினும், சகோதரிக்கு ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்தியாக வேண்டும். யார், யாருக்கு 'ஊற்றிக் கொடுத்தார்கள்' என்கிற ஆராய்ச்சியோ, கதாபாத்திரத்தின் சுய கழிவிரக்கமோ, எனக்கு முக்கியமாகப்படவில்லை. அக்காட்சி நீடித்த நேரமும், ஏற்படுத்திய அருவெருப்புணர்வும் அபாயகரமானவை என்று சுட்டிக்காட்டுவதே சுமியின் நோக்கம். தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆங்கிலப் பெயர்களைச் சூட்டிக் கொண்டால், அவற்றைத் தமிழாக்கும் உரிமை நமக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'**இ**ந்திய நாட்டுப்புற வாழ்வு' என்றொரு இதழ் வெளிவருவது மன்ற உறுப்பினர்களுக்கு அனேகமாகத் தெரிந்திருக்காது. அதில் சித்தர்களின் வாழ்க்கையைப் பற்றிய சுவையான செய்தி ஒன்றைச் சமீபத்தில் படித்தேன்.

சித்தர்கள் சக்தி வழிபாட்டைப் போற்றி, சைவ வழிபாட்டைச் சாடினார்களாம். ஆகவே சைவ சித்தாந்திகளுக்கும் இவர்களுக்கும் சண்டை. சதா, சிவமே என்றிராமல் அவர்கள் இவர்களைத் தாக்க, வெட்ட வெளியில் திரிந்து வாழ்ந்தாலும் இவர்கள் அவர்களைச் சாட, சுவாரஸ்யமாய்ப் பல நிகழ்வுகள் முகிழ்த்திருக்கின்றன.

சைவ சித்தாந்திகள் அண்ட வெளியில் ஆண்டவனைக் கண்டனர். சித்த புருஷர்கள் தங்களுக்குள் இருந்த குண்டலினியை விழிப்புறச் செய்து, பரம்பொருளோடு ஒன்ற வைத்தது சக்தி என நம்பினர். ஆகவே சக்தியே தெய்வம்.

குதம்பைச் சித்தர் பாட்டொன்று பலர் படித்திருக்காவிட்டாலும் கேட்டிருக்கக் கூடும். 'வெட்டவெளி தன்னில் மெய்யென்றிருப்பார்க்கு பட்டயம் ஏதுக்கடி?' என்று ஆரம்பித்து சிண்டைப் பிய்த்துக் கொள்ள வைக்கும் கேள்விகளை, குதம்பையை நோக்கி எழுப்புவார் இவர். (குதம்பைச் சித்தர் என்பது காரணப் பெயர்.)

மேலுக்கு வடிகட்டின வேதாந்தமாகத் தெரியும் இந்தக் கேள்வி சைவ சித்தாந்திகளைக் கிண்டல் செய்வதாகவும் இருக்கலாம். 'வெட்ட வெளியே ஆண்டவன் என்று நம்பினால், ஆலயம், அதற்கான பூமி, நிவந்தங்கள் எல்லாம் எதற்கு?' என்று குதம்பையார் விதண்டாவாதம் செய்திருப்பாரோ?

சித்தர் ரசிகர் மன்றங்களிலிருந்து மறுப்புகளும், விமர்சனங்களும், கண்டனங்களும் வந்தால் மான நஷ்ட வழக்கெல்லாம் போட மாட்டேன்.



வியாகண்ணடர்

சித்தர் பிரிவில் வராவிட்டாலும் அற்புதமான சித்து செய்து சித்தி அடைந்த ஒருத்தரைப் பற்றிய ஹரி கதை. கதை நாயகி காரைக்கால் அம்மையார். பேயுடம்பு வேண்டிப் பெற்றுக் கொண்ட இந்த 'பயங்கர'வாதியின் கதையை, இனிமையும் பக்தியும் கலந்து சொன்னவர் ஒரு சாத்வீகவாதி - கமலா மூர்த்தி. வி. நாராயண அய்யர் நினைவு அறக்கட்டளை இவருக்கு 'ஹரிகதை வாசஸ்பதி' என்ற பட்டமும் கொடுத்துப் பாராட்டியது (ஸரிகமபதநி சங்கீத இதழாசிரியர் நாராயண் விச்வநாதனின் அப்பா நாராயண அய்யர்)





• கமலா மூர்த்தி

கமலா மூர்த்தி சித்து வேலைகளெல்லாம் இன்றி நேரடியாகக் கதை சொல்கிறார். வழக்கமாக இவர் கையாளும் மென்மையான நகைச்சுவைக்கு, காரைக்கால் அம்மையாரின் கதை இடங்கொடுக்கவில்லை.

உலகை இன்று மிக அதிகமாய் அச்சுறுத்தும் உபாதை உடல் எடைப் பெருக்கம்தான் என்று நியூஸ்வீக் (இதையும் தமிழ்ப்படுத்த முடியாது!) அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டதை எத்தனை பேர் படித்தீர்கள்? கடந்த பத்து ஆண்டுகளில் குண்டர்களின் எண்ணிக்கை ஐம்பது சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம். காரணம், உடலுழைப்பு கோராத இருபத்தோராம் நூற்றாண்டின் வாழ்க்கை முறை; அதோடு உணவு மிகுதியும், அது பரவலாகவும் முன்னைக் காட்டிலும் மலிவாகவும் கிடைக்கின்ற சூழ்நிலையும் கூடக் காரணம். ஒட்டிய வயிறும் வற்றிய கன்னமுமாகக் குழந்தைகள் உலாவரும் சில ஆப்பிரிக்க நாடுகளில் கூட, இன்னொரு பக்கத்தில் வேக உணவும் பூத உடலும் பெருகி வருகின்றனவாம். குழந்தைகளைக் கவரும் விதத்தில் உணவைக் காட்சிப்படுத்தி வைக்கும் அங்காடிகளைச் சாடுகிறது இத்தாலிய சுகாதார அமைப்பு ஒன்று.

ரியோ டி ஜெனிரோவில் ஆயிரத்தி முப்பத்தைந்து பள்ளிக் கூடங்கள் சத்தில்லாத சுவைக்கூள உணவுக்குத் தடைவிதித்துள்ளன.

பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய மருத்துவக் கழகங்கள், கொழுப்புச் சத்து மிக்க உணவுகளுக்குக் கூடுதல் வரி (கொழுப்பு வரி?) விதிக்கும்படி சிபாரிசு செய்து வருகின்றன.

குழந்தைகளை இலக்காக்கி தொலைக்காட்சியில் உணவு விளம்பரங்களைத் தயாரித்து வெளியிட, ஸ்வீடன் நாட்டில் தடை இருக்கிறது.

உணவு உற்பத்தி நிறுவனங்கள் புதிய ஆரோக்கிய சமையல் குறிப்புகளைத் தேடிக் கொண்டிருக்கின்றன. பிட்ஸா, பர்கருக்குப் பெயர்போன மெக்டொனல்ட்ஸ், பச்சைக் காய்கறிகளையும் பழங்களையும் அரிந்து வைத்து விற்பனை செய்கிறது. பிரேஸில் நாட்டில், ஆம்பெவ் என்ற உற்சாக பானமும், கோககோலாவும் ஆரோக்கியக் கேடு குறித்த எச்சரிக்கை வாசகங்களை வெளியிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றன....

இப்படியே போனால் இந்தியாவில் என்னாகும் என்று கற்பனை செய்தேன்... நட்சத்திர ஹோட்டல்களில் கேப்பைக் கூழுடன் அருகம்புல் துவையல் தரக்கூடும்; உட்லேண்ட்ஸில் வெண்ணெய் மசாலாவைக் காட்டிலும் வெண்ணெயில்லாத மசாலா தோசைக்கு ஒன்றரை ரூபாய் கூடுதல் விலை இருக்கும்; சாலையோர பஜ்ஜி கடைகளுக்கென்று வைக்கோலைப் பிழிந்து, கொழுப்பற்ற எண்ணெய் தயாரிக்க ஒரு கிருஷ்ணர் பிள்ளை முளைத்துக் கிளம்பவும் கூடும்!

இந்த வெற்றிடத்தில் ஒரு பிரார்த்தனை எழுதி வையுங்கள் - லியாண்டர் பயஸ் விரைவில் குணமடைவதற்காக:

கார்மா மிசை காலன் வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி எனுஞ்
சூர்மா மடியத் தொடுவேலவனே

– இது அருணகிரிநாதரின் கந்தர் அனுபூதியிலிருந்து என் பிரார்த்தனை!

– சுமி



தொலைக்காட்சித் தொடர்

ஜீவநதி

காட்சி: 60

பாத்திரங்கள்: மேனன், ராமானுஜம், கமல்நாத், அம்சா.

(கண்ணன் பணியாற்றும் அலுவலகத்துக்குப் புதிய தலைவர் வந்திருக்கிறார். தன் அலுவலர்களை அழைத்து அவர்களுடன் பேசுகிறார். சூழல் இது. முன்னேற்பாட்டின் படி, 'சீனியாரிட்டிக்கு' ஏற்ப, ஒவ்வொருவராக அவர் அறைக்குள் நுழைகிறார்கள். புதிய பொறுப்பை ஏற்றுள்ள கே.கே.மேனன், நாற்பதுகளின் வயதினர். அழுத்தமான ஆசாமி என்று பேச்சில் புலனாகிறது. சேர்மனை முதலில் பார்க்க வேண்டிய நபர் ராமானுஜம், தடுமாற்றத்துக்குள்ளாகிறார். பைல்களைப் புரட்டுவதும், பொருள்களை மாற்றிப் போடுவதும், கண்ணாடிக்கு முன் நின்று தலைவாருவதுமாக 'நெர்வசாக' இருக்கிறார். மேசை மேல் தொலைபேசி அழைக்கிறது. சேர்மன் 'வரமுடியுமா' என்கிறார். 'தோ.... வந்துட்டேன்' என்றபடி குடுகுடு என சேர்மன் அறைக்கு ஓடுகிறார் ராமானுஜம். அனுமதி பெற்று உள்ளே நுழைகிறார், ராமானுஜம். அமரச் சொன்னதும் அமர்ந்து கொள்கிறார்.)

மேனன்: நல்லது... ராமானுஜம்... இந்த ஸ்தாபனத்திலே நீங்கதான் சீனியர்... சொல்லுங்க. இங்க திருப்தியா இருக்கீங்களா... வேலை செய்யறதுல ஏதாவது பிரச்னை இருக்கா? உங்க யோசனைகள்தான் எனக்கு வேணும். கம்பெனியை மேலும் முன்னேற்றம் பண்றதுக்கு என்ன பண்ணலாம்?

ராமானுஜம்: ரொம்ப சந்தோஷம் சார். என்னையும் ஒரு பொருட்டா கூப்பிட்டுக் கேட்டதுக்கு நன்றி. ஆச்சு. முப்பத்தஞ்சு வருஷம், இந்தக் கம்பெனிக்கு வந்து. நேத்து வந்த குஞ்சுகள் கூட என்னை மதிக்கிறது இல்லை. ஏதோ, திண்ணைக் கிழம்னு நினைக்கிறதுகள். இங்க ஒரு கிழம், பொம்பளைக் கிழம், சரியான சூனியக்காரக் கிழவி. அது தத்துப்பித்துன்னு பேசுறதை வேத வாக்கா நினைக்கிறதுகள் இங்க இருக்கிற அசடுகள்... ஒண்ணும் சரி இல்லை.

மேனன்: உங்களுக்குச் சுய பச்சாதாபம். இது மாதிரியான கம்பெனியில; உங்க அறிவும், திறமையும்தான் கௌரவிக்கப்படும். வயசு இரண்டாம் பட்சம்தான். நீங்க உங்களை நிரூபிக்கணும்.

ராமானுஜம்: இல்லை சார். நான் முயற்சி பண்ணித் தோத்துட்டேன் சார். என் பிள்ளை அமெரிக்காவுல இருக்கான். பணம் அனுப்பறான். 'ஹாய்யா' இருக்கலாம். முன்னால இருந்த 'சேர் பெர்சன்' இருங்கோன்னு சொன்னாங்க, இருக்கேன்.

மேனன்: போகட்டும். நிறையப் புதுப்புது 'அட்வென்சர்' மேற்கொள்ளப் போறோம். நீங்க பங்கெடுத்துக் கொள்ளலாமே....




ராமானுஜம்: நீங்க உத்தரவு போடுங்கோ. நான் செய்றேன். இப்படி என்னண்டைக் கேட்கிறதுக்கு ஆள் இல்லை. அப்புறம்...

மேனன்: சொல்லுங்கோ.

ராமானுஜம்: சொன்னேனே... இங்கே அம்சாங்கிற பேரில் ஒரு கிழம். தானாவே

பிரபஞ்சன்

ரிடையர்மெண்ட்டுக்கு எழுதிக் கொடுத் துடுச்சு. கேரக்டரோ ரொம்ப மோசம். ஆம்பிளை பொம்பிளை பேதம் இல்லாமே எல்லார்கிட்டையும் ஈஷிண்டு. இது என்ன குணமோ, அந்த ஏழுமலையானுக்கே வெளிச்சம். இப்ப புதுசா, ஒரு குட்டியை அவ இடத்துலே 'போஸ்ட்' பண்ணி



21

யிருக்கா. அது, பதினாறடி பாயறது. இங்க கண்ணன்னு ஒரு பையன், அவனோட லூட்டி. சகிக்கலை, ஆபீஸ் அட்மாஸ்பியர்.

(தலையசைத்துக் கொள்கிறார் மேனன்.)

மேனன்: ஓ.கே. மிஸ்டர் ராமானுஜம். உங்க அப்சர்வேஷனுக்கு ரொம்ப நன்றி. நீங்க போகலாம்.

(ராமானுஜம் பைல்களோடு புறப்படு கிறார். அடுத்தபடியாக, மத்திய வயதுடைய கமல்தேவ் உள்ளே நுழைகிறார்.)

மேனன்: எஸ் மிஸ்டர் கமல்தேவ். உட் காருங்கள்... சொல்லுங்கள். கம்பெனிக்கு என்ன புதிய யோசனை? ராமானுஜத்துக்கு அடுத்தபடியாக நீங்கள் தான் சீனியர், இல்லையா?

கமல்நாத்: சீனியர் தான். இருந்து என்ன பிரயோஜனம் சார். எனக்கு மேல ராமானுஜம் இருந்துகிட்டு என்னை அமுக்கி வச்சுட்டார் சார்.

மேனன்: அமுக்கி வைக்கிறதுன்னா, என்ன?

கமல்நாத்: நான் சொன்னா முக்கியமான 'ஐடியாக்களை' புறக்கணிச்சுட்டார் சார். சிலதை, தன்னோடு ஐடியான்னு சொல்லி, பெயர் வாங்கிக்கிட்டார். மோசமான ஆபீஸ் சார் இது.

மேனன்: இதை நீங்க 'பாஸ்'கிட்ட

சொல்லி இருக்கலாமே.

கமல்நாத்: சொல்லலாம்னு நினைச்சேன். சொல்ல முடியலை சார்.

மேனன்: சரி. போகட்டும். இனிமே, எந்தப் புது ஐடியாவையும் என்கிட்ட சொல்லலாம். நான் எதையும் திருடிக்க மாட்டேன்.

கமல்நாத்: சேச்சே... நடந்ததைச் சொன்னேன் சார். அப்புறம், இங்கிருக்கிற ஆட்கள் எல்லாம் ஒரு காசுக்குப் புண்ணியம் இல்லாதவர்கள் சார். நீங்க முதல்ல செய்ய வேண்டிய காரியமே, களை எடுக்கிறது தான் சார். களைகளை எடுத்துட்டா, வியாபாரப் பயிர் பிழைக்கும்.

மேனன்: களைங்கிறது யார். பரவாயில்லை சொல்லுங்க.

கமல்நாத்: அம்சாங்கிற லேடி.. அது ரிடையர் ஆயிடுச்சு. கண்ணன்னு நேத்து முளைச்ச பையன். அவனுக்கு பிரண்டா இருக்கிற ஒருத்தி. அவ பேர்..

மேனன்: கீதா?

கமல்நாத்: சாருக்கே தெரிஞ்சு இருக்கே. என்ன ஷார்ப். அதனால் தான் சார் நீங்க சேர்மேன்.

மேனன்: ஓ.கே. கமல்நாத். நீங்க போகலாம். நான் களை எடுக்கறேன். உங்களுக்கு அடுத்த பொசிஷன் யார். மிஸஸ் செண்பகம் தானே? அவங்களை அனுப்பி வையுங்க...

(செண்பகம், பயம் தோன்ற, கையை உதறியபடி அறைக்குள் நுழைகிறாள். மேனனுக்கு முன் மரியாதையுடன், படபடப்புடன் அமர்ந்து கொள்கிறாள்.)

மேனன்: மேடம், கம்பெனி வியாபாரங்களைக் கவனிக்கிறீங்க இல்லையா?

செண்பகம்: சார்...

மேனன்: கடந்த இரண்டு வருஷங்கள்ளே, டர்ன் ஓவர் உயரல்லை. என்ன காரணம்?

செண்பகம்: நமக்குப் போட்டி அதிகமாயிடுச்சு சார். யார் யாரோ அட் கம்பெனி தொடங்கி, 'ரேட்டைக்' குறைச்சுட்டாங்க.

மேனன்: மறுபக்கத்துல, நிறைய விளம்பர வாய்ப்பு பெருகி இருக்கே. நிறைய சேனல்கள் வந்திருக்கு. பத்திரிகைகள் இருக்கவே இருக்கு. ம்?

செண்பகம்: *(மௌனம்)*

மேனன்: புதுசா யோசிக்கணும் செண்பகம் மேடம். பழைய வழியே புது தலைமுறைக்கு உதவாது. நம்மை நாமே காப்பி பண்ணிக்கிட்டு எத்தனைக் காலம் இருக்கப் போகிறோம். நம்மை மத்தவங்க காபி பண்ணும் போது, நாம புதுசுக்குப் போயிருக்கணும்...ம்?

செண்பகம்: என்னுடைய டிபார்ட்மெண்ட் இல்லை சார் அது.

மேனன்: எது?

செண்பகம்: யோசிக்கிறது.

மேனன்: *(சிரித்தபடி)* யோசிக்காமதான் வேலை செய்யறீங்களா? சரி. நீங்கள் போகலாம். அம்சாவை அனுப்புங்கள். *(அம்சா உள்ளே நுழைந்து வணக்கம் செய்து விட்டு அமர்கிறாள்.)*

மேனன்: மேடம், உங்களைப் பற்றி நிறையத் தெரியும். தலைமை அலுவலகத்தில் உங்களைப் பற்றி நிறைய பேசி இருக்கிறோம். உங்க சர்வீஸ் எங்களுக்குத் தேவைப்படாத இடத்தில் நம்ம கம்பெனி இல்லை. உங்க முடிவுக்கு என்ன காரணம்? அலுவலகக் காரணம்னா, இப்போ நான் வந்திருக்கேன்.

''எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கு; என்ன பேர் வைக்கலாம்?''
''எஸ்மா, டெஸ்மா!''
— புதுக்கோட்டை ஆசமாரியப்பன்

உங்களுக்குப் பிடிச்ச மாதிரி ஆபீஸ் சூழ்நிலையை மாத்தித் தர முடியும். சொல்லுங்க.

அம்சா: சார்... ரொம்ப நன்றி சார். நான் அந்த அளவுக்குப் பெரியவ இல்லை சார். வாங்கின சம்பளத்துக்குக் குறைவு வராமே, என்னாலே முடிஞ்ச வரைக்கும் வேலை செய்தேன், அவ்வளவுதான். நான் திருப்தியோடதான் விடைபெறுகிறேன்.

மேனன்: உங்க ஸ்டாஃப் எப்படி? ராமானுஜம், கமல்நாத் எல்லாம் எப்படிப் பட்டவங்கன்னு சொல்லுங்க.

அம்சா: சார். ராமானுஜம், இங்க இருக்கிற சீனியர்மோஸ்ட். ரொம்பத் திறமைசாலி சார் அவர். இந்தக் கம்பெனி இந்த அளவுக்குப் பெரிசா இருக்கிறதுக்குக் காரணம், அவரோட உழைப்பும் உற்சாகமும். அப்புறம், கமல்நாத் சார். அவரும் ஒரு ஜெம் தான். நல்ல தூண்டிவிடுகிற ஆபீசர் கிடைச்சா, அவர் பிரமாதமா வேலை செய்வார். அவர், நம் கம்பெனியோட சொத்து.

மேனன்: அப்படியா சொல்றீங்க? ஆனா, அவங்க உங்களைப் பத்தி நல்ல அபிப்

பிராயம் சொல்லலையே.

அம்சா: அதனால என்ன சார்? என்னைப் பத்தி அவங்க என்ன மாதிரி அபிப்பிராயம் வச்சிருக்காங்கங்கிறது வேற விஷயம். நான் அவங்க மேல மரியாதை வச்சிருக்கேன். அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை.


(மேனன் சிரித்தபடி அம்சா சொல்வதைக் கேட்டுக் கொள்கிறார்.)

மேனன்: புதுசா ரெண்டு பேரைச் சேர்த்து இருக்கீங்களாமே, அவங்க எப்படி?

அம்சா: முத்துக்கள். நம் கம்பெனிக்குக் கிடைச்ச வெகுமதிகள். அருமையான கற்பனை உள்ளவங்க சார், அவங்க.

மேனன்: நீங்க சேர்த்தவர்கள் என்பதனாலயா?

அம்சா: நிச்சயமா இல்லை சார். என் தங்கை மகள் என்னை இன்னைக்கும் நச்சரிக்கிறா. வேலை வேணும்னு. நான் அவளுக்குச் சிபாரிசு பண்ணலை. ஏன்னா, இது மாதிரிக் கம்பெனியில வேலை செய்யற தகுதி அவளுக்கு இல்லை. நான் சொல்லி இருந்தா, அப்போதிருந்த சேர் பெர்சன் என் பேச்சைத் தட்டி இருக்க மாட்டார்.



மேனன்: ஓ.கே. எனக்குப் புரியுது. ஆனா, இந்த அலுவலகத்தோட தட்ப வெப்பம் சரியில்லை மேடம். எல்லோர்க்கும் ஏதேதோ கவலை. சுய பச்சாதாபம். ஏராளமான குறைகள். எல்லார்மேலயும் புகார். எதுவும், வேலை சம்பந்தமான விஷயம் இல்லை. இவர்களை வேலை செய்ய வைக்கிறது எப்படீன்னு புரியலை.

அம்சா: எல்லாத்திலயும் அவர்களை இணைச்சுக்கிறதுதான் சார் ஒரே வழி.

மேனன்: அவர்களோட பங்களிப்பே ஒன்றும் இல்லை என்கிறபோது எப்படி அவர்களை இணைச்சுக்கிறது?

அம்சா: அதனாலதான் சேர்த்துக்கிடணும். ராமானுஜம் சார் இதச் செய்தார். இதைச் சொன்னார். அவருடைய 'ரிகார்டை' இந்தப் பசங்க யாரும் 'பிரேக்' பண்ணலைப்பான்னு சொல்லணும். கமல்நாத்துக்கும் இதுதான் பிரச்னை. சீனியர்களும் ஜூனியர்களும் இணைந்து வேலை செய்யற இடத்துல, இது மாதிரி பெர்சனாலிட்டி காம்ப்ளக்ஸ் வரத்தான் வரும். புதுப்புது பசங்க, புதுப்புது அறிவுகளோட வருவான். வர்றான். அவனையும் அவளையும் கண்டு இவங்க சுருங்கிடறாங்க. அப்படி இல்லை. அவங்க அனுபவம், அவங்களோட பெரிய சொத்து. இதை அவங்களுக்கு உணர்த்தணும்.

மேனன்: மேடம், உங்களுக்கு இந்த மனப்பிரச்னை ஏன் வரலை?

அம்சா: நான் வளர்ந்துகிட்டு இருக்கேன். பசங்களைப் புரிஞ்சுக்கறேன். அவங்க அறிவை எனக்காக்கிக்கிறேன். நானும் படிக்கிறேன். எனக்குத் தெரியாதது அவங்களுக்குத் தெரியும்னு நான் நம்பறேன்.

மேனன்: இவ்வளவு அனுபவம் கொண்ட ஒருத்தரை கம்பெனி இழக்க முடியுமா? மேடம், என்ன நியாயம் இது. நீங்களே சொல்லுங்க...

அம்சா: நான் இயக்குநரா இருந்தா, இழக்கவே மாட்டேன். எனக்கு வயசாறதை அண்மைக் காலமா நானே உணர்றேன் சார். நிறைய சின்னப் பசங்க வேலை இல்லாமே அலையறதைப் பார்த்தா, மனசுல வருத்தமும் வெட்கமுமா இருக்கு.

மேனன்: அப்படி இல்லை. வயசு, சில வேலைகளுக்குத்தான். இன்னும் பத்து வருஷம் நீங்க எங்களோடு இருக்கலாம்.

அம்சா: *(சிரித்தபடி)* யோசிக்கிறேன் சார்.

மேனன்: எனக்குத் தீர்மானமாயிடுச்சு, மேடம். தயவு செய்து உங்க முடிவை மாத்திக்கிடணும். ஒரு விஷயத்தை எப்படிப் பார்க்கணும்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. இருட்டை வெளிச்சம் இல்லாத பொழுதுன்னு சொல்லலாம். குறைஞ்ச வெளிச்சம்னும் சொல்லலாம். நீங்க இரண்டாம் வகை... போங்க... பெரியவங்களையும், சின்னவங்களையும் சேர்ந்து வேலை செய்யப் பண்ணுங்க. நீங்க இருக்கும் வரைக்கும் எங்களுக்குக் கவலையே இருக்காது...

அம்சா: யோசிக்கிறேன் சார்... *(இருவரும் சிரிக்கிறார்கள்.)*

மேனன்: நீங்க உங்க இடத்துலேயே இருக்கீங்க...

(அம்சா எழுந்து வெளியே வருகிறாள். எல்லோரும் அவளைச் சுற்றிக் கொள்கிறார்கள்.)

(தொடரும்)

ராஜா ராணி கல்யாணம்!

செஸ் வீராங்கனை ஆர்த்தி ராமசாமிக்கு இந்த மாதம் இருபத்தொன்பதாம் தேதி கல்யாணம். தமது கோச் ரமேஷை கைப்பிடிக்கிறார்.

திருமண அழைப்பிதழ் கூட செஸ் கட்டங்களில் ராஜாராணி இருப்பது போலத்தான் அச்சிட்டிருக்கிறார்கள். காதலில் தொடங்கி, பெற்றோர்கள் சம்மதத்துடன் நடக்கும் திருமணம் இது! செஸ் போட்டியில் கலந்து



கொள்ளுவதற்காக வெளிநாடு போயிருக்கும் ஆர்த்தி, திருமணத்துக்கு மூன்று நாட்கள் முன்னால்தான் ஊர் திரும்புகிறார். வருங்கால மனைவியின் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கும் ரமேஷைச் சந்தித்தோம்.


"பன்னிரண்டு வயதில் செஸ் ஆட ஆரம்பித்தவன் நான். கடந்த பதினைந்து வருடங்களில் படிப்படியாக முன்னேறி, இன்டர்நேஷனல் மாஸ்டர் பட்டம் பெற்றிருக்கிறேன்."

"முதன் முதலாக ஆர்த்தியை எங்கே சந்தித்தீர்கள்?"

"இந்திய ஜூனியர் செஸ் அணி, 98ல் ஈரானுக்குச் சென்றபோது, அந்த அணியின் 'கோச்'ஆக நானும் சென்றிருந்தேன். அப்போதிலிருந்து ஆர்த்தியை எனக்குத் தெரியும். அதன்பிறகு, நான் கோச் ஆக இருந்து, பயிற்சி தர முடியுமா? என்று ஆர்த்தியும், அவரது பெற்றோரும் என்னைக் கேட்டனர். சம்மதித்தேன்."

"ராஜா - ராணிக்கு இடையே காதல் எப்படி வந்தது?"

"தினமும் அவர் வீட்டுக்குப் போய் கோச்சிங் செய்து கொண்டிருந்தபோது (தினம் நாலு மணி நேரம்) பரஸ்பரம் இருவருக்கும் ஈடுபாடு ஏற்பட்டது. இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தோம். இருதரப்பு பெற்றோர்களிடமும் விஷயத்தைச் சொன்னபோது, தயக்கமின்றிச் சம்மதம் சொன்னார்கள். கடந்த பிப்ரவரியிலேயே எங்கள் நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது. சுமார் ஆறுமாதம் காத்திருந்து, இதோ திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்.



• ரமேஷுடன் ஆர்த்தி

"இரண்டு செஸ் ஆட்டக்காரர்கள் திருமணம் செய்து கொண்டால், திருமணத்துக்குப் பின் ஒருவர் மட்டுமே பிரகாசிப்பார் என்று ஒரு சென்டிமென்ட் உண்டு. நாங்கள் அதைப் பொய்யாக்க வேண்டும் என்று தீவிரமாக இருக்கிறோம். இரண்டு பேருமாகச் சேர்ந்து, செஸ்ஸில் ஆர்வம் கொண்ட சிறுவர், சிறுமிகளுக்குப் பயிற்சி தர ஒரு செஸ் அகாடமி ஆரம்பிக்கும் ஆசையும் இருக்கிறது."

— கௌதம் ராம்

படம் : மீடியா ராமு



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்

நிறுவனர்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

A. ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

கனவில் வந்த ஆண்டாள்!



கோயில் பட்டர் உருவில் ஒருவர் வந்து கனவில் தோன்றுகிறார். "நீர் ஆண்டாளாக வேடமணிந்து, அவள் பாடிய பாசுரங்களை மூன்று நிலைகளிலும் அபிநயித்துக் கோயிலில் பாடும்!" எனச் சொல்லி மறைகிறார். முதலில் ஒன்றும் விளங்கவில்லை பி.டி.எஸ். ராகவனுக்கு. ஒரு நாள் விட்டு மறுநாள் என மூன்று முறையாக அதே கனவு, தொடர்ந்து வரவே மெய்சிலிர்த்துப் போகிறார் அவர். இது ஏதோ பகவானின் கட்டளையென எண்ணிக் கொண்டவர், அதற்கான காரியங்களிலும் ஈடுபடத் துவங்கி விட்டார்.

சோடியம் விளக்குகள் இருளை விரட்டிய இரவு நேரம். தாயார் சன்னதிக்கு வெளியே கம்பர் மண்டபம். எதிரே ஆண்களும், பெண்களுமென ஒரு பெருங்கூட்டம் வட்டமடித்து நிற்கின்றது. ஆண்டாள் அதன் நடுவே துள்ளி விளையாடுகிறாள். சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாய், சுற்றியுள்ளோரைச் சொக்க வைக்கிறாள். நாச்சியார் திருமொழி மற்றும் திருப்பாவை போன்றவற்றில் அவள் அருளிய பாசுரங்களை நாவிலே நடனமாடச் செய்கிறாள். தன்னிலை மறந்து பாடுதல், பகவானைத் துதித்துப் பாடுதல், கனாக் காணுதல், வாய் வெறுவுதல், ஏகுதல் போன்ற பாவங்களில் அபிநயித்துக் காட்டி அவையோரை அதில் லயிக்க வைக்கிறாள். 'மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்!' பாடலின் போது ஆண்டாள் திருக்கல்யாண உற்சவமே அங்கு அனைவர் மனத் திரையிலும் அரங்கேறி விடுகிறது.

பாதங்களில் மருதாணிப் பூச்சு, காலில் சதங்கை மணிகள், கை விரலில் மோதிரங்கள், வளை ஆபரணங்கள், வங்கி, இடுப்பில் மின்னும் ஒட்டியாணம். மார்பினில் உரசும் காசு மாலை என்று இரண்டரை மணி நேர ஒப்பனைக்குள் தயாராகி விடுகிறாள் ஆண்டாள். தனக்குத்தானே செய்து கொள்ளும் ஒப்பனைகளுடன், அந்த வினாடியிலிருந்து ஆண்டாளாகவே மாறி விடுகிறார் பி.டி.எஸ். ராகவன்.

செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் ஆலயத்தில், தாயார் சன்னதி முன்பாகவே ஆண்டாள் வேடமிட்டு ஆடிப் பாடியாயிற்று. அத்துடன் நின்று விடவில்லை. பின்னர் சில நாட்கள் கழித்து ஆழ்ந்த உறக்கத்தில் மீண்டுமொரு கனவு வந்தது அவருக்கு. இந்த முறை கனவில் வந்தது

கோயில் பட்டர் அல்ல.

'பெண்ணின் வருத்தமறியாப் பெருமான்' எனப் பாடிய ஆண்டாளே அவர் கனவில் வந்து நின்றாள். 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' என மறுத்துக் கூறி, அரிமுகன் அச்சுதன் மீது அத்தனைக் காதல் வயப்பட்டவள். அவளே கனவில் வந்து தோன்றவும் கனிந்துருகிப் போகிறது அவருக்கு. அதற்குத் தோதாய் அமைகிறது ஆண்டாளின் திருவாக்கு. "மென்னிடை யன்னம் பரந்து விளையாடும் வில்லிப்புத்தூர் சன்னதி வந்து நின்று ஆண்டாள் வேடமிட்டு ஆடிப் பாடுக!" எனப் பணித்து மறைகிறது ஆண்டாளின் திருவடிவு.

முதலில் என்ன செய்வதென்று தோன்றவில்லை அவருக்கு. அப்பொழுது ஆடிப் பூரத்திருவிழா நாட்கள் என்பதால் உடனே ஸ்ரீ வில்லிபுத்தூர் கிளம்பிச் சென்று விட்டார். அங்கு நாச்சியார் கோயில் தேவஸ்தான அதிகாரி, அரையர் ஸ்வாமி மற்றும் பட்டர்களிடம் ஸ்ரீரங்கத்தில் நடந்த விஷயங்களை எடுத்துக் கூறியுள்ளார். அதன் பின்னர் அங்கு ஆண்டாள் சன்னதியில் தட்டொளி (வட்ட வடிவப் பெரிய கண்ணாடி) முன்பாக ஆண்டாள் வேடமிட்டு ஆடிப்பாடிக் காட்டியுள்ளார். ஆடிப் பூரத் திருவிழாவின் ஏழாம் திருநாள். ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் தேவஸ்தானத்தில் பொது மேடையொன்றில் திரண்டிருந்த பக்தர்கள் முன்னிலையில் ஆண்டாளாக வேடமணிந்து ஆடிப்பாடி, அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியுள்ளார் ராகவன்.

இப்பொழுது அவருக்கு வயது எழுபத்தாறு. சென்னை திருவல்லிக்கேணிவாசியான அவர், அரங்கனையும் ஆண்டாளையும் சேவிப்பதற்கென்றே ஸ்ரீரங்கத்திற்கு வந்து வசிக்கிறார். கடந்த ஆறு ஆண்டுகளாக ஸ்ரீரங்கத்தில் வசித்து வரும் அவரது பூர்வீகம், மயிலாடுதுறை அருகே பேரளம் கிராமம். பின்னர் அங்கிருந்து பெயர்ந்து செங்கல்பட்டு அருகே பெலாப்பூர் கிராமம். 'பெலாப்பூர் பேரளை நாலாயிரம்' என்பது அவர்களது குடும்பத்துச் சொல் வழக்குப் பெயர்.

சென்னை, ஏ.ஜி.எஸ். ஆபீசில் தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை, ஒலிநாடா வடிவில் இல்லாதிருந்த நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்களை முதன் முதலாக 1985ல் ஒலி நாடாவாக இவர் தயாரித்து வெளியிட்டதாகக் கூறுகிறார். கோஷ்டியாக இசைக்கச் செய்து பதிவு செய்யப்பட்ட இருபத்தைந்து ஒலிநாடாக்களில் நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்கள் இடம் பெற்றுள்ளனவாம். இதன் பின்னரே மற்றவர்கள், நாலாயிர திவ்ய பிரபந்தப் பாடல்களை, ஒலி நாடாக்களாகத் தயாரித்து வெளியிட்டனர் எனக் கூறுகிறார் அவர்.

நாச்சியார் திருமொழி மற்றும் திருப்பாவை பாசுரங்களை ஆண்டாளாக வடிவமேற்று, தன்னிலையிலிருந்தும், தாயாக இருந்தும், தோழியாக இருந்தும் மூன்று நிலைகளில் ஆடிப் பாடி அபிநயம் காட்டுகிறார். "ஒப்பனைக்குள் புகுந்து ஆண்டாளாக உருமாறியவுடன், சரீர சிந்தனையே என்னிடம் இல்லை. இதனை எனது பிறவிப் பயனாகவே கருதுகிறேன்!" என்கிறார் பி.டி.எஸ். ராகவன்.

கட்டுரை: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு
படங்கள்: லோட்டஸ் சுரேஷ்



• பி.டி.எஸ். ராகவன்



• அரையர் சேவையில்



ஒரு பிரிவின் பயணம்

அவர்கள் இருவரையும் இறக்கிவிட்ட பஸ் கூடப் போய்விட்டது. தூரத்திலிருந்து கத்தின காக்கைகளின் கரகரத்த குரலைத் தவிர வேறு சப்தம் எதுவும் கேட்கவில்லை. அந்த ஊரின் பஸ் ஸ்டாண்ட் பெரிய செம்மண் மைதானம். நிறையப் புழுதியுடன் வக்கரித்துக் கிடந்தது.

அந்தப் புதிய இடத்தை ஒரு கணம் பயந்த பார்வையுடன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான் பையன். அவனுக்கு வயது பத்து இருக்கும். கையும் காலும் குச்சி குச்சியாய் அப்படி மெலிந்திருந்தான். பெரிய முகத்தில் துறுதுறுவென அலைபாய்ந்த கண்கள் வினாடிக்கு வினாடி பிரமிப்பையும், வெகுளித்தனத்தையும் மாற்றி மாற்றி வெளிப்படுத்தின. விடைத்த மூக்கிலிருந்து இலேசாக நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அடிக்கடி புறங்கையால் துடைத்துத் துடைத்து கால் சட்டையில் தேய்த்தான்.

"தாத்தா, மாமா வீடு எங்க இருக்கு?"

"கிட்டதான்."

சுருக்கமாய்ச் சொன்ன குரலில் துக்கம் கூடியிருந்தது. தாத்தா ரொம்பவும் வயசாளி. வலது கையில் ஒரு கம்பை ஊன்றிக் கொண்டு இடது கையில் ஒரு துணிப்பையை வைத்திருந்தார். அதில் அந்தப் பையனுடைய துணிமணிகள் இருந்தன. தாத்தாவுக்குச் சின்ன முகம். அது, கழிந்த காலத்தின் சுருக்கங்கள் விழுந்து மேலும் சிறிதாகத் தெரிந்தது. இலேசான கூன் விழுந்த ஒற்றை நாடிச் சரீரம். மேலே ஒரு காமராசர் கதர்ச் சட்டையும், இடுப்பில் பழுப்பு நிறத்தில் வேட்டியும் கட்டியிருந்தார். ஒடுங்கிய கண் குழியிலிருந்து நீர் கசிந்து ஒதுங்கியிருந்தது. எவ்வளவோ சொல்ல இருந்தும் சொல்ல மறுக்கிற வைராக்கியம் முகபாவத்திலிருந்தது. தனியாய்க் கிளைகளை விரித்து நின்றிருந்த வேப்ப மர நிழலைப் பார்த்து நடந்தார். பத்தடி நடப்பதற்குள் மூச்சிரைத்தது. திரும்பிப் பார்த்தார். பையனைக் காணோம். கலவரத்துடன் சுற்றிப் பார்த்தார். பையன் ஓரத்தில் ஒதுங்கியிருந்த கிளப்புக்கடை வாசலில் நின்று கொண்டு கூப்பிட்டான்.

"தாத்தா இங்க வா..."

"படுக்காளிப்பய, ஒரு எடத்தில இருக்கானா, இந்த வரத்து வாரானே..." என்று முணுமுணுத்துக் கொண்டே கிளப்புக் கடையை நோக்கி நடந்தார் தாத்தா.


பையன் அவர் வருவதற்குள் கிளப்புக் கடையிலிருந்து வடையை வாங்கித் தின்று கொண்டிருந்தான். தாத்தா வருவதற்கு முன்னாலேயே அவரிடம் ஓடிப்போய் "ஒனக்கு வடைவேணுமா...?" என்று கேட்டான்.

"அதுக்குள்ள என்ன கொள்ள போதுன்னு... வடையை வாங்கித் திங்க. ஆடுகாலிக் கழுத... என்னன்னுதான்

உதயசங்கர்

இருக்கப் போறியோ..?"

அவனுடைய துறுதுறுப்பும், சேட்டைகளும் அவருக்குப் பிடித்தமானவைதான். சமயங்களில் தன்னுடைய பாலிய காலம் கண்முன்னே நிழலாடி, நிறைவான உணர்வைத் தரும். ஆனால் இப்போது



எரிச்சல் வந்தது. ஊரிலிருந்து பஸ் ஏறும்போதே ஒரு வித வெறுமையுணர்வு நெஞ்சில் ஊற ஆரம்பித்துவிட்டது. இன்னும் வாழ வேண்டும் என்றிருந்த உணர்வுகூட சப்பென்று அடங்கிப் போனது. இனம் புரியாத சோர்வு உடலில் ஏற்பட்டது. இவ்வளவும் இந்தப் பையனை, இந்த ஊரிலிருக்கும் அவருக்குத் தூரத்து சொந்தக்காரனிடம் விட்டுவிட நினைத்திலிருந்துதான்.

ஒரு வருஷத்துக்கு முன்னால் ஆச்சி இறந்து போனாள். அவள் சீக்காய்க் கிடக்கிற நேரத்தில் அவனைப் பற்றிப் பேசாத நேரமே கிடையாது. எந்நேரமும் அவனைப் பத்தித் தான்

புலப்பம். ஆச்சி போனதில் தாத்தா ரொம்பவும் தளர்ந்து விட்டார். பல நேரம் யோசனை தப்பி விடுகிறது. கண்ணில் வெளிச்சம் மங்கிக்

கொண்டே வந்தது. ஒரு வருடம் தாக்காட்டிப் பார்த்தார். முடியவில்லை. திடீரென்று தன் சிவன் போய்விட்டால், இந்தப் பயலை நிர்க்கதியாய் விட்டுவிடக் கூடாது என்று ஒரு மாதமாய் யோசித்தார். கடைசியில் இந்த ஊரிலிருக்கிற பரமசிவனை வந்து பார்த்தார். முதலில் அவன் முடியவே முடியாதென்றான். பையன் பேரில் பேங்கில் பணம் கிடக்கிறதென்று தெரிந்ததும், "ஒரு மனிதாபிமானத்துக்காகத்தான் இதைச் செய்கிறேன்", என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே சம்மதித்தான். ஆனால் 'இந்தச் சனியனை எப்படித்தான் அவன் சமாளிக்கப் போறானோ' சஞ்சலத்துடன் குனிந்து பையனைப் பார்த்தார்.

தாத்தாவின் ஏச்சில் அவன் முகம் கண்டிப் போய், தின்ற பாதி வடையோடு - 'அழலாமா' என்று யோசித்துக் கொண்டிருந்தான். தாத்தா கூப்பிட்டார். அவன் திரும்பக் கூட இல்லை.

"இந்த ரோசத்துக்கெல்லாம் ஒண்ணும் கொறச்சலில்ல... வாய்யா, காப்பி சாப்பிடுவோம்..." என்று அவன் கையைப் பிடித்தார். அவன் அவர் கையை உதறிவிட்டுக் கொஞ்ச தூரம் தள்ளிப்போய் நின்று 'வெவ்வெவ்வ...' என வக்கணை காட்டினான். அவர் சிரமப்பட்டு அவனருகில் போனார். அவர் வரும்வரை காத்திருந்து, வந்ததும் மறுபடி தள்ளிப்போய் நின்று கொண்டான். அவருக்கு அவனுடைய பிரியாசத்தினால் சந்தோஷமும் இயலாமையினால் கோபமும் வந்தது.

"சரி நான் போறேன்... நீ இங்கனயே இரீ.. தாத்தா போறேன்.." என்று சொல்லிவிட்டு, கிளப்புக் கடைக்குள் நுழைந்தார். பின்னாலேயே திடுதிடுவென்று ஓடி வந்து தாத்தா பை வைத்திருந்த கையைத் தட்டிவிட்டான். அவர் தடுமாறி கீழே விழப் பார்த்தார். அவன் ஓடிப் போய் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு,

"நாந்தானே செவிச்சேன்" என்று அவரைப் பார்த்துச் சிரித்தான்.

காப்பி குடித்துவிட்டு வெளியே வரும்போது தாத்தா,

"டேய் எங்கையைப் பிடிச்சிக்கிட்டு ஆடாம ஓடாம வரணும்... இல்ல தொலைஞ்சி போயிருவ... அப்புறம் புள்ள பிடிக்கிறவன் தூக்கிட்டுப் போயிருவான்..." என்றார். பையன், தாத்தா பை வைத்திருந்த இடது கையைப் பிடித்துக் கொண்டான். தாத்தா பையப் பைய நடந்தார். ஆச்சி தாய் தகப்பனில்லாத பிள்ளை என்று அதிகம் செல்லங் கொடுத்து வளர்த்துவிட்டாள். அவனுள் ஆசைகளும், பிடிவாதமும் அபரிமிதமாய் வளர்ந்திருந்தன. ஆனாலும் அவருக்கு உயிர்த் துடிப்பான வாழ்வின் கதியை அவன்தான் எந்நேரமும் உணர்த்திக் கொண்டேயிருந்தான்.

இப்போதும் அவர் மனம் ஒரு நிலைப்பட்டு இல்லை. 'ஏதோ சும்மா இந்தப் பயலைக் கூட்டிக் கொண்டு இந்த ஊரில் யாரையோ பார்க்க வந்திருக்கிறோம் வேறொன்றுமில்லை' என்று கூடத் தோன்றியது.

"தாத்தா பையை நான் தூக்குதேன்..."

"வேண்டாண்டா... ஒன்னால தூக்க முடியாது..."

"நா தூக்கிருவேன்..."

பையை அவர் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டான். பை கொஞ்சம் கனம் தான். முதலில் ஒரு கையில் தூக்கிப் பார்த்தான். முடியவில்லை. இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு கால்களுக்கிடையில் ஆட்டிக் கொண்டே நடந்து பார்த்தான். கீழே விழப் போனான். பையைக் கீழே வைத்துவிட்டு,

"தாத்தா நீ தான்... தூக்கு..." என்றான்.

தாத்தா குனிந்து பையை எடுத்துக் கொண்டார். அவன் அவருக்குச் சிரமங்களைத் தந்தான். பல நேரங்களில் அவர் துன்பப்படும்படியாகவும் நடந்திருக்கிறது. ஆனால் அவனோடு இருக்கும் ஒவ்வொரு விநாடியும் அவருக்குச் சந்தோஷமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாய் இருந்தது. அவருடைய இளமையை அவரே பார்ப்பது போல் உணர்த்தார். இனி அவனை விட்டுவிட்டு இருக்க முடியுமா? –

"பூகோளத்துல நீ இவ்வளவு வீக்கா இருப்பேன்னு நான் எதிர்பார்க்கலை! மேப்ல கன்யாகுமரி எங்க இருக்குன்னுகூட உனக்குத் தெரியலையே, நாளைக்கு வர்றப்ப உங்க அப்பாவைக் கூட்டிக்கிட்டு வா!"

"வேண்டாம் சார்! நீங்க அமெரிக்கா மேப்பை வச்சுக்கிட்டு அதுல கன்யாகுமரியைக் காமிக்கச் சொன்ன விஷயம் அவர் வரைக்கும் போகணுமா...? யோசிச்சுக்கங்க..."

– மேல்மங்கலம் பத்ரா

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.


பரமசிவனின் வீட்டுக்குப் போகும் பாதை வந்துவிட்டது. தாத்தா நின்று, குனிந்து அவன் முகத்தைப் பார்த்தார். அவன் உற்சாகமாய் இருந்தான். அவர் பெருமூச்சுவிட்டார்.

"டேய் பர்பி வேணுமால..."

அவன் ரோட்டைப் பராக்கு பார்த்துக் கொண்டே தலையாட்டினான். எதிரே தெரிந்த லாலாக்கடைக்குக் கூட்டிப் போனார்.

"வேறெதும் வேணுமா... வாங்கிக்க... அங்க மாமாட்ட சும்மா எதும் கேக்கக் கூடாது இன்ன..."

ஒரு கையில் பர்பியுடன் கடையைப் பார்த்தான்.



"அந்த அது..."

அவன் கேட்டதை வாங்கிக் கொடுத்தார். இப்போது வெயில் தாழ்ந்துவிட்டது. அவர் அவன் கால்களைப் பார்த்தார். முழங்கால் வரை ஒரே புழுதி.

"செருப்பு வாங்குனா பத்திரமா வச்சிருப்பியா...?"

"ம்... நீதான் வாங்கித் தர மாட்டங்கியே.. கணேசம்பய அன்னைக்குப் போட்டிருந்தான்ல..."

செருப்புக் கடைக்குள் போனதும் பையன் "எனக்கு அந்த பூடிசு தாத்தா..." என்று கெஞ்சினான்.

"டேய்.... பூடிசெல்லாம் வேண்டாம். இந்த ரப்பர் செருப்பப் போட்டுக்க. இதான் நல்லாருக்கு..."

அவன் கடையில் படுத்துப் புரண்டு அழ ஆரம்பித்துவிட்டான். பிறகு, பூட்ஸ் காலோடு ரோட்டில் நடக்கும்போது, பெருமையுடன் அடிக்கடி தாத்தா முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

தாத்தாவுக்கு இடம் நெருங்க நெருங்க, மனம் கலங்கியது. உயிரே இல்லாமல் சவமாய் நடப்பது போல் பிரமை. எதிரே எதுவும் அவர் கண்ணில் படவேயில்லை. பெருமூச்சு அடங்கி அடங்கிக் கூடியது.

அவர்கள் பரமசிவன் இருக்கிற தெரு முக்குக்கு வந்துவிட்டார்கள். தாத்தா அவனைத் தோளோடு சேர்த்தணைத்தார். அந்த அணைப்பு இதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளைத் திறந்துவிட்டது. ஏழு வருடமாய் மார்பிலும் தோளிலும் வளர்ந்த பையன். அவனுடைய சிணுங்கலுக்கும், கோபத்திற்கும், மகிழ்ச்சிக்கும், அழுகைக்கும் அவர் கண்ட காரணங்களை, அவருக்கு இந்த வாழ்வின் துடிப்பை உணர்த்தின. அவர் அவன் மூலம் மீண்டும் ஒருமுறை புதிதாய் வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் மரணத்தின் நிழல் தன் பின்னே நின்று, தன்னைப் பார்த்துக் கெக்கலி கொட்டிச் சிரிப்பதை அவர் அறிந்த கணமே, முதுமையின் தீராத சுமை அழுத்தத் தொடங்கியது. இப்பொழுதும் தான் எடுத்த முடிவு சரிதானா என்பதில் குழப்பம் இருந்து கொண்டுதானிருந்தது.

தாத்தா அடக்க நினைத்தும் மீறிக் கொண்டு கண்ணீர் வழிந்தது. அவர் உடலில் ஏற்பட்ட நடுக்கத்தை உணர்ந்த பையன் நிமிர்ந்து பார்த்தான். அவனும் அவரைப் பார்த்து அழ ஆரம்பித்து விட்டான். அவனுக்குக் காரணம் புரியவில்லை. ஆனால் அவனுடைய தாத்தா அழுகிறாரே! அவனுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே,

"டேய், மாமா சொன்னபடி கேக்கணும். நல்லா படிக்கணும். தாத்தாவைத் தேடக் கூடாது. அடம் பிடிக்கக் கூடாது."

அவன் பதில் சொல்லவில்லை. அழுகை கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொன்றாய் வீடுகளில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. தெருவில் வீட்டு வாசலுக்கு முன்னால் உட்கார்ந்து பெண்களும், பிள்ளைகளும் தீப்பெட்டிக் கட்டை அடுக்கிக் கொண்டும், தீப்பெட்டிக் கட்டு ஒட்டிக் கொண்டும் இருந்தார்கள். தெருவில் ஒரே சத்தக்காடு. அவர்கள் தாத்தாவும் பேரனும் தளர்ந்த நடையுடன் அந்தத் தெருவுக்குள் இருந்த சிலோன் செட்டியார் கடவுக்குள் நுழைந்தார்கள். ○



• அர்ச்சனா

டெஸ்மாவுக்குத் தப்பியவர்கள்...!

ஸ்ட்ரைக் பண்ணிய அரசு ஊழியர்கள், 'போதும்டா சாமி' என்று கோர்ட் தயவில் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலையில் ''நீங்க ஸ்ட்ரைக் பண்ணியிருக் கீங்களா?' என்று இவர்களிடம் கேட்டோம்:

நடிகர் சார்லி:

கோவில்பட்டி காலேஜ்ல படிச்சிட்டிருந்த சமயம். டைரக்டர் பாலசந்தர் சாரோட 'அரங்கேற்றம்' படம் பார்த்துட்டு வந்தேன். உடனேயே அடுத்த ஷோவுக்கு 'புன்னகை' படம் பார்க்க ஆசை. கையில் காசில்லை. வீட்டுக்குப் போய் பணம் கேட்டா, அப்பா ருத்ரதாண்டவ மாடிட்டாரு. உடனே ஆரம்பிச்சுட்டேன் ஸ்ட் ரைக்கை! 'சாப்பாடு வேண் டாம்; ஒண்ணும் வேண்டாம்'னு மூஞ்சி யைத் தூக்கிக்கிட்டு கம்முனு சத்தியாக் கிரகம் பண்ண ஆரம்பிச்சுட்டேன். அப் பாவும் அம்மாவும் ரொம்ப நேரமா வந்து கூப்பிட்டும் போகலை. 'உனக்கு இவ்வளவு பிடிவாதமா?'ன்னு அப்பா ரொம்ப டென்ஷனாயிட்டாரு. நானும் என் ஸ்ட்ரைக்கை விடலை. அப்புறம், 'சரி சரி இந்தா பணம்; வந்து சாப்பிடு'ன்னு அப்பா சமாதானக் கொடி காட்டினதும், கிச்சன்ல போய் சாப்பாட்டை வெட்டிட்டு தியேட் டருக்கு ஓடினேன்.

பாம்பே ஜெய்ஸ்ரீ:

மும்பையில் படிச்சிட்டிருந்தேன். கல்லூரி திறந்த ஒரு வாரத்துக்குள்ளேயே அடையாள அட்டையை வாங்கிடணும். நான் கச்சேரிக்காக வெளியூர் போயிட்டேன். வரதுக்குப் பத்து நாளுக்கு மேல ஆகிவிட்டது. காலேஜ் வந்து பார்த்தா, 'ஏன் அடையாள அட்டை வாங்கலை? உன் அட்மிஷன் கேன்சல்ட்'னுட்டாங்க. எனக்கு ஒண்ணும் புரியலை. கிளாஸ்மேட்ஸ்கிட்டே இதைச் சொன்னேன். கொதித்துப் போய் இருபத்தைந்து பேரும், எனக்காக பிரின்ஸ்பால் ரூம் முன்னால போய் உட்கார்ந்துட்டாங்க. இரண்டு நாள் ஸ்ட்ரைக்! மூணாவது நாள் 'உங்க ஒற்றுமையைப் பாராட்டுறேன், நாளை வந்து சேர்ந்துக்கோ'ன்னார் பிரின்ஸ்பால். அப்புறம், அட்மிஷன் ப்ளஸ் அடையாள அட்டை கிடைச்சது!

• பாம்பே ஜெய்ஸ்ரீ



ஏ.வி. ரமணன்:

எனக்கு எப்போதும் சுத்தமாக இருக்கணும். வீட்ல கூட எல்லாம் ரொம்ப 'நீட்'டா இருந்தாதான் எனக்குச் சந்தோஷமே. இல்லைன்னா ஸ்டிரைக்தான்.

நான் இப்படி ஸ்டிரைக் பண்ணிடுவேன்னு நினைச்சே, வீட்ல எல்லாத்தையும் சுத்தமாக அழகாக வச்சிருவாங்க. அதுக்கப்புறம் ஏன் ஸ்டிரைக்?

அர்ச்சனா:

பதினொன்றாவது படிச்சிட்டிருக்கும்போது, கால்ல பூட்ஸ் போட்டுட்டுப் போறதுதான் ஃபேஷன். அப்பாட்ட கேட்டேன். 'ஒழுங்கா செருப்பைப் போட்டுட்டு நட'ன்னு திட்டிட்டார். அம்மாட்ட கேட்டேன். 'உனக்கு செருப்பே கிடையாது. இரண்டு நாள் செருப்பே இல்லாம நட, அப்பதான் பூட்ஸ் கேட்க மாட்டே'ன்னுட்டாங்க. அழுது அடம் புடிச்சு ஸ்ட்ரைக்ல இறங்கிட்டேன். மசிஞ்சாதானே! அப்புறம் போனாப் போகுதுன்னு வாங்கித்தரச் சம்மதிச்சாங்க. ஸ்ட்ரைக்கை கைவிட்டேன்.

• ஏ.வி. ரமணன்:



• சார்லி



— மௌலி

அன்பின் ஊற்று–11



தெய்வங்களிலேயே மிகவும் விரும்பப்படுபவர் விநாயகர்தான். ஏனென்றால் அவரை மகிழ்விப்பது எளிது. நீண்ட பிரார்த்தனை செய், பரிகாரம் செய்' என்றெல்லாம் அவர் பக்தர்களிடம் கேட்பதே இல்லை. அவரிடம் வெறுமனே பக்தி செலுத்தினாலே போதும். கடவுள், ஞானி, தத்துவ அறிஞர், செல்வச் செழிப்புக்கு மட்டுமல்ல, ஆன்மிகச் செழிப்புக்கும் அவரே அதிபதி. தன் பக்தர்களின் துயர்களைத் துடைத்து, தடைகளைக் களைபவர்; ஆனால் அவரை வம்புக்கு இழுத்தால் தொல்லைகளையும் தருபவர்!

விநாயகர் எழுத்தாளர்களின் முழு முதற் கடவுள். வியாச முனிவர் மகாபாரதம் எழுத உதவியவர் இந்த விநாயகப் பெருமான்தானே!

தனிமனிதனின் டி.என்.ஏ. இழையில், இந்தப் பூமியிலுள்ள வேறு பல ஜீவராசிகளின் டி.என்.ஏவையும் காணலாம் என்கிறது அறிவியல். எனவே நம்முள் ஒவ்வொரு மிருகத்தின் குணத்தையும் கொண்டிருக்கிறோம். புத்திசாலித்தனமும், அனாயாச

குருஜி

சிறு வயதில் பெற்றோருடன் விநாயகரின் கோயிலுக்குப் போனார் குருஜி. யானை முகத்தோடு இருந்த கணேசரின் உருவம் அவரைக் கவர்ந்தது. 'விநாயகருக்கு ஏன் இத்தனை பெரிய தலை?' என்று தகப்பனாரைக் கேட்டார். 'அவருக்கு நிறைய அறிவு. அத்தனையையும் வைத்துக் கொள்ளத்தான் அத்தனை பெரிய தலை!' என்றார் அப்பா. 'ஓகோ, அப்படியானால் தலை பெரிதாக இருப்பவர்களிடம் அறிவும் அதிகமாக இருக்குமோ?' என்று கேட்டார். தகப்பனார் சற்றே திணறிப் போய்விட்டார். 'அப்படியல்ல. விநாயகருக்குப் பெரிய தலைதான். ஆனால் நாம் அவரை வேண்டினால், சிறிய தலைக்குள்ளும் அறிவைப் புகுத்துவார்!' என்றார்.

அன்றிலிருந்து விநாயகர் குருஜியின் செல்லக் கடவுளானார். எல்லோருக்கும் ஞானத்தைக் கொடுத்தருள தினசரி அவரை வேண்டினார்.

குருஜியும் அவர் சகோதரியும் சின்னஞ்சிறு குழந்தைகளாக இருந்தபோது, பெற்றோருடன் கோயில்களுக்குப் போன சமயம், விநாயகர்

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

சுபாவமும், யானைக்கே உரிய இரு தனிக் குணங்கள். விநாயகரை வழிபடும்போது, நம்முள் புதைந்து கிடக்கும் இக் குணங்களையும் தட்டி எழுப்பித் தூண்டி விடுகிறோம். எனவே விநாயகரை வழிபடும்போது, இந்தச் சக்திகள் நமக்குள் கிளர்ந்து எழுகின்றன. தடைகளைக் கடக்கும் உத்வேகம் நம்மிடையே எழுகிறது.

யானையின் உருவத்தைப் பாருங்கள்: பிரும்மாண்டமான தலை, அறிவையும் ஞானத்தையும் காண்பிக்கிறது. அகலமான, பெரிய காதுகள்; ஆனால் மிகச் சிறிய கண்கள். பார்வைக்குப் பெரிதாகத் தெரிந்தாலும், எதை நுணுக்கமாகக் கேட்டுணர்கிறாயோ, அதுவே உண்மை என்று புரிய வைக்கும். துதிக்கை மோப்பம் பிடிக்கவும் செய்யும்; வேலைகளையும் செய்து முடிக்கும். பெருத்த, பானை வயிறு அவர் தாராளமானவர் என்று காண்பிக்கும். ஒற்றைக் கொம்பு, உறுதியாக ஒன்றிலேயே மனத்தை இருத்தச் சொல்லும். உயர்த்திய வலக்கரம், 'நானிருக்க பயமேன்?' என்ற அபய முத்திரையைக் காட்டும். இடக்கரம் அருள் பாலிக்கும். இவற்றைக் காணுகையில் நாம் குனிந்து வணங்கித் தரையைத் தொடுகிறோம்; மண்ணோடு இணைகிறோம்.

அவருடைய வாகனம் மூஞ்சூறு! அத்தனைப் பெரிய யானை முகனுக்கு அத்தனைச் சின்னஞ்சிறு வாகனமா என்று கேட்கலாம். பிணைக்கும் தளைகளை அறுத்தெறியும் சக்தி படைத்தது மூஞ்சூறு அல்லவா? அடுக்கடுக்காகப் படர்ந்திருக்கும் நம் அறியாமை என்னும் கயிறுகளை அறுத்தெறிய, நாம் அவரைப் போற்றும் மந்திரங்கள் உதவுகின்றன. அவர் கரத்திலிருக்கும் அங்குசம் நமக்கு விழிப்புணர்வைத் தூண்டும்; பாசக் கயிறோ நம்மைக் கட்டுப்படுத்தும்.

எழுத்தாளர்களின் கடவுள்



முன் மந்திரங்களைச் சொல்லி வேண்டினார்கள். நாலு வயதுப் பையனும், இரண்டரை வயதுப் பெண் குழந்தையும் சொல்லும் மந்திரங்களைக் கேட்டவர்கள், ஓர் இடத்தில், 'நீங்கள் என்ன வேண்டிக் கொண்டீர்கள்?' என்று கேட்டனர். 'எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்' என்றார் குருஜி. 'நான் எல்லோருக்கும் நிறைய இனிப்புகள் கிடைத்துச் சாப்பிட்டு மகிழ வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்' என்றாள் குழந்தை!

சிறு வயதிலேயே பூஜை முறைகளை எல்லாம் கோயிலில் கவனமாகப் பார்த்துவிட்டு வந்து, வீட்டிலும் அப்படியே செய்வார். மந்திரங்களை அழகாகச் சொல்லுவார். 'கடவுளிடம் என்ன கேட்கிறாய் நீ?' என்று தகப்பனார் கேட்டார். 'எல்லோரும் மன மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்; சண்டையிட லாகாது! என்று பிரார்த்தனை செய்கிறேன்' என்பார் குழந்தையான குருஜி.

மாயவலை

கே.பி. ஜனார்த்தனன்

இல்லாத சிறகை விரித்து எல்லாத் திசைகளிலும் பறக்க நினைத்தான் அபிஜித். தன் பதினேழு வருட வாழ்நாளின் அதிகபட்ச மகிழ்ச்சி நிலையில் இருந்தான். அவனது நீண்ட நாள் 'சாட்' சிநேகிதி டிமோதியை நேரில் சந்திக்கப் போகிறான். அதுவும் எத்தனை பெரிய சந்தோஷச் செய்தியுடன்!

'லைன் அவுட்' செய்துவிட்டு பிரவுஸிங் சென்டரை விட்டு வெளியே வந்தான். வாட்ச் காலை பத்தென்றது. அதிகாலையிலேயே டிமோதி தன் பெற்றோருடன் கன்யாகுமரியில் உறவினர் வீட்டில் வந்து இறங்கியிருப்பாள். அவர்களது கோடைச் சுற்றுலா, என்ன ஓர் அழகான கோயின்ஸிடென்ஸாக இன்று மலருகிறது!

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவன் நாகர் கோவில் கன்யாகுமரி பஸ்ஸில் இருந்தான்.

கீழே ஏதோ ஒரு பஸ்ஸுக்காக காத்து நின்றிருந்த முதியவரைப் பார்த்ததும் அப்பா நினைவு வந்தது. 'ரிசல்ட் என்ன ஆச்சு' என்று கவலையுடன் வீட்டில் காத்துக் கொண்டிருப்பார். அம்மாவும் தான். இருக்கட்டும். என்ன பாடு படுத்தினார்கள்?

சே, வீடா அது? சுத்த போர். எப்பவும் திட்டு. ஓயாத அட்வைஸ். படி...படி...படி...

"சரியா படிச்சு மார்க் எடுக்காததினாலே எஞ்சினியரிங் சீட் கிடைக்கலேடா எனக்கு. அதனால எப்படியாவது நீ எஞ்சினியரா யிடணும்டா..." என்று அவர் ஏக்கத்தை இவனை



வைத்துத் தீர்த்துக் கொள்ள ஓயாத நச்சரிப்பு.

அம்மாவும். "உங்க தாத்தா வெறும் டைபாய்டிலே இறந்து போனது எங்க ஊர்ல நல்ல டாக்டர் இல்லாததினாலதான். அப்பவே தீர்மானிச்சேன், என் மகனைப் பெரிய டாக்டராக்குவேன்னு. அப்ப உனக்கு மூணு வயசு..." என்று ஆரம்பித்து வெறுப்பேற்றி விடுவாள்.

"டயர்ட் ஆகும், படிக்க முடியாது" என்று சொல்லி கிரிக்கெட் விளையாட முடியாமல் பண்ணிவிட்டார்கள். பொறுத்துக் கொண்டான்.

டீ.வியைத் தூக்கி பரணில் போட்டுவிட்டார்கள், படிப்பு பாதிக்கும் என்று. சகித்துக் கொண்டான்.

நொந்து கொண்டே படித்துக் கொண்டிருந்தவனுக்கு, 'சாட்' உலகத்தைத் திறந்து வைத்தான் நண்பன் பரசு.

"உலகம் பூரா உள்ள பசங்க, பொண்ணுங்க கிட்டே பேசலாண்டா!" என்றதும் முதலில்



அமரர் கல்கி நினைவு
இளமைச் சிறுகதைப்
போட்டியில் 2,500/- ரூபாய்
ஆறுதல் பரிசு பெறும்
இரண்டாவது சிறுகதை

இவன் நம்பவில்லை. உட்கார்ந்து சம்பாஷித்துப் பார்த்ததும் அதிசயித்துப் போனான். அந்த உலகத்தில் அடியோடு மூழ்கிப் போனான்.

"கம்ப்யூட்டர் பேசிக் (Basic) கத்துக் கோயேண்டா" என்று நாகராஜனே அவனை ஒரு கம்ப்யூட்டர் சென்டரில் சேர்த்துவிட்டது வசதியாகப் போயிற்று.

விஷயம் விபரீத அளவைத் தொட்டுவிட, விழித்துக் கொண்ட அம்மா, அப்பாவிடம் அலறினாள். "என்னங்க, இவன் ட்யூஷன் போறேன்னு சொல்லிட்டு கம்ப்யூட்டர் சென்டரிலேயே பழிக் கிடக்கிறான். ஏதோ சாட்டிங் பண்றானாம். கேட்டா இங்கிலீஷ் நாலட்ஜ் இம்ப்ரூவ் ஆகும், அப்படி இப்படிங்கறான்."

"ஐயையோ, அதிலே இறங்கிட்டா நேரம் போறதே தெரியாதே!" தலையில் அடித்துக் கொண்டார்.

மகனைக் கூப்பிட்டு உட்காரவைத்து நெடுநேரம் போதித்தார். மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். சில சமயம் தலையைக் கூட ஆட்டினான். ஆனால் ஒரு வார்த்தையும் அவன் காதுக்குள் நுழைய வில்லை என்று கண்டு கொண்டார்.

வழக்கம் போல பிரவுசிங் சென்டருக்குள் நுழைந்தால் சுஷ்மா, அக்ஷிதா, ட்வின்ஸ்டர், 4ஜேபி ('இது நிச்சயம் பெண் தான்!'), ரவிராஜ், அப்புறம் ஹில்ஸ்பரோவிலிருந்து பேசும் இருபத்தி மூன்று வயது, டூரில் பிரியமுள்ள மிஸ் எரிகா... எல்லாரிடமும் உல்லாசமாகச் சம்பாஷித்தான், எதைப் பற்றியும். பிளேபாய் ஜோக்கிலிருந்து நோரா ஜோன்ஸ் ஆல்பம் வரை யில். அப்போதுதான் அறிமுகமானாள் டிமோதி, இரண்டு வாரத்திலேயே அவனது ஃபேவரிட் 'சாட்' பர்ஸன் ஆகிவிட்டாள்.

எதைப் பற்றி 'சாட்' பண்ணினாலும் படு இன்ட்ரஸ்ட்டிங்காக பதில் கொடுப்பாள். பத்து வார்த்தைக்கொரு விட் இருக்கும்.

"உன்னைப் பற்றி ஒரு கெஸ்" என்றான் ஒருநாள் திரையில்.

'சொல்லு!'

"உனக்கு இடது பக்கம் முதுகுவலி!"

"அட, எப்படிக் கண்டுபிடிச்சே?"

"கை அழுத்தத்தில் டபிள்லெட்டர் விழுமில்லையா?.... உனக்கு கீ போர்டில் வலது பக்கமுள்ள லெட்டர்ஸ் மட்டும் தான் டபிள் விழுது! ஸோ இடது பக்கம் நீ கொஞ்சம் தொய்வாக உட்கார்ந்திருக்கணும். அதுக்குக் காரணம் இடது பக்க முதுகுவலியா இருக் கணும்."

"வாவ்!" அசந்தாள். "லேடி ஷெர்லக் ஹோம்ஸ்!"

இத்தனைக்கும் அவள் வெறும் பிளஸ் ஒன் மாணவி என்று தெரிந்ததும் ஆச்சரியம் அதி கரித்தது. திருச்சூரில் ஒரு தமிழ்க் குடும்பத்தின் ஒரே பெண். அப்பாவுக்கு பாங்க் வேலையில் அந்த ஊருக்கு ட்ரான்ஸ்பரில் வந்தவள். இதற்கு முன் டெல்லி, ஜபல்பூர், பரோடா...

டிமோதி இவனைப் பற்றி மிகவும் ஆர்வமாகிவிட்டாள். அவனுக்குப் பிடித்த, பிடிக்காத விஷயங்களைப் பற்றி, எதிர்காலக் கனவுகளைப் பற்றி, என்று ஏராளமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

"வாட்ஸ் யுர் ஃப்யூச்சர் அம்பிஷன்? பைலட்? எஞ்சினியர்? டாக்டர்? சினிமா டைரக்டர்?"

"பயோடெக் எஞ்சினியர் ஆகப் பிடிக்கும். பிளஸ் டூவில் நல்ல மார்க் கிடைச்சதானால் அதுக்குப் போகணும்."

"கிடைக்கலேன்னா?"

"இருக்கவே இருக்கு அப்பாவோட கடை."

"தெருக் குழாயில் தண்ணீர் வராத எரிச்சலை மேலும் அதிகரிச்சிடுச்சு!"

"எது...?"

"பக்கத்திலேயே குடிநீர் வரி செலுத்தி விட்டீர்களா'ன்னு கேட்டு மாநகராட்சி ஒட்டி வைச்சிருக்கிற நோட்டீஸ்தான்!"

– உ. ராஜாஜி

"வியாபாரமா? உனக்கு அது வருமா?"

"ஏன் வராது? அதுவும் ஒரு தொழில் மாதிரி தானே?"

"தொழில்தான். இருந்தாலும் அதுக்குன்னு தனியே தேக், சாமர்த்தியம் எல்லாம் வேணும். நல்லவங்க வியாபாரத்தை விட, அசத்தறவங்க வியாபாரம் தான் அள்ளிட்டுப் போகும். அலையணும். ரிஸ்க் எடுக்கணும். இருபத்து நாலு மணி நேரமும் டென்ஷன் பழகிக்கணும்."

"ஐயோ, எனக்குச் சுத்தமா இதெல்லாம் ஒத்து வராதே?"

"ஆனா வேறே வழியில்லே உனக்கு" என்ற வரியுடன் ஒரு எமோஷன் – 'த்சொ' சொல்லும் முகம் – அடிக்கப்பட்டு வந்தது.

"அதெப்படி? எனக்கு சாய்ஸ் இருக்கே? எங்கப்பா மாதிரி இல்லை."

"சாய்ஸ்?"

"ஆமா. அவரு சரியாப் படிக்கலே. அதனால்தான் கடை போட்டாரு. பட் ஐ கேன். படிக்கிற திறமை இருக்கு."

"ரியலி?"

"பத்தாம் கிளாஸில் ஸ்கூல் செகண்டாக்கும். உட்கார்ந்து கொஞ்சம் ஹார்ட் வொர்க் பண்ணினேன்னா எகிறிடுவேன்."

"சொல்லிக்கலாம்தான். ஆனா சான்ஸ் கம்மி. இட்ஸ் டூ லேட். பிளஸ் டூ வந்திட்டே. சரி, என்ன உன் பிளஸ் ஒன் மார்க்?"

"628"

இன்னொரு 'த்சொ' முகம் வந்து விழுந்தது.

"?"

"ஃபர்கெட் இட். டென்ஷன் ரிலாக்ஸ் பழகிக்க. வியாபாரத்துக்கு உதவும்."

"என்ன பெட்?"

"பெட் வேண்டாம். பார்க்கலாம்."

"நீ பயப்படறே!"

"அப்படியில்லை. உன்னை வீணா டென்ஷன் படுத்த விரும்பலை. லீவ் இட். பை."

மறைந்தாள் திரையில். ஒரு நாள் சென்று



சாட்'டில் வந்தபோது...

"ஹை! என்ன நேத்து உன்னை எந்த 'சாட்' ரூமிலும் காணோம்?"

"நான் படிக்க ஆரம்பிச்சிட்டேன் டிமோ."

"ஓ. நான் அன்னிக்கு அடிச்ச ஜோக்கை சீரியஸாய் எடுத்துக் கொண்டாய் போலிருக்கு. கோபமா?"

"நோ... பை" என்று முடித்துவிட்டான்.

சொன்னானே தவிர, படிக்க உட்காரும் போது அவ்வாறு செய்து நாளானதால் உடம்பும் மனமும் ஒத்துழைக்கவில்லை. அப்பா வேறு மறுபடியும் அட்வைஸை ஆரம்பித்து எரிச்சலூட்டி விட்டார்.

மூன்றாம் நாள் சாட்டில் வந்தவள், "என் கஸினைப் பார்க்கப் போயிருந்தேன்" என்றாள்.

"கஸினா? யார் அது?" அவனை அறியாம லேயே ஒரு பதற்றம் ஏற்பட்டது.

"அஸ்வத். பி.ஈ. பெயிலாயிட்டான். கூடப் படிச்சவங்க எல்லாம் ஆளுக்கொரு வேலை கிடைச்சுப் போயிட்டாங்க. ஷேம் ஆயிட்டுது இவனுக்கு. லேட்டாயிட்டுது ஞானம் வர. இனி என்ன செய்ய முடியும்னு விட்டுராம, ஒரு பக்கம் பரீட்சையைத் திரும்ப எழுத மும்முரமா படித்தான். மறுபக்கம் பிரைவேட்டா ஹார்ட்வேர் நெட்வொர்கிங், எம்படட் டெக்னாலஜின்னு படித்தான், இப்பத்திய மவுசு அதுக்குத்தான்னு தெரிந்து கொண்டு. உடனே வேலையும் கிடைச்சு, டிஸ்டிங்ஷன்லே பாஸூம் ஆகி, கம்பெனியில் ஒரு ரெய்ஸூம் வாங்கிட்டான். அடுத்த மாதம் ஸானோஸ் கிளம்பறான். முன்பு அவனை உதவாக்கரை, குட் ஃபார் நத்திங்னு கிண்டலடிப்பேன். இப்ப பார்த்து பாராட்டிட்டு வர்றேன்."

இவனுக்கு அந்த அஸ்வத்மேல் பொறாமை ஏற்பட்டது. அவனைவிட அதிகம் சாதித்து அவளிடம் சூப்பர் பாராட்டு வாங்கணும் என்று ஒரு வெறியும்.

'சாட்' என்று இறங்கிவிட்டால், கூடவே நிறைய வெப் ஸைட் மேய்வது தவிர்க்க முடியாதது. சில சமயம் விதவிதமான ஸைட்களி லிருந்து வித்தியாசமான ஜோக்ஸ், பன்லைன்ஸ், எடுத்து அனுப்புவான் டிமோவிக்கு.

'கோட்ஸ்' வர்றது குறைஞ்சிட்டதே. படிக்க உட்கார்ந்திட்டே போலிருக்கு. ஓகே, ஒரு சேஞ்சுக்கு நான் அனுப்பறேன்.'

'ONE OF THE MOST EFFECTIVE TECHNIQUES OF TIME MANAGEMENT IS THE SIMPLE ONE OF SETTING A DEADLINE.'

- JOHN LAGEMANN

முதல் வாசகம் வந்தது. தொடர்ந்து நிறைய. எல்லாமே உற்சாகப்படுத்தின.

அதோடு நிற்கவில்லை. அவனின் மொத்தப் பாடங்கள், அதன் பக்க அளவுகள், ஒவ்வொரு பாடமும் படிப்பதில் அவனுக்குள்ள ரிலேடிவ் கஷ்டம், மொத்தம் மிச்சமிருக்கும் நாட்கள், ஸ்கூல் ட்யூஷன் தவிர படிக்கக் கிடைக்கும் காலம், என்று எல்லா விவரமும் வாங்கிக் கொண்டாள்.

அடுத்த நாளே அவளிடமிருந்து நீட்டாக ஒரு டைம் டேபிள் வந்தது.

"இதை ஸ்ட்ரிக்டா ஃபாலோ பண்ணு. எதிலாவது லேட் ஆனால் மைனஸ் போட்டு நிமிஷங்களை நோட் பண்ணிக்கோ. வேறொன்றில் கொஞ்சம் வேகமாப் படிச்சு கெய்ன் பண்ணி விடு. தவிர, குஷன் ஹவர்ஸூம் வைத்திருக்கிறேன், பார்த்தியா?"

கவனித்தான். அந்த அக்கறையும் உதவியும்..

"எங்கே பிடிச்சே இந்த ஐடியாவெல்லாம்?"

"என் கஸின் முதல் என் கிளாஸ் மேட்ஸ் ஸிஸ்டர்ஸ் வரை, எல்லாரிடமிருந்தும் தான்."

"எனக்கு உன்னைப் பார்க்கணும் போல இருக்கு, டிமோ. உன்னைச் சந்திப்பது எப்படி?"

"நோ வே. நீ இருப்பது நாகர்கோவிலில். நான் இருப்பது திருச்சூரில்."

"அப்படின்னா உன் போட்டோவை ஸ்கேன் பண்ணி அனுப்பு. நானும் அனுப்பறேன்..." என்று அடித்தவன் 'என்டரை' அழுத்துமுன் ஒரு செகண்ட் யோசித்தான்.

அவள் மனத்தில் அவனைப் பற்றி ஒரு கற்பனை உரு இருக்கும். அதைக் கலைக்கணுமா? ஒரு வேளை அவன் அந்த எதிர்பார்ப்புக்கு மிகவும் இறங்கி இருந்தால்? வேண்டாம் ரிஸ்க். சவாலில் ஜெயித்துவிட்டு முகம் பார்க்கலாம்.

டெலீட் செய்துவிட்டு, "ஓ.கே" என்றான்.

இதோ டாப் மார்க் எடுத்தாயிற்று.

டிமோதி தான் காரணம். அவளது அனுசரணையான வழிகாட்டுதல். அதெல்லாம் தான்.

இதோ விரைந்து கொண்டிருக்கிறான் அவளை நேரில் சந்திக்க. சந்திக்கும் அந்த கோல்டன் மொமண்டில் அந்தச் சந்தோஷ செய்தியைச் சொல்லி, அவள் முகம் மலருவதை நேரில் க்ளோஸ் அப்பில் பார்க்க.

ஆனால் டிமோதி குறிப்பிட்ட அந்த முகவரியில் அப்படி ஒரு நபரே இல்லை.

இருபத்தெட்டாம் நெம்பர் வீட்டில் ராம்ஜி என்று யாருமே இல்லை. பல வருஷமாக அந்த வீட்டில் மகாதேவன் என்பவருடைய குடும்பம் தான் இருந்து வந்திருக்கிறது.

சுற்றிச் சுற்றி விசாரித்தும் எந்த தகவலும் கிடைக்க வில்லை. அவள் கொடுத்த நம்பரை மீண்டும் செக் அப் செய்ய, மெயின் ரோடி லிருந்த பிரவுஸிங் சென்டருக்குள் நுழைந்தான்.

டிமோதியிடமிருந்து புது ஈ-மெயில் வந்திருந்தது.

"........தவறான முகவரி தந்ததற்கு மன்னிக்கவும். உன் மதிப்பெண் 'நெட்'டில் தெரிந்து கொண்டேன். சூபர்ப்! வாழ்த்துகள். நீ ஜெயித்து விட்டாய். பந்தயத்திலும் வாழ்க்கையிலும்! உன்னை மேம்படுத்துவதுதான் என் எண்ணம். மற்றபடி நான் அறிமுகமற்ற வளாகவே அகன்றுவிட விரும்புகிறேன். அதற்கு உரிமை கொண்டாடி, எப்பவும் நீ எனக்கு கடன்பட்டவனாக இருக்க விரும்பவில்லை. குட்லக்."

ஏமாற்றமும் வருத்தமும் ஏற்பட்டது.

கொஞ்ச நேரம் தான்.

ஆனாலும் அவளுக்குப் பதில் உதவி செய்வதென்பது வாழ்வில் முன்னுக்கு வருவது தான். அப்பா எத்தனை சந்தோஷப்படுவார்! அம்மா!

மதிப்பெண் பட்டியலைக் காட்டியதும்...

அப்படியே அவன் தோள்களைப் பற்றி அணைத்துக் கொண்டார் அப்பா. உச்சி மோந்த அம்மாவும் மகிழ்ச்சியில் திக்கு முக்காடினாள்.

இரவு தூங்கும்போது...

"என் மகன் எப்பவுமே திறமைசாலிதான். உங்களுக்குத்தான் தேவையில்லாம அவன் மேல் ஒரு அவநம்பிக்கை" என்றாள் கௌரி.

நாகராஜன் யோசித்தார்.

'எல்லாம் சரியாகிவிட்டது. சொல்லிவிட வேண்டியது தானே?' என்றது மனம். ஆனால் அதே மனம், 'வேண்டாம். அவன் மனத்தில் பதிந்துவிட்ட டிமோதி என்ற இனிய இமேஜைக் கலைக்க வேண்டாம்!' என்று தடுத்தது.

"அப்படீங்கறே? இருக்கலாம்!" என்றார். ○

பயந்தாங்கொள்ளி!

சண்டைக் காட்சிகளில் தூள் கிளப்பும் ஜாக்கிசான், இயல்பாக ஓர் உலகமகா பயந்தாங் கொள்ளி! அதியாயத்துக்கு மூட நம்பிக்கை கொண்ட ஆசாமி! நம்புவதற்குக் கஷ்டமாக



இருக்கிறதா?

பெய்ஜிங்கின் பத்திரிகை யொன்றில் அவரே சொல்லியிருக்கிறார்: "என் காரை பாலத்தினடியில் நிறுத்தக் கூட மாட்டேன். திடீரென்று அது இடிந்து காரையும் என்னையும் நசுக்கிவிட்டால்..? அப்புறம் இந்த ரோலர் ஸ்கேட்டரில் சர்சர்ரென்று போகிறார்களே, அதில் ஏறக் கூட பயம்தான். எங்கேயாவது விழுந்து மூட்டியையும் மூக்கையும் பேர்த்துக் கொண்டால்?

"ஆனா ஷூட்டிங்குக்கு வந்தா நான் எதுக்கும் ரெடி. காமிரா முன்னால் ஸ்டண்ட் பண்ணி கை கால் முறிஞ்சாலும் பரவாயில்லை. அத்தனையும் விளம்பரமாச்சே" என்கிறார்.

—சேனன்



மணக்குள விநாயகர்

படம்: டிஜிட்டல் சண்முகம்

நடக்குமென்பார்? நடக்கும்!

மேஷம் : திடீரென்று 'கௌரவ' அந்தஸ்த்துக்கு உயர்ந்த குடும்ப அட்டையைப்போல, உங்கள் குடும்பத்திலும் திடீர் உயர்வு ஏற்படும். சுப காரியங்கள் கூடி வரும். பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை நிகழும். திருமணம் ஆகாதவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு கூடி வரும். சொத்து விவகாரம் அனுகூலமாக முடியும். கூட்டுத் தொழில் புரிபவர்கள் மிகவும் அனுகூலம் அடைவார்கள். பண நடமாட்டம் தாராளமாக இருக்கும் என்பதால், குதூகலமான மனநிலையுடன் வளைய வருவீர்கள்.

ரிஷபம் : "அப்பாடா! தப்பிச்சது தம்பிரான் புண்ணியம்" என்று ஆசுவாசப்பட்டுக் கொண்டிருக்கும் வாஜ்பாய் போல, இந்த வாரம் நீங்கள் பல பிரச்னைகளிலிருந்து மயிரிழையில் மீண்டு விடுவீர்கள். எடுத்த காரியங்களில் வெற்றி பெற்று புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். சரளமான பண வசதி இருக்கும் என்றாலும், கண்ணை மூடிக் கொண்டு கன்னாபின்னாவென்று இறைக்க வேண்டாம். வெளிநாட்டுத் தொடர்பு பயன் தரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

மிதுனம் : நாடெங்கும் நிகழ்ந்துவரும் குளிர்பான சம்ஹாரம் படலம் போல, நீங்களும் உங்கள் எதிரிகளை ஒரு கை பார்த்து விடும் காலம் வந்தே விட்டது. குறிப்பாக உத்தியோக வகையில் அனுகூலமான சூழ்நிலை உருவாகும். சகல காரியங்களிலும் சாதகமான திருப்பங்களே நேரிடும். கொடுக்கல் - வாங்கல் சுமுகமாக இருக்கும். மாணவர்களுக்கு மாமூலான பலன்களே நடைபெறும்.



கடகம் : காற்றாடிக் கொண்டிருக்கும் இன்ஜினியரிங் கல்லூரிகள் போல, வெறுப்பான மனநிலையில் இருந்தீர்கள் அல்லவா? ஏழரைச் சனி என்றால் அப்படி இப்படிதான் இருக்கும். பதற்றப்படாமல், தீர ஆலோசித்துக் காரியங்களைச் செய்து வாருங்கள். ஒரு குறையும் வராது. காரியங்கள் உடனுக்குடன் நடந்து உற்சாகத்தை அள்ளிக் கொண்டு வரும். புதிய உத்தியோக முயற்சி செய்து வருபவர்களுக்கு அனுகூலமான செய்தி வந்து சேரும். தனகாரகன் குரு, பலமாக இருப்பதால், சில்லறைக்குப் பஞ்சமிருக்காது.

சிம்மம் : அரசியல் வி.வி.ஐ.பி.களை, கலங்கடித்துக் கொண்டிருக்கும் கூட்டணி ஜுரம் போல, பொருளாதாரப் பிரச்னை உங்களைக் கலாய்த்து ஒரு வழியாக்கிக் விட்டிருக்குமே. விடுங்க கவலையை. இனி, பழைய கடன்கள் மறைந்து, கையிருப்பு அதிகரிக்கும். முக்கியஸ்தர்கள் பிரபு தனவான்களின் ஆதரவு ஏற்பட்டு, பணத் தொல்லை மறையும். உத்தியோகத்தில் மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் மறைந்து, சுமுகமான சூழ்நிலை நிலவும். தாமதமடைந்த சுப காரியங்கள் நிறைவேறும்.

கன்னி : ஏதோ ஏதோ காரணங்களுக்காக, திடீரென்று தள்ளிப் போடப்பட்ட 'பாய்ஸ்' சினிமா வெளியீட்டைப் போல, உங்களுடைய உத்தியோக உயர்வும் கொஞ்ச நாளைக்குத் தள்ளிப் போடப்படும். ஆனால் தொழில் விஷயத்தில் எதிர்பாராத அனுகூலம் ஆதாயம் உண்டாகும். தொட்டதெல்லாம் பொன்னாகும் ராசி அமைகிறது. எழுத்து, பத்திரிகை, கல்வி, துறையைச் சேர்ந்தவர்களுக்கு 'ஆஹா' வாரம். கலைத் துறைக் காரர்களுக்கு 'ஓஹோ' வாரம்.

துலாம் : இலேசானத் தூறலும், மிதமான வெயிலுமாக அசத்தலாக இருக்கும். சிங்காரச் சென்னையின் சீதோஷ்ணம் போல, உங்கள் குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு நிலையும் இனிமையாகவே இருக்கும். சுபமங்கள காரிய முயற்சிகள் கூடி வந்து மகிழ்ச்சி ஏற்படுத்தும். தெய்வீக ஈடுபாடு,

அக்னிசர்மா பக்கம்







புனித ஸ்தல பயணம் ஆகியவை நேரும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலை, உடல், ஆரோக்கிய மேன்மை, புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். கிரக வழிபாடு நன்மை தரும்.

விருச்சிகம் : இடிப்புக்கும் இடமாற்றத்துக்கும் தப்பித்த அண்ணா, எம்.ஜி.ஆர். சமாதிகள் போல, நீங்களும் அலுவலகம் சார்ந்த பிரச்னைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். புதியவர்கள் அறிமுகத்தால், மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை இருக்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். நண்பர்கள், உறவினர்கள் வருகை அதிகரிக்கும். குல தெய்வப் பிரார்த்தனை நிறைவேறும். சாதுக்கள் தரிசனம் மன அமைதி தரும்.






தனுசு : பாகிஸ்தான் போனதாக பழி வந்து சேர்ந்ததால், கடுப்படித்துப் போயிருக்கும் ஐஸ்வர்யாராய் போல, நீங்களும் சிறு சிறு பிரச்னைகளால் பொல்லாங்கு வந்து சேர, வெம்பிப் போய் நிற்பீர்கள். ஆனால் உங்கள் கிரக சஞ்சாரம் எப்படியும் உங்களை மீட்டு, ஆறுதல் தந்து விடும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில்கள் அதிக ஆதாயம் தரும்.

நடிகை தாரிகாவுக்கு (மீனம்) இந்த வாரம் மாயாஜாலம் மாதிரி ஏதோ நடக்கப் போகுதாமே!






மகரம் : சூடு பிடித்திருக்கும் செட்-டாப் பாக்ஸ் விற்பனையைப் போல உங்கள் தொழில் முயற்சிகளும் சூடு பிடிக்க ஆரம்பிக்கும். இரும்பு, எண்ணெய் ரசாயனம், மருத்துவம், உலோகம், தோல் வகை, எதிர்பாராத லாபம் கொண்டு வரும். கணவன் - மனைவி உறவு நிலை சீராகவும், சந்தோஷமாகவும் இருக்கும். குடும்பஸ்தானத்தை, குரு பகவான் பார்ப்பதால், சுப காரிய முயற்சிகள் கூடி வரும். குடும்பத்தில் ஏற்பட்ட விரோதம், கருத்து வேறுபாடு அகன்று, ஒற்றுமை நிலவும். வெளியூர் பயணம் அனுகூலம் தரும். பெண்கள், நினைத்தது நடக்கும்.

கும்பம் : சென்னை நகருக்குள் பகல் நேரத்தில் நுழைய மெட்ரோ வாட்டர் லாரிகளுக்குத் திடீர்த் தடை விதிக்கப்பட்டுள்ளது போல, கும்ப ராசி அன்பர்களின் வாழ்க்கையில் நுழைய சிறுசிறு பிரச்னைகளுக்கும் தடை போட்டிருக்கிறார் பூர்வ புண்ணியஸ்தானத்தில் பலம் பெற்று விளங்கும் சனி பகவான்ஜி. அதனால், தொழிலோ, அலுவலக உத்தியோகமோ, காதலோ, வெளிநாட்டுப் பயணமோ நீங்கள் செய்யும் எல்லா முயற்சிகளுமே சக்ஸஸ்... சக்ஸஸ் தான். அகலக்கால் வைக்காமல், அளவோடு செயல்படுங்க. வளமோடு வாழ்வீங்க. ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு, சாதகமான வாரம்.

மீனம் : காரும், கிரிக்கெட் கடவுள் சச்சினும் போல இலேசான சர்ச்சைக்கும் சங்கடத்துக்கும் உள்ளாவீர்கள் என்றாலும், குரு சுக்ர சூரியன் பார்வை என்பதால், மாயாஜாலம் போல ஏதாவது நடந்து 'அப்பாடி!' என அமைதி கொள்வீர்கள். உத்தியோக சம்பந்தமாகப் பயணம் ஏதும் மேற்கொள்ள நினைத்திருந்தால், இதுதான் சரியான சமயம். அதிர்ஷ்டம் அலட்டிக் கொள்ளாமல் உங்கள் அட்ரஸ் தேடி வரும். கடன் தொல்லை குறையும். உற்சாகமான மனநிலை ஏற்படும். உங்களால் மக்களுக்கும், மக்களால் உங்களுக்கும் மகிழ்ச்சி ஏற்படும்.





ஆகஸ்ட் 27 முதல் செப்டெம்பர் 2 வரை

குறையொன்றுமில்லை 5

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

பீஷ்மாச்சார்யாரின் வைபவத்தைச் சொன்னேன். நம் கிருஹத்திலே அவரைப் போன்ற வயோதிகர்கள் இருந்தால் அவர்களை யெல்லாம் ஜாக்கிரதையாக ரக்ஷிக்க வேண்டும்.

அடியேன் பம்பாயில் உபன்யாஸத்துக்காகப் போயிருந்தபோது, அங்கே பஜனை மடத்திலே உபன்யாஸம் நடந்தது. எதிரே சங்கர மடத்திலே தங்கியிருந்தேன்.


ஒரு நாள் ஸ்த்ரீகளெல்லாம் – இருபது பேர் – கையிலே டேப் ரிக்கார்டருடன் வந்தார்கள். "ஒரு மணி நேரம் ஏதாவது பேசினால், இதிலே டேப் செய்து கொண்டு போகிறோம்" என்றார்கள்.

'என்ன பேசுவது' என்று கேட்டபோது அவர்கள் அத்தனை பேரும் சொன்னார்கள்: "இங்கே சதாராவிலே காஞ்சி பெரியவர் எழுந்தருளியிருக்கிறார். அவரைப் போய் எல்லோரும் சேவித்தோம். அவர் ஓர் ஆக்ஞாபனம் பண்ணினார். 'நீங்களெல்லாம் மத்தியான வேளையிலே வெறுமே தானே இருக்கிறீர்கள்...? நீங்கள் பிரசாரம் பண்ண வேண்டும். அயல் தேசத்திலே ஒன்று நடக்கிறது... வயதான காலத்திலே அப்பா – அம்மா வீட்டிலே இருந்தால், இடைஞ்சலாக இருக்கும் என்று, அவர்களுக்காக ஒரு சரணாலயம் ஏற்பாடு பண்ணி, அவர்களை அங்கே போய் விட்டுவிடுகிறார்களாம்... மாதத்துக்கு ஒரு தடவை பிள்ளையும் மாட்டுப்பெண்ணும் தங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டுபோய் அங்கே காட்டி, 'அதோ உட்கார்ந்திருக்கிறாரே, அவர்தான் உங்கள் தாத்தா. அதோ தெரிகிறாரே... அது தான் பாட்டி.... இரண்டு பேரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுக்குப் பிடித்த பண்டங்கள்.... கொண்டு போய் கொடுத்துவிட்டு வா அம்மா...' என்று குழந்தைகளின் கையிலே கொடுத்து அனுப்புகிறார்கள்... அரை மணி நேரம் இப்படிச் செலவிடுவார்கள். அப்புறம் கிளம்பிப் போய் விடுவார்கள். மறுபடியும் அடுத்த மாதம்தான் போவார்கள்!

ஒரு சமயம் இந்தக் கிழவன் கிழவி யெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு, 'நாங்கள் சாப்பிட மாட்டோம், நாங்கள் குளிக்க மாட்டோம்' என்று மறியல் பண்ணவே, அந்த இடத்தையே இழுத்து மூடி விடும்படி ஆனது. இப்போது அங்கேயிருந்து நம் நாட்டுக்கு இந்தப் பழக்கம் தொத்திக் கொண்டு விட்டது...' – இப்படி காஞ்சி ஆசார்யாள் கவலைப்படுகிறார். இதை நன்றாகக் கவனிக்க வேண்டும் – "நம் நாட்டிலே, அதுவும் இந்த பம்பாய்க்கே இந்தப் பழக்கம் வந்து விட்டது. இது எல்லா இடங்களுக்கும் பரவிவிட்டதானால் நாளா வட்டத்திலே இதுவே தர்மமாகப் போய்விடும். இதைப் பார்க்கிற பிஞ்சு உள்ளங்களிலே படிகிறது அல்லவா... நாளைக்கு அவர்களும் தங்கள் அப்பா அம்மாவை அப்படிக் கொண்டு போய் வைப்பார்கள்! இதுவே நாளா வட்டத்தில் தர்மமாகப் போய் புத்தகத்திலே கூட வந்து விடும்... இதை நடக்க விட்டுவிடாமல் நீங்கள் பிரசாரம் பண்ண வேண்டும்'' என்றார் ஆசார்யாள்.

"ஆகையினாலே புராண இதிகாசங்களிலே, தாய் தந்தையரை ரக்ஷிக்கிற விஷயத்தை யார் யார் பண்ணினார்கள், யார் யார் அதனால் பெருமை அடைந்தார்கள்? – இதைப் பற்றி நீங்கள் ஒரு மணி நேரம் சொன்னால், அதை நாங்கள் ரிகார்ட் செய்து ஒவ்வொரு வீட்டிலேயும் கொண்டு போய்ப் போட்டுக் கேட்கச் செய்வோம். இது ஆசார்யாள் ஆக்ஞை'' என்றார்கள் அந்தப் பெண்கள்.

அந்திமக் காலத்திலே பெரியவர்களைக் கொண்டு போய் இப்படி நிராதரவாக விடலாமா? அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா...? அதனால் இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டும் இங்கே... அந்திமக் காலத்தில், ஒருத்தருக்கும் ஒரு சிரமமும் கொடுக்காமல் ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறார்... பிராணன் போய் விட்டது! 'யாருக்குமே சிரமத்தைக் கொடுக்கவில்லை; இந்த மாதிரி யார் அமைவார்கள்!' என்று பின்னையும்



மாட்டுப் பெண்ணும் சொல்கிறார்கள். கூட இருந்த எல்லோருமே சொல்கிறார்கள்.

அனாயாசேன மரணம்! – போனவருக்கு இது அமையவேண்டுமேயொழிய, இருப்பவர்கள் அதைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். அவர் சிரமப்படாமல் போக வேண்டும் என்பது போனவருக்கு மட்டும்தான் சொன்னது. இருந்து கொண்டிருப்பவர்கள் என்ன நினைக்க வேண்டும்..?

'ஒரு மாதமாவது அவருக்கு சிச்ருஷை பண்ண நமக்குக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று நினைக்க வேண்டும். அவர்கள் சிரமப்படுகிறார்கள் என்றால், தீர்த்தத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை என்றால், நாம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். பாதத்தைப் பிடித்துவிட வேண்டும்; ஸ்நானம் பண்ணி வைக்கலாம்; அன்னத்தை ஊட்டலாம்...

அவர்கள் நினைக்கிறார்கள்... 'அடடா! இந்த துர்கந்தத்தைச் சகித்துக் கொண்டு நம் பிள்ளை இப்படிப் பண்ணுகிறானே, இவன் குழந்தைகளெல்லாம் நன்றாக இருக்கட்டும்' என்று அனுக்கிரஹம் பண்ணுகிறார்கள். அந்த அனுக்கிரஹம்தான் இவர்கள் சந்ததி பின்னால் மேன்மையுறுவதற்கு உதவுகிறது.

ஆகவே, சிரமம் கொடுக்காமல் இவர்கள் போய்விட்டால் நன்றாயிருக்குமே என்று ஒரு போதும் சொல்லக் கூடாது.

பெரியவர்களும் ஓடாய்த் தேய்ந்து, அந்திமக் காலத்திலே தங்களை ஒதுக்குகிறார்கள் என்று தெரிந்ததுமே 'கிருஷ்ணா - ராமா - கோவிந்தா' என்று சொல்ல வேண்டாமா? 'குழந்தை வந்துவிட்டானா? வெளியே போன பேரன் வந்துவிட்டானா?' என்று இவர்களுக்கு விசாரம். இவர்களுக்கும் மமகாரம் போவதில்லை! இப்படிப்பட்ட கிருஹத்திலே தேவதைகளெல்லாம் வர மாட்டார்கள்.

பெரியவர்கள் இல்லையென்றால் நாம் இல்லை. வயதான தாய் தந்தையர்களை ரக்ஷிப்பது, பித்ரு தேவதைகளை ஆராதிப்பது, அவர்கள் ப்ரீதியைச் சம்பாதித்துக் கொள்வது... எல்லாம் ரொம்ப முக்கியமானதாலேதான், பித்ரு கீதத்திலே அதற்கு இவ்வளவு சிறப்புச் சொல்லப்பட்டிருக்கிறது.

பீஷ்மர் மோக்ஷமடைந்த தினத்தில் பித்ரு காரியம் செய்தால், ரொம்ப விசேஷம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பீஷ்மாச்சார்யார் அனுக்கிரஹத்தினாலேயும், அவரால் சொல்லப்பட்ட ஸஹஸ்ரநாம மகிமையினாலேயும், அந்த பீஷ்மாச்சார்யரை அனுக்கிரஹித்த வாசுதேவனுடைய பரிபூர்ண கிருபையினாலேயும் எல்லோருக்கும் சர்வ க்ஷேமமும் ஏற்படும்.

பரமாத்மா நாமத்தின் சிறப்பைப் பார்த்தோமானால், அது வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அவன் பரமாத்மா என்பதை எண்கள் மூலம் சொல்கிறது வேத வான் மயம்.

வித்யாரண்ய சுவாமி, வேத பாஷ்ய அதிகாரி – எவ்வளவு அழகாக வேதார்த்தம் சொல்கிறார். இதெல்லாம் கேவலம், சாமான்யமான ஒரு மனிதனுக்கிருக்கிற புத்தியினாலே சொல்லிவிட முடியாது. எவ்வளவுதான் சாஸ்திர பாண்டித்யம் இருந்தாலும், வேத பாஷ்யம் சொல்ல வேண்டுமானால் ஈசுவர அனுக்கிரஹம் இருக்க வேண்டும்.

அதனால்தான் வித்யாரண்ய சுவாமி, வேத பாஷ்யம் ஆரம்பிக்கிற போதே லக்ஷ்மி நரசிம்மனை தியானம் பண்ணினார். அவன் அருள் இருந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்று வேண்டிக் கொண்டார்...

அவர் செய்த வேத பாஷ்யத்தை வாசிக்கச் சொல்லி இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்!

"நமக்கு இஷ்டத்தை உண்டு பண்ணுவதிலேயும் அனிஷ்டத்தை நிவர்த்தி பண்ணுவதிலேயும், அலௌகிகமான - நம்மால் பார்த்து உணர முடியாத - பரோக்ஷமான - கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களை வேதம் சொல்வதனால் அதற்கு வேதம் என்று பெயர்" - இப்படி ஆரம்பித்து, வித்யாரண்யர் ஒவ்வொரு மந்திரத்துக்கும் விசேஷமான பாஷ்யம் இயற்றுகிறார்...

(வளரும்)

"தலைவரை உடனடியாக விடுதலை செய்யின்னு சக கைதிகள் போராட்டம் நடத்தினாங்களாமே... அவர் மேல அவ்வளவு மதிப்பா?"

"நீங்க ஒண்ணு, அவர் இருபத்தி நாலு மணி நேரமும் பேசியே கழுத்தறுக்கற தொல்லை தாங்க முடியாமத்தான் அப்படிப் போராடினாங்க..."

— எம்.ஆர்.மூர்த்தி



பித்ருக்களுக்கு தர்பணம் செய்வதால் நம் குலம் தழைக்கும் !

பித்ரு தர்ப்பண க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில்

மஹாளய அமாவாசை நாளில்

அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள் !

ஜெகத்குரு காஞ்சி ஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பேரின்பமும், பெருவாழ்வும் தரும் புண்ய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம் !

பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாத சுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ ராமநாத சுவாமி உடனிருந்து அருள் பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவ விஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாக தோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்பு மிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத் திருப்பணி நடைபெறுகிறது. புண்ணிய பூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றும் பணியிலும் , நாமும் பங்கு கொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


தங்கள் சார்பாக அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு வருடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், விரும்பும் மாதத்தில் அமாவாசை தினத்தில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்திற்கு தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட "கோடி தீர்த்த சொம்பும்" வலம்புரி சங்கும் ஸ்ரீ பர்வத வர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாத சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும். ரூ.5000 - அனுப்பும் அன்பர்களுக்கு ஆறு வருடங்களுக்கு அன்னதானம் செய்து "இராமலிங்க தீபமும்" 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீ மத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று **'தர்ப்பணம்'** செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு **"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்"** மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களை குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள் , ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ. 750- அனுப்பும் போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், மாதம், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேரருளைப் பெற்று க்ஷேமமாக வாழுங்கள்.

இராமேஸ்வரத்தில் அமாவாசை நாளில் அன்னதானம் செய்ய விரும்பும் அன்பர்கள் சார்பாக தாங்கள் என்ன வேண்டுதலுக்காக அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசை நாளில் அக்னி தீர்த்தத்திற்கு தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D. D. M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai-4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நடைபெறும் இச் சிறந்த அன்னதானப் பணியிலும், அக்னி தீர்த்தத்திற்கு தீபவழிபாட்டு பணியிலும் பங்கு கொண்டு முன்னோர்களின் நல்லாசிகளைப்பெற உங்களை அழைக்கிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி தாயார்

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

TEL : 2495 9302, Fax : 2461 6466. E-mail:siva siva @ vsnl.net



ஸ்ரீ இராமநாத சுவாமி

பித்ருக்களுக்கு தர்ப்பண பூஜை செய்வது ஒவ்வொருவரின் இன்றியமையாத கடமையாகும்.

நீங்கள் கேட்டவை-தராசு

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? ராமர் அவதாரமா? மனிதரா என்ற பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்கிறாரே வைரமுத்து...?

! அதற்கு முன்னதாக, அவதாரமெனில் அவருக்கு ஒரு பிறப்பிடம் இருக்கக் கூடாதா என்ற பிரச்னைக்கு முடிவு காண வேண்டுமே! வைரமுத்து ஸார், பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குப் பதில் மேலும் குழப்பறீங்க. ப்ளீஸ்..!

● ரஞ்சனிப்ரியன், பள்ளிபாளையம்

? அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்பதற்காகச் சட்டம் இயற்றி எங்கள் ஆட்சியைத் தியாகம் செய்ய முடியாது என அத்வானி கூறியுள்ளாரே...?

! புரியலையா? ''தனிப்பெரும்பான்மையுடன் பி.ஜே.பி.யை ஆட்சியில் அமர்த்திக் காட்டுங்கள்; நீங்கள் விரும்பும் சட்டத்தை இயற்றிக் காட்டுகிறேன்'' என்று ஹிந்துத்வா அமைப்புகளுக்கு வாக்குறுதி அளிக்கிறார்.

● ஏ. பாலகிருஷ்ணன், சேலம் - 4 ★

? "சொத்துக் கணக்குக் காட்டணும்" என்று தமிழக அரசு, ஊழியர்களுக்கு லேட்டஸ்ட் இடுக்கிப்பிடி போட்டுள்ளதே...?

! நடத்திக் கொண்டிருப்பவர்கள்தான் வழிகாட்ட வேண்டும். நடுங்கிக் கொண்டிருப்பவர்களை ஏன் மேலும் மிரட்ட வேண்டும்?

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21

? 'தலைமைச் செயலகத்தைக் கோயிலாகக் கருத வேண்டும்; பொது மக்கள்தான் தெய்வம்' என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளாரே...?

! அப்பாடா, அவரை உளமாரப் பாராட்ட ஒரு விஷயம் கிடைத்தது. நூற்றுக்கு நூறு மார்க். இதுவரை யாரும் சொல்லாததைக் கூறியதால் நூற்றுக்கு நூற்றுப்பத்து கூடத் தரலாம்!

● எஸ்.விஜயலக்ஷ்மி, சென்னை - 54

? சமூக விரோத செயல், மற்றும் இதர காரணங்களுக்காகச் சேரணி அரங்கம் இடிக்கப்பட்டது என்று அரசு காரணம் கூறியிருப்பது குறித்து...?



* பிள்ளையார் சுழி



* மீண்டும் அழைப்பு!



* அவதாரக் குழப்பம்!



* நூற்றுக்கு நூற்றிப்பத்து!



* சறுக்கிய வீரர்

ஸச்சின்

● எஸ்.கே. மூர்த்தி, கும்பகோணம்

? காங்கிரஸில் கோஷ்டிப் பூசல் மறைய ஒரு வழி சொல்லுங்களேன்...?

! உட்கட்சி ஜனநாயகம் - முறையான கட்சித் தேர்தல்கள் - இது ஒரு வழி அல்ல; ஒரே வழி!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் - 2

? அ.தி.மு.க.வுடன் ஒப்பிடுகையில் தி.மு.க. சிறந்த கட்சி என ப. சிதம்பரம் தெரிவித்துள்ளாரே?

! அப்பாடி! ஹிந்துத்வாவுக்கு எதிரான பாரதத்துவா கட்சிகள் இணைந்து செயல்பட முதல் அடி எடுத்து வைத்திருக்கிறார்.

● மல்லிகை மன்னன், மதுரை

? 'மெரினா கடற்கரையை அழகுபடுத்த அண்ணா, எம்.ஜி.ஆர். சமாதிகளையும் அகற்ற வேண்டும்' என்று செய்தி வெளியிட்ட 'தினமலர்' நாளிதழை, தி.மு.க.வினர் கொளுத்தியது அக்கிரமமான செயல்தானே...?

! தினமலருக்குக் கருத்துக் கூற உரிமை உண்டென்றால் அக்கருத்தை எதிர்க்க தி.மு.க.வுக்கும் உரிமை உண்டு. எனவே பத்திரிகைகளைக் கொளுத்தியது அக்கிரமம் என்று கூற முடியாது - விலைக்கு வாங்கிக் கொளுத்தாமல் கடையிலிருந்து அபகரித்து வந்து கொளுத்தியிருந்தால்தான் அக்கிரமம்.

● எஸ்.ஆர். ஸ்வாமி, திருநெல்வேலி - 11

? முதல்வர் எது செய்தாலும் அதைத் துணிச்சல் என்று பாராட்டும் மக்கள் கூட்டம் நிறைய இருக்கிறதே...?

! அந்தத் 'துணிச்சல்' பாராட்டுபவர்களை நோக்கிப் பாயும்போது தெரியும் அதன் வலி; புரியும் அதன் அநீதி!

● கு. அருணாசலம், தென்காசி

? 'இரண்டாவது சுதந்திரப் போர் நடத்த



• மறைமுக வாக்குறுதி!

! அதே கடற்கரைச் சாலையில் சற்றுத் தள்ளியிருக்கும் காவல் துறைத் தலைமையகத்தை வருக்கும் சேர்த்து அரசே ஒப்புக் கொள்ளும் அவமானம். அது சரி, 'இதர காரணங்கள்' என்னவோ...?

(டென்டுல்)கார்...?

❐ ரூ. 100 பரிசு பெறுபவர் :
கிருஷ்ண ராஜ்கோபால்,
சென்னை - 92

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஏ. பாலகிருஷ்ணன், ஆர்த்தி பீடா ஸ்டால்,
புதிய பஸ் நிலையம், சேலம் - 636 004.

மாணவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு' - இது செய்தி. அப்படியானால் நாம் இன்னும் எவற்றிலிருந்து சுதந்திரம் பெற வேண்டும்?

! பிரதானமாக அறியாமையிலிருந்து சுதந்திரம். அதைப் பெற்றால் அனைத்துச் சுதந்திரங்களும் பெற்றது போலாகும்.

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்**

? பகவை மட்டும் கொல்லக் கூடாது என்று சட்டம் இயற்றினால், எல்லா உயிர்களையும் சமமாகக் கருதுகிற மனப்பான்மைக்கு அது முரண்பாடாகி விடும் என்கிறாரே கருணாநிதி?

! நியாயம்தான். இந்தச் சட்டத்துக்காக பெருமுயற்சி செய்யும் பா.ஜ.க.வினரேகூட, இந்திய ஜனநாயக இளைஞர்கள் கூட்டமைப்பு, பெப்ஸியையும் கோக்கையும் கழுதைக்குக் கொடுத்துக் குடிக்கச் செய்த போது கண்டனம் செய்தனர் - கழுதை என்ன, மனிதனைக் காட்டிலும் கேவலமா? அதுவும் ஓர் உயிரினம்தானே என்று!

● **கிருஷ்ண ராஜகோபால், சென்னை** ❐

? ஸச்சின் (டெண்டுல்) கார்...?

! பரிசு பெற்ற காருக்கு அரசு வரி விலக்கு அளிக்கும்படி கேட்டுக் கொண்டது சறுக்கல்; 'என்னால் வரி செலுத்த முடியாது' என்று ஃபியட் கம்பெனியிடம் முதலிலேயே திருப்பித் தந்திருந்தால், அவர்களே வரியைச் செலுத்தியிருப்பார்கள். இப்போது அரசு மறுத்த பிறகு ஃபியட் கட்டுகிறது. மூக்குடைப்புதான்.

● **எம்.ரேவதி, மன்னார்குடி**

? சமீபத்திய பத்திரிகைச் செய்திகளில் தங்களை அதிகம் பாதித்தது எது...?

! தமிழ் எழுத்துகளைச் சரியாக எழுதவில்லை என்பதற்காக, சென்னை வேப்பேரியிலுள்ள டவ்டன் பள்ளியில் எல்.கே.ஜி. குழந்தை ஒன்று அடித்துத் துன்புறுத்தப் பட்டதாக மாநில மனித உரிமைக் கமிஷனிடம் பதிவாகியுள்ள புகார்.

● **வீ. முத்தையா, திருநெல்வேலி**

? பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வது சமூகநீதிக் கொள்கைக்கு எதிரானது என்கிறாரே ராமதாஸ்?

! ஈசன் படைப்பில் இல்லாவிட்டாலும் மனித சமுதாயத்தில் இருக்கிறது ஏழை ஜாதி... எல்லா ஜாதிகளிலும் இருக்கின்றனர் ஏழைகள். இவர்களுக்கு மட்டுமே உதவியோ சலுகையோ தரப்படுவதுதான் நியாயம்.

● **த. சந்திரசேகரன், திருச்சி - 3**

? சென்னை, அண்ணா நகர் டவர் பூங்காவில் காதல் ஜோடிகளின் சேட்டைகள் அதிகரித்து விடுகிறதாமே... இது பண்பாட்டுச் சீரழிவின் முதல் படியா...?

! கடற்கரையும் பூங்காக்களும் காதலுக்கு இடம் தரலாம். விபசாரத்துக்கு அல்ல... பின்னதைத் தவிர்க்க, விடிய விடிய நவீன மின் விளக்குகள் ஒளி சிந்தச் செய்தாலே போதும். போலீஸ் அராஜகம் தேவையில்லை.

● **ரேவதிப்ரியன், ஈரோடு**

? எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும் எஸ்மா சட்டத்தைப் பாயவைத்துள்ளதே தமிழக அரசு...?

! அதிலிருந்தே, அந்தச் சட்டம் எதேச்சதிகாரமானது, ஜனநாயகத்துக்கு முரணானது என்பது நிரூபணமாகிறதே...!

● **வி. பரமசிவம், சென்னை - 25**

? கூட்டாட்சித் தத்துவத்தில் கொடுத்துப் பெறுவது, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்கிறாரே எஸ்.எம். கிருஷ்ணா?

! நீ எனக்கு அவலை விட்டுக் கொடு; நான் உனக்கு உமியை விட்டுக் கொடுக்கிறேன்' என்று கூட்டாட்சி தத்துவத்துக்குப் புதிய விளக்கம் தருகிறார்.

''அண்டைநாட்டில் சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது மன்னா...''

''எப்படிச் சொல்கிறீர், அமைச்சரே!''

''அரண்மனை வாசல் ஆராய்ச்சி மணியில் நாக்கே இல்லை!''

- டிகே.சுப்பிரமணியன்



புலப் பஜார்!



இங்கிலாந்து கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஜியாஃப்ரி பாய்காட் ஒரு சிறந்த வர்ணனையாளராகப் பலரது பாராட்டு களைப் பெற்றவர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக இவரது விமர்சனக் குரலைக் கேட்கமுடியவில்லை. காரணம் இவரது தொண்டையைத் தாக்கிய புற்றுநோய்! சமீபத்தில் இவர் குணமாகி வருவதாகவும், விரைவிலேயே மீண்டும் வர்ணனைக் களத்தில் குதிக்கப்போகிறார் என்றும் செய்தி.


• யுக்தாமுகி

முன்னாள் உலக அழகிகளில் ஐஸ்வர்யா ராய்க்கு மட்டும்தான் செய்திகளில் இடமா? யுக்தாமுகியும் வித்தியாசமான ஒரு செய்தியில் இடம் பெற்றிருக்கிறார். 'டிவைன் லவ்' என்ற படத்தில் நடிக்கிறார். கோலிவுட் உட்பட சில திரைப் படங்களில் தலைகாட்டியிருக்கிறார். என்றாலும், டிவைன் லவ் ஒரு டாக்குமெண்டரி என்பதுதான் வித்தியாசம். அந்நாள் பிரபல ஓவியர் ராஜா ரவிவர்மாவின் மாடலாக இந்தப் படத்தில் இடம் பெறுகிறார் இவர்.

பேய்ப் படங்களைத் தயாரிப்பதில் தனி ஆர்வம் வந்திருக்கிறது ராம் கோபால் வர்மாவுக்கு. "யார் வேண்டுமானாலும் தங்கள் கற்பனையில் உதித்த பேய்க் கதையை எனக்கு அனுப்பலாம். சிறந்த ஐந்து கதைகளைத் தேர்ந்தெடுத்து திரைப்படமாக்கப் போகிறேன். ஒவ்வொரு கதைக்கும் ஒரு லட்சம் ரூபாய் அளிக்கத் தயார்" என்று அறிவித்திருக்கிறார்.

ஹஸ்லர் என்ற பத்திரிகையின் நிறுவனரான லாரி, அரசியல் விமர்சகரான அரியானா ஹஃப்பிங்டன், சினிமா நட்சத்திரமான தாமஸ் லாஃப்லின், சில்க் ஸ்மிதா போன்று புகழ்பெற்ற மேரி கேரி - இவர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை என்ன? கலிஃபோர்னியாவின் கவர்னர் பதவிக்கு டெர்மினேட்டர் புகழ் ஆர்னால்ட் ஸ்வார்ஸ்னெகருடன் போட்டியிடுகிறார்கள் இவர்கள். அக்டோபர் ஏழாம் தேதி தேர்தல் முடிவு தெரிந்துவிடும்.

மான்சூன் வெட்டிங், சலாம் பாம்பே, மிஸிஸிப்பி மசாலா போன்ற உலகப் புகழ் பெற்ற ஆங்கிலப் படங்களை இயக்கியவர் மீரா நாயர். "வானிடி ஃபேர்" அவர் இயக்கிக் கொண்டிருக்கும் படம். இதைத் தொடர்ந்து அவர் ஈடுபடப் போவது சினிமாவில் இல்லையாம். மான்சூன் வெட்டிங் திரைப்படத்தை ஒரு பிரம்மாண்டமான நாடகமாக 'பிராட்வே'யில் அரங்கேற்றப் போகிறாராம்.



• இடி அமீன்

தமது எட்டு வருட ஆட்சியில் சுமார் மூன்று லட்சம் பேரைக் கொன்ற இடி அமீன் சமீபத்தில் இறந்தார். 'இறுதிவரையில் தமது செயல்களுக்கு வருத்தம் கூடத் தெரிவிக்காமல், தாம் அடைக்கலமான சவுதி அரேபியாவில் சகல வசதிகளுடன் வாழ்ந்தாரே' என்று உகாண்டாவில் பலருக்கும் அதிருப்தி. இடி அமீனை உகாண்டாவில் புதைக்கலாம் - ஆனால் எந்த அரசு மரியாதையும் கிடையாது என்று கூறிவிட்டது உகாண்டா அரசு. இதற்குள் சவுதியிலேயே அவரைப் புதைத்துவிட்டார்கள்.

- குல்ஹா

சிரித்து வாழவேண்டும்-5

சுபாஷ் நாகேஸ்வரா!

"அடுத்து என்ன திட்டம்?" என்று என் அப்பா கிருஷ்ணா ராவ் கேட்க, நான், "நீங்க தான் அடிக்கடி சொல்லுவீங்களே! அதேபோல உருப்படாமப்போக வேண்டியதுதான்!" என்று யதார்த்தமான தொனியில் பதில் சொல்லிவிட்டாலும், என் நோக்கம் என் அப்பாவை அவமானப்படுத்த வேண்டும் என்பது இல்லை.

அடுத்தடுத்து மூணு தடவை அம்மை போட்டு நான் பரீட்சை எழுத முடியாமல் போனது, எனக்குள்ளே எதிர்காலம் குறித்து ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அதுமட்டுமில்லாமல், அந்த அம்மை, அழகான என்னை, அலங்கோலப்படுத்தி விட்டதில், விரக்தியை ஏற்படுத்திவிட்டது. அவற்றின் வெளிப்பாடுதான் இப்படி விட்டேத்தியான ஒரு பதில்.

ஆனால் என் பதில், என் அப்பாவுக்குக் கோபத்தை ஏற்படுத்தவில்லை. "சொந்தக் காலில் நின்று, உனக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உன்னால் முடியுமா? என்று கேட்டார்.

"என் கல்வித் தகுதிக்கு, எனக்கு என்ன வேலை கிடைக்கும்? அப்படியே, நான் ஏதாவது ஒரு வேலைக்கு அப்ளிகேஷன் போட்டு, அதையும் பரிசீலனை செய்து, என்னை இன்டர்வியூவுக்குக் கூப்பிடுகிறவர்கள், என் முகத்தைப் பார்த்த பிறகும் அந்த வேலைக்கு என்னைத் தேர்ந்தெடுப்பார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. அதையும் தவிர, வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை. அதற்குக் கூட, வீட்டில் இருக்கிற நீங்கள் எல்லோருமே, என்னைக் கொஞ்சம் தள்ளி வைத்திருப்பது போல நான் உணர்கிறேன். நீங்கள் விலகி விலகிப் போகிறபோது, நான் உங்களிடம் நெருங்கி ஒட்டிக் கொள்ள மனசு இடம் தரவில்லை" என்று என் மனசுக்குள் இருந்த குமைச்சலைக் கொட்டித் தீர்த்தேன்.

அந்தத் தருணத்தில் எனக்குள்ளே ஒரு வேகம் வந்தது. "இந்தக் கணமே இந்த வீட்டை விட்டு வெளியேறு" என்று உள் மனம் சொன்னது. வேஷ்டி, சட்டை மாற்றிக் கொண்டேன்.


அம்மாவிடம் போனேன். "நான் போகிறேன். எங்கே போகிறேன்? எதற்காகப் போகிறேன்? எப்போ திரும்பி வருவேன்? என்றெல்லாம் கேட்காதீர்கள்! ஏனென்றால் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் என்னிடம் பதில் கிடையாது.

ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் திரும்பி வருவேன். கண்டிப்பாக, நல்லபடியாகத் திரும்பி வருவேன்" என்று சொல்லிவிட்டு, அம்மாவையே ஆழமாகப் பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்றேன்.

அப்போது அவர் கன்னடத்தில் சொன்ன

✱ படம் : யோக





• படம் நன்றி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

நாகேஷ்

வார்த்தைகள், இன்றைக்கும் கூட என் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றன. "நாகேஸ்வரா! வெளி உலகத்துக்குப் போய்விட்டால், பலவிதமான மனிதர்களை நீ சந்திக்க வேண்டியிருக்கும். அவர்கள் தம் வார்த்தைகளால், உன்னைக் கோபப்படுத்தலாம். உனக்குக் கோபம் வந்து விட்டது என்றால், அவர்கள் ஜெயித்து விட்டதாக அர்த்தம். ஆனால், எப்பவுமே நீதான் ஜெயிக்கணும் என்பது என்னோட ஆசை" என்றார்.

என்ன வார்த்தைகள்! நான் வாழ்க்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று மாபெரும் ஞானி ஒருவர் சொன்ன ஆலோசனைக்கு ஈடான வார்த்தைகள்! சொல்லி முடித்தபோது, அவரது கண்களில் ஈரம் கசிவதையும் நான் கவனித்தேன்.

வீட்டை விட்டுப் புறப்பட்டேன். "டேய்...டேய்..." என்ற அம்மாவின் குரல் என் காதில் விழுந்தது. ஆனால் அவரது குரல் என்னுடைய முடிவைத் தடுத்து நிறுத்தவில்லை. வீட்டை விட்டுக் கிளம்பி விட்டேனே யொழிய, கையில் காலணா கிடையாது. அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன வழி என்பது தெரியாது.

உள்ளூரிலேயே சில நாட்கள் சுற்றிக் கொண்டிருந்தேன். 'யாரிடம் போய் வேலை கேட்பது? என்ன சொல்லி வேலை கேட்பது? நம்ம மூஞ்சிக்கு யார் வேலை கொடுப்பார்கள்?' என்றெல்லாம் குழப்பம். பசி வயிற்றைக் கிள்ளியது. என்ன செய்வது என்று யோசித்தேன்.

ஊரில் ஓரிடத்தில் இலவசமாய் ஒருவர் சாப்பாடு போடுவார். அங்கே போய் சாப்பிடலாம் என்று போனேன். சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் உட்கார்ந்து கொண்டேன். சாப்பிட்டேன். "வீட்டை விட்டு, வீறாப்பாக வெளியேறி விட்டு, இப்படி ஓசியில் உட்கார்ந்து சாப்பிடுகிறாயே?" என்று என் மனத்துக்குள் ஒருவிதக் குற்ற உணர்வு ஏற்பட்டது உண்மை. ஆனால், அன்றைய தினம், என் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள வேறு வழி எனக்குத் தெரியவில்லை. இப்படியே

இரண்டு, மூன்று நாட்கள் இலவசச் சாப்பாட்டில் வயிற்றைக் கழுவினேன்.

'நாலு காசு சம்பாதித்து, அதில் சாப்பிட வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?' என்ற கேள்வி என் மனதைக் குடைந்தெடுத்தது. யோசித்தபடியே, சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் பக்கம் போனபோது, கால் வலிக்குச் சற்று இளைப்பாறலாம் என்று எண்ணி, ஒரு மரத்தடியில் உட்கார்ந்தேன்.

ஒரு வயதான ஆசாமி, தயங்கித் தயங்கி என்னிடம் வந்து, 'ஐயா! ஒரு மனு எழுதித் தரணும், எனக்கு எழுதத் தெரியாது. கொஞ்சம் எழுதித் தந்தீங்கன்னா மவராசனா இருப்பீங்க" என்றார் பணிவான குரலில்.

'என்ன விஷயம்' என்று கேட்டுக் கொண்டேன். அவர் கையோடு கொண்டு வந்திருந்த பழுப்பு நிறக் காகிதத்தில் அவரது மனுவை எழுதிக் கொடுத்தேன். நன்றி சொல்லி மறுபடியும் என்னை மனசார வாழ்த்திவிட்டு, தம் இடுப்பில் கட்டியிருந்த வேட்டியின் முடிச்சை அவிழ்த்து, அதிலிருந்து கொஞ்சம் சில்லறையை எடுத்து என்னிடம் நீட்டினார். நான் நாகரிகம் கருதி முதலில் மறுத்தேன். அவர் வற்புறுத்தினார்.

என் வயிறு உத்தரவிட, 'சரி! காசை வாங்கிக் கொள்' என்றது மனது. கையை நீட்டி, அவர் கொடுத்த சில்லறைகளை வாங்கிக் கொண்டேன். அவர் அந்த இடத்தைவிட்டு அகலட்டும் என்று சில நிமிடங்கள் காத்திருந்தேன். அவர் சென்ற பின்னர் சில்லறைகளைக் கூட்டிப் பார்த்தேன். ஏறத்தாழ இரண்டு ரூபாய்! அட! கால் மணி நேர உழைப்புக்கு இரண்டு ரூபாய் சம்பளமா? "சபாஷ்! நாகேஸ்வரா! உனக்கும் பிழைக்க ஒரு வழிகாட்டிவிட்டான் ஆண்டவன்!" என்று என் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டேன்.

அன்று முதல், தினமும் காலை சப் - ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறக்கிற நேரத்தில் அங்கே போய் மரத்தடியில் உட்கார்ந்து விடுவேன். மனு எழுதித் தரச் சொல்லி ஐந்தாறு பேராவது வருவார்கள். தினம் பத்து, பன்னிரண்டு ரூபாய் தேறியது.

இதேபோல ஒரு பத்துப் பன்னிரண்டு நாட்கள் ஓட்டியிருப்பேன். வேலை போரடித்துவிட்டது. ஒவ்வொரு மனுவிலும், இன்ன ஊரைச் சேர்ந்த இன்னாரது பேரனும், இன்னாரது மகனுமான இத்தனை வயதுடைய... இவர் என்று எழுதி எழுதி, எனக்கு ரொம்ப அலுத்துப் போய்விட்டது.

ஒரு நாள் காலை சற்றுத் துணிச்சலாய் சப் - ரிஜிஸ்திரார் ஆபீசுக்குள்ளேயே போய் விட்டேன். அங்கே சப்-ரிஜிஸ்திரார் அறையில் காற்றோட்டத்துக்காகத் தொங்கவிடப் பட்டிருந்த 'பங்கா'வை, ஒரு வயசானவர் உட்கார்ந்து ஆட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். சட்டென்று ஒரு ஐடியா வந்தது.

அந்த பங்கா ஆட்டும் ஆசாமியிடம் சென்று, 'கொஞ்சம் நகர்ந்து கொள்ளுங்கள்' என்று சற்றே அதிகாரத் தோரணையில் சொல்லி விட்டு, நானே பங்காவை ஆட்ட ஆரம்பித்தேன். இள வயசல்லவா? பங்காவை நான் வேகமாய் ஆட்ட, காற்றோட்டத்தில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்து, ரிஜிஸ்திரார் குரல் கொடுத்தார்.

நான் அவர் முன்னால் போய் நின்றேன். 'நீ யாரு! புதுசா இருக்கே?" என்றார். "வேலை கிடைக்கவில்லை, பங்கா ஆட்டலாமே என்று நினைத்து, ஆட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றேன். உடனே அவர், "பங்கா ஆட்டுவதற்கென்று அரசாங்கமே ஒருவரை வேலைக்கு வைத்திருக்கு. நீ போகலாம்!" என்றார்.

சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் வேலைக்கு வாய்ப்பில்லை என்று தீர்மானித்து, வெளியே வந்த எனக்கு, தாலுகா ஆபிஸுக்குப் போய் முயற்சி செய்தால் என்ன என்று தோன்றியது.

அங்கே நடந்த கலாட்டா.......! அடுத்த வாரம்.

(தொடர்ந்து சிரிப்பேன்)

"என்னப்பா யோசனை?"

"'அந்த காண்டாமிருகம் வந்தா உள்ளே விடாதே'ன்னு அரசியார் என்னிடம் சொன்னது உங்களையா அல்லது வேற யாரையுமான்னுதான் அரசே!"

- உ. ராஜாஜி



வட்ட மேஜை

யார் தாண்டினால் என்ன?

✉ பா.ஜ.கவுக்கும், தி.மு.க.வுக்கும் உரசல் என்று ஆகிவிட்டபின், லட்சுமண ரேகையை யார் தாண்டினால் என்ன, சங்கதி ஒன்றுதானே?

கும்பகோணம், புலவர் எஸ்.கே.மூர்த்தி.

✉ தலையங்கத்தில் காங்கிரசுக்கு இவ்வளவு அழகாகச் சொல்லியும் அவர்கள் விழித்துக் கொள்ளவில்லை என்றால் தங்கத் தாம்பாளத்தில் வைத்து ஆட்சியை மீண்டும் ''ஹிந்துத்வாவுக்கு'' தாரைவார்த்த பாவத்துக்கு ஆளாகிவிடுவார்கள்.

திருநெல்வேலி-11,
ராதா ராமஸ்வாமி.



✉ அப்துல் கலாம் பர்சனல் பேட்டி படித்தேன். குடியரசுத் தலைவரின் ஒவ்வொரு பதிலும் ஒவ்வொருவருக்கும் நல்லதொரு ஆலோசனையும், அறிவுரையும் கூறும் விதத்தில் அமைந்திருந்தது!

லால்குடி,
எம். இராஜேந்திரன்.

✉ நூறு ரூபாய் தர்மம் செய்துவிட்டு ஆயிரம் ரூபாய்க்கு போஸ்டர் அடித்துப் பெருமைப் பட்டுக் கொள்ளும் இக்காலத்தில், சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கை வீட்டுக்கும், இரண்டு பங்கை பொதுச் சேவைக்கும் செலவிடும் 'மாவடியான்' மரியாதைக்குரியவர்.

அம்மனூர், இரா. சம்புலிங்கம்.

✉ தமிழக பா.ஜ.க. தலைவர் தமது பேட்டியில் எந்தவிதமான ஆதாரமும் முகாந்திரமும் இன்றி அவதூறு சேற்றினை அள்ளி வீசியுள்ளார்.

சட்டமன்றம் நடைபெறுகின்ற வேளைகளில் வெளிநடப்புச் செய்வது குறித்தும், மக்கள் பிரச்னைகளுக்காக ஒருமித்துப் பேசுவது குறித்தும் மற்ற நடைமுறைகள் குறித்தும் திமுக. சட்டமன்ற கொறடா என்ற முறையில் பா.ஜ.க. சட்டமன்றத் தலைவர் இலட்சுமணனிடம் நான் நேரில் சென்று ஒவ்வொரு முறையும் தெரிவித்துள்ளேன். எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர், துணைத் தலைவர் துரை முருகன், ஆகியோருடன் பல பிரச்னைகள் குறித்து கலந்து பேச பலமுறை நேரில் சென்று அழைத்தும் வருவதில்லை பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள்.

தலைவர் கலைஞர் கூட்டணி தர்மத்தைக் காப்பதில் தலைமையானவர். ராதாகிருஷ்ணன் பேசிய முறைதான் கூட்டணி அதர்மம்!

கடலூர், இள.புகழேந்தி,
(தி.மு.க. சட்டமன்றக் கொறடா)

நாணல் மனம்!

✉ காதலும், போராட்டமும் ஒருவரின் வாழ்க்கையை எப்படிப் புரட்டிப் போட்டு விடுகிறது என்பதை சோகத்துடன் சொன்னது நாணல் மனம். மாசிலாஷும், கண்மணியும் நெஞ்சை விட்டு மறைய, சிறிது காலம் ஆகும்.


சென்னை - 61, என். சுஜாதா.

✉ 'நாணல் மனம்' கதை, மண் மணத்துடன் மனத்தையும் கனக்கச் செய்தது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாசிலான் – கண்மணியின் உள்ளன்பும், உண்மையும், உழைப்பும் எல்லோரும் பின்பற்றத்தக்கவை.

திருநெல்வேலி, வி. திலகம்.

✉ 'நாணல் மனம்' படைப்பாளியின் பெயரைப் போன்றே அழகியலுடன் கிராமப் புறத் தாம்பத்யத்தை, அவர்கள் வறுமையை, வளமையுடன் எதிர்கொள்ளும் விதத்தை, யதார்த்தமாக வெளிக் கொணர்ந்திருந்தது!

நெய்வேலி, சு. ஸ்ரீகாந்த்.


ஜில்லு மல்லு
—கதிர்
"என்னடா இத்தனை கோக் பாட்டில்.... பேப்பர், டீ.வியெல்லாம் பாக்கறதே இல்லையா?
ஏய் இது காலி பாட்டில்.... ரூபாய்க்கு இரண்டுன்னு வித்தான். வாங்கிட்டேன்.
அப்ப நீ குடிக்கறதுக்காக வாங்கல?
நான், வெஜி டேரியன்னு உனக்கு தெரியாதா?
காலிபாட்டில்ல மெட்ரோ வாட்டர் புடிச்சி வைக்கப்போறியா...?
மெட்ரோ வாட்டரா...! அத குடிக்கணும்னா வீட்டுக்குள்ள சின்ன சுத்திகரிப்பு ஆலையே வேணுமே...
என்ன இருந்தாலும் கோக் குடிக்கிற சுகமே தனிடா...
...அதைக் கொதிக்க வச்சா என்னென்ன 'பை ப்ராடக்ட்' கிடைக்கும்னு எனக்குத் தானே தெரியும்.
உங்களையெல்லாம் திருத்தவே முடியாது..
பின்ன எததாண்டா குடிக்கச் சொல்றே...?
கோக்க விடுங்கோ... கோக்கனட்டைக் குடியுங்கோ.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka